# கீதை மந்திரம் குறள்

## ஓர் ஒப்பீட்டாய்வு



*Tharsha*

தமிழறிஞர் கே. வி. குணசேகரம்

## என்னுரை

**2**023ஆம் ஆண்டு வைகாசி மாதம் எனது வீட்டுக்கு வந்த ஒரு தொலைக்காட்சி நிறுவனம் திருமந்திரத்தை ஆயத்தம் செய்து புதிய கோணத்தில் சொல்லுமாறு கேட்டுக் கொண்டனர். திருமந்திரத்தைப் பற்றி இருபதிற்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளேன். திருக்குறள் பற்றி நாற்பதுக்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளேன். ஆயிரம் குறள்களுக்குக் கபிற்ரல் ரீவிக்குக் கதை சொல்லியுள்ளேன். பகவத்கீதை பற்றி ஐந்து நூல்களை எழுதியுள்ளேன். அதனால் அம் மூன்று நூல்களையும் ஒப்பீட்டாய்வு செய்யலாம் என்று நினைத்து ஆய்வை மேற்கொண்டேன்.

**எ**ன்னிடம் வந்த தொலைக்காட்சி நிறுவனத்தினர் மூன்று மாதங்கள் கழித்தும் வரவில்லை. அதனால் வழக்கம்போல அதை ஒரு நூலாக்கியுள்ளேன். சுமார் 200 நூல்கள் எனது இணையமான www. GUNASEGARAM.com இல் உண்டு. இதையும் இப்போது சேர்த்துள்ளேன் வாய்ப்பேச்சைக் கேட்டதும் மறந்துவிடுவார்கள். நூலானால் ஆய்வுக்குட்படும். மூன்று நூல்களைப் பற்றியும் சிலர் தனித்தனியாக ஆராய்ந்துள்ளனர். மூன்றையும் சேர்த்து ஆராயவில்லை. இது ஒரு முழுமையான ஆய்வல்ல. திரும்பவும் ஆய்வு செய்து கொண்டிருக்கிறேன். நீக்க வேண்டியவற்றை நீக்கி, சேர்க்க வேண்டியவற்றை சேர்த்து பின்னர் வெளியிடுவேன். யாராவது விமர்சித்தால் நல்லது. ஆனால் யாரும் விமர்சிக்கமாட்டார்கள்.

**நா**ன் கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் 15 வருடங்கள் அதிபராக கடமையாற்றியபோது 150 வருடங்களாக விளையாட்டு மைதானம் இல்லாதிருந்த பாடசாலைக்கு விளையாட்டு மைதானத்தை வாங்கினேன். யாரும் ஒரு சதம் கூடத்தரவில்லை. பாடசாலைக்குத் தொடர்பில்லாத பலர் பணம் தந்துதவினர். நான் இடமாற்றம் பெற்றுச் சென்றபோது 15 வருட காலமாக நான் நம்பியிருந்த திருமதி சாந்தினி வாகீசனிடம் பாடசாலையை ஒப்படைத்துச் சென்றேன். அவர் பத்து வருடங்கள் அதிபராகக் கடமையாற்றினார். ஆனால் மைதானத்திற்கு எனது பெயரைச் சூட்டவில்லை. அதைவிடப் பல மோசமான செயல்களைச் செய்தார். நம்பியவரை ஏமாற்றுவது பெரும் துரோகம். கடவுள் அதற்கான தண்டனையை அளிக்கட்டும். 60 நூல்களை வெளியிட்டேன். திருவாவடுதுறை ஆதீனம் எனது நூல்களைச் சிறந்த நூல்களென்று விமர்சித்தபோதும் இங்குள்ளவர்கள் அதைச் சட்டை செய்யவில்லை. இரண்டு விடயங்களும் என்னைத் துன்பப்படுத்துகின்றன. அதனால் இவ்விரண்டு விடயங்களையும் எல்லா நூல்களிலும் எழுதிவருகிறேன். உலகத்தவர்களுக்கு இது புரிந்தால் போதும். எனக்கு மன அமைதி கிடைக்கும் . விரைவில் மீண்டும் சந்திப்போம். இந்நூலை மிக கவனத்துடன் கணணிமயப்படுத்தி உதவிய யோகநாதன் தர்ஜினி அவர்களுக்கு எனது நன்றியை தெரித்துக்கொள்கிறேன்.

அன்புடன்
கே.வி. குணசேகரம்
கோட்டக்கல்விப் பணிப்பாயர்,
ஓய்வு

**01**

**உ**லகில் பல மதங்கள் உள்ளன. பெரும்பாலான மதங்களுக்கு சாத்திர நூல்கள் உண்டு. சாத்திரம் என்பது அந்தந்த மதங்களின் கடவுள்க் கோட்பாட்டையும், அந்தந்த மதக் கடவுள்களது அருள் நிலையையும் கூறுவதாகும். பெரும்பான்மையான மதங்களுக்குச் சாத்திர நூல்கள் உண்டு. ஆனால் இந்து மதத்திற்குப் பல சாத்திர நூல்கள் உண்டு. பகவத்கீதை, திருமந்திரம், சிவஞானபோதம், மெய்கண்ட சாத்திர நூல்கள் என கூறிக்கொண்டே போகலாம். அந்தவகையில் தற்போது திருக்குறளையும் சேர்க்க வேண்டியுள்ளது. பகவத்கீதையும், திருமந்திரமும் சொல்வதையே திருக்குறளும் சொல்கிறது. கீதை வாழ்க்கைக்குரிய கோட்பாடுகளை அரசர்களுக்குக் கூறுகிறது. அதனால் அரசர்கள் ஒழுக்கமானவர்களாகவும், நீதியானவர்களாகவும் வாழ்வர் என்று கூறுகிறது. ஆனால் திருமந்திரமும், திருக்குறளும் மக்களுக்கு அறநீதிக் கருத்துக்களை உபதேசித்து ஒவ்வொருவரும் அறவானாகவும், நீதிமானாகவும் வாழவேண்டும் என்று கூறுகிறது.

**கீ**தை கடவுள் மனிதனுக்கு உபதேசித்தது. கடவுள் மனிதனாக அவதாரம் எடுத்து அரசனுக்கு உபதேசிக்கிறார். உபதேசிப்பவர் கடவுள் என்றபோதும் அவ் உபதேசத்தைக் கேட்கும் அரிச்சுனன் உபதேசிக்கும் கடவுளான கிருஷ்ணனின் இரத்த உறவினன். அத்துடன் அரசன். அரசன் அக்காலத்தில் கடவுளாகவே மதிக்கப்பட்டான். அவன் வாழும் அரசமாளிகையைக் கோவில் என்றே அழைத்தனர். அவ்வாறு நோக்குமிடத்துக் கடவுள் கடவுளுக்கு உபதேசித்ததாகவும் கூறலாம். இதுபோலச் சிவபெருமானுக்கு முருகன் பிரணவமந்திரத்தை உபதேசித்துள்ளார்.

**ம**காபாரதக் கதையில் தான் பகவத்கீதை உபதேசிக்கப்படுகிறது. பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் பகை முற்றிப் போராக உருவாகிய போது போர்க்களத்தில் போர் செய்ய இரு பகுதியினரும் கூடிநின்ற போது அரிச்சுனன் தன்னுடன் போர் புரிய வந்தவர்கள் யாரென்று பார்ப்பதற்காகத் தேரை எதிரிகளின் படைகளுக்கு முன் கொண்டு சென்று நிறுத்துமாறு கூறத் தேர்ச்சாரதியான கிருஷ்ணன் அரிச்சுனனின் வேண்டுகோளின் படி தேரை எதிரிகளின் படைகளுக்கு முன் கொண்டு சென்று நிறுத்துகிறான். அவர்களைக் கண்டதும் அரிச்சுனனின் மனம் அல்லற்படுகிறது. தனக்கு வித்தைகளைக் கற்றுத் தந்த ஆசிரியர்களையும், தனது உறவினர்களையும், நண்பர்களையும், பெரியோர்களையும் கொன்று தான் நான் ஆட்சியைக் கைப்பற்ற வேண்டுமானால் அவ்வாட்சி எனக்குத் தேவையில்லை என்று நினைத்துப் போர்க்களத்தை விட்டு வெளியேற நினைக்கிறான்.

**அ**தை உணர்ந்த கிருஷ்ணன் அவனுக்கு உண்மையான நிலையை கீதையை உபதேசித்து அகற்றுகிறான். கிருஷ்ணன் அறநீதிக் கருத்துக்களையே உபதேசித்தான். அப்படி உபதேசித்த உபதேசத்தை அவனே உபநிடதம் என்று கூறுகிறான். இது ஒருவன் தான் தான் மிக்க

ஒழுக்கமுள்ளவன், தான் தான் பணக்காரன், தான் தான் தலைவன் என்று கூறுவதை ஒக்கும். அதற்காக அதை உபநிடதம் அல்ல என்று கூறமுடியாது.

**அ**து போலத் திருவள்ளுவரும் திருக்குறளை ஒரு உபநிடதம் என்று கூறியிருக்கலாம். ஆனால் அவர் அவ்வாறு கூறாமைக்குக் காரணம் தானே தன்னைப்பற்றிக் கூறக்கூடாது என்பதற்காகவே அறநீதிக் கருத்துக்களைத் தான் உபநிடதம் என்கிறார்கள். பல்லாயிரம் வருடங்களுக்கு முன் எமது சமயப் பெரியவர்கள் கூறிய அறநீதிக் கருத்துக்களையே உபநிடதம் என்கிறோம். அதன்பின்பு வாழ்ந்த பெரியவர்கள், ஞானிகள், கற்றவர்கள் புதிதாக எவற்றையும் கூறவில்லை. முன்பு வாழ்ந்தோர் சொன்னவற்றையே சொன்னனர். சொற்களை மாற்றிச் சொன்னனர். அதனால் புதிதாக எந்த ஒரு உபநிடதமும் உருவாகவில்லை.

**வ**ள்ளுவர் புதிய ஒரு இலக்கிய வடிவத்தை உருவாக்கி அறநீதிக் கருத்துக்களைப் புதிய வடிவில் கூறியுள்ளார். காலத்திற்குக் காலம் உணவு, உடைகளின் உருவம் மாறுபாடு அடைவதைப்போல இலக்கிய வடிவமும் மாற்றமடைகிறது இது காலத்தின் கோலம்.

**தி**ருமந்திரத்திலும் ஏராளமான அறநீதிக் கருத்துக்கள் உள்ளன. உபநிடதங்கள் கூறுபவை அனைத்தையும் திருக்குறளைப் போலத் திருமந்திரமும் கூறுகிறது. திருக்குறளின் கடவுள் வாழ்த்தான. ஒன்பதாவது குறளில்,

“கோள்இல் பொறியில் குணம் இலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை”

**உ**யிர்களுக்கு கோள்களாலும் (நவக்கிரகங்கள்) ஐம்புலன்களாலும் ஏற்படுகின்ற துன்பங்களை நீக்குகின்ற எண்குணங்களை உடைய சிவபெருமானை வணங்காதவர்களின் தலை பயனில்லாதது என்கிறார் வள்ளுவர்.

**தி**ருமந்திரம் ஐம்பது பாடல்களில் கடவுள் வாழ்த்தைக் கூறுகிறது. அதைவிட ஏனைய எல்லாப் பாடல்களிலும் சிவனின் பெருமைகளைக் கூறுகிறது. அவ்வாறு கூறும்போது சிவபெருமான் எண்குணங்களை உடையவன் என்று பல பாடல்கள் கூறுகின்றன. திருமூலர் ஒரு விடயத்தைப் பலமுறை கூறுகிறார். ஆனால் வள்ளுவர் ஒருமுறை கூறியதை மறுமுறை கூறுவதில்லை.

**கீ**தையைப் போலவே குறளும் அறநீதிக் கருத்துக்களையே கூறுகிறது. அத்துடன் காமத்தைப் பற்றியும் விரிவாகக் கூறுகிறது. இந்து சமயத்தைப் பொறுத்தவரையில் காமம் பாவமானதல்ல. அது ஒரு மேலான ஞானம் என்று கூறுவதோடு காமச் சிற்பங்களைக் கோவில் கோபுரங்களில் பதித்துள்ளது. சுவர்களில் அவற்றைச் சித்திரங்களாக வரைந்துள்ளது. சிற்பங்கள் ஆபாசமாக இருந்த போதும் அதை

ஞானிகளில் இருந்து சிவனடியார்கள் வரை புனிதமான சிற்பங்களாகவே கருதுகின்றனர். கைகூப்பித் தொழுகின்றனர். விகார உணர்வுடன் யாரும் பார்ப்பதில்லை.

**கோ**வில்களிலும், மங்கல, அமங்கல வைபவங்களிலும் தேவார திருவாசகங்களைப் பாடும் போது தெரிந்தெடுத்த சில பாடல்களையே பாடுகின்றனர். மிகுதியை ஒதுக்கி வைத்துள்ளனர். காமத்தை ஞானமென ஏற்காதவர்கள் தேவார திருவாசகங்களை ஒதுக்கிவைப்பது போலக் காமத்துப் பாலையும் ஒதுக்கி வைக்கலாம்.

**ஒ**ரு புலவன் ஒரு நூலை எழுதும் போது தனது குலதெய்வத்தை வணங்கி அருள்பெற்று தான் எழுதும் நூல் நல்ல முறையில் எழுதிமுடிக்கப்பட வேண்டும் என எண்ணிக் கடவுளை வாழ்த்துவான் கடவுள் வாழ்த்து இல்லாத நூல் எவையும் இல்லை. சில புலவர்கள், விநாயகர், சிவன், சரஸ்வதியெனப் பல கடவுள்களை வணங்கி அவர்களை வாழ்த்திப் பாடிவிட்டே தான் எழுத நினைத்தவற்றை எழுதுவர். சில புலவர்கள் ஒரு தெய்வத்தின் மீது தான் வாழ்த்துப் பாடுவர். கடவுள் வாழ்த்து எல்லா நூல்களிலும் ஒரு மாதிரியாகவே இருக்கும். ஆனால் திருக்குறளும், பகவத்கீதையும் கடவுள் வாழ்த்திலும் வேறுபடுகின்றன.

**ப**கவத்கீதை மற்ற நூல்களை விட மாறுபாடுடையதாகவும், வேறுபட்டதாகவும் இருக்கிறது. பகவத்கீதையில் கடவுள்வாழ்த்து இல்லை. அதற்குப் பதிலாக ஒன்பது தியான சுலோகங்கள் உள்ளன. அவை பகவத்கீதையின் பெருமைகளையே கூறுகின்றன. அத்துடன் பகவத்கீதையைத் தெய்வம் என்று கூறுகின்றன. அதன்படி முதலாவது சுலோகம் இவ்வாறு கூறுகிறது.

**ஓ**ம், தாயே நீ பகவானான நாராயணனால் அருச்சுணனுக்கு உபதேசிக்கப்பட்டவள். பெருமுனிவரான வியாசரால் பாரதசாத்திரத்தில் இணைக்கப்பட்டவள். அமிர்தம் போன்றவள். பிறவிப்பிணியை நீக்கியருள்பவள். பதினெட்டு அதிகாரங்களைக் கொண்டவள். புனிதமானவளாக உன்னைத் தியானிக்கிறேன். அத்துடன் மகாபாரதம் என்ற ஞானதீபத்தை உருவாக்கிய வியாசரே உம்மை வணங்குகிறேன்.

**த**ன்னைச் சரணடைந்தவர்களுக்குக் கற்பகவிருட்சமாக இருப்பவனும், பசுக்களை மேய்ப்பதற்காகக் கையில் பிரம்பை வைத்திருப்பவனும், கீதை என்ற பெரும் அமிர்தத்தைக் கறந்தவனும் சின்முத்திரையைத் தாங்கியருப்பவனுமாகிய கிருஷ்ணனை வணங்குகிறேன்.

**உ**பநிடதங்கள் பசுக்களாகும். கிருஷ்ணன் அந்த உபநிடதங்கள் என்னும் பசுக்களில் இருந்து பால் கறப்பவன் அரிச்சுணன் பசுக்களின் கன்று. அதனால் கீதை என்ற அமிர்தம் ஒப்பற்ற பால். அதை அருந்துபவர்கள் ஒப்பற்ற பேரறிஞராவர்.

**வா**சுதேவரின் மகனும், கம்சனையும் சாணூரனையும் கொன்றவனும், தேவகிக்குப் பரமானந்தத்தைக் கொடுப்பவனுமான ஜகத்குருமகானாக தேவன் கிருஷ்ணனை வணங்குகிறேன்.

**கு**ருசேத்திரத்தில் பெருக்கெடுத்துப் பாயும் இரத்த ஆற்றுக்கு பீஷ்மரும் துரோணரும் கரைகளாவர். ஜயத்திரன் நீர், காந்தார மன்னன் நீலோத்பலம் என்னும் மலர். சல்லியன் சுறாமீன். கிருபன் பிரவாகம். கர்ணன் பேரலை. அசுவந்தாமனும், விகர்னனும் பயங்கரமான மகரமீன்கள். துரியோதனன் நீர்ச்சுழல். கிருஷ்ணன் அனைவரையும் ஏற்றிச் செல்லும் படகின் ஓட்டி. கிருஷ்ணனின் உதவியோடு பாண்டவர்கள் அந்தப் பேராற்றைக் கடக்கிறார்கள்.

**உ**லகத்தில் உள்ள நல்லோர் என்ற தேன்வண்டுகளால் தினமும் மிக்க மகிழ்வுடன் அருந்தும் கீதை என்ற அமிர்தமான தேன் மகாபாரதம் என்ற ஒப்பற்ற மகாகாவியத்துள் கலக்கப்பட்டுள்ளது. இது கலியின் தோசங்களை நீக்க விரும்புவோர்க்கு மருந்து போன்று நலங்களைக் கொடுக்கும்.

**யா**ருடைய அருளரனது ஊமைகளைப் பேசவைக்கிறதோ, அந்த பெரும் சக்தி படைத்த பரமானந்தத்தைத் தரும் மாதவனை நான் வணங்குகிறேன்.

**பி**ரம்மா, வருணன், இந்திரன், உருத்திரன், மருத்தேவதைகள் எல்லோரும் யாரைத் திவ்வியமான மந்திரங்களை ஜெபித்துத் துதிக்கிறார்களோ, சாமகானம் பாடுகின்றவர்கள் யாரை அருள்தருவார் என்று எண்ணி பாடுகின்றனரோ யோகிகளும், முனிவர்களும் யாரை எண்ணித் தவஞ் செய்கிறார்களோ, சுர, அசுரக் கூட்டங்கள் யாரின் பெருமைகளை உணர்கிறார்களில்லையோ அந்தத் தெய்வத்திற்கு வணக்கம்.

**இ**வ்வாறு தியான சுலோகங்கள் பகவத்கீதையையும் கிருஷ்ணனையும் தெய்வமாகப் போற்றும்படி பகவத்கீதையை வாசிப்பவர்களுக்குக் கூறுகின்றன. பகவத்கீதையைக் கடவுள் உபதேசித்தமையால் கடவுள் வாழ்த்துப் பாடப்படவில்லை. பகவத்கீதையைப் படிப்போர் தான் பகவத்கீதையையும், கிருஷ்ணனையும் வணங்கிய பின்பே படிக்க வேண்டும் என்று கூறப்படுகிறது.

**ஏ**னைய நூல்கள் கடவுளின் அருளை வேண்டிக் கடவுள் வாழ்த்தைப் பாட வள்ளுவர் எழுத்துக்களுக்கெல்லாம் 'அ' என்ற எழுத்து முதலாக உள்ளது போல உலகிற்குச் சூரியன் முதன்மையாக உள்ளான் என்கிறார். உரையாசிரியர் ஆதிபகவன் என்பது கடவுள் என்கிறார். புராணங்கள் ஆதிபகவன் சூரியன் என்கின்றன. அதை நான் விபரமாக திருமந்திரமே திருக்குறள் என்ற நூலில் விரிவாக எழுதியுள்ளேன்.

**க**டவுளின் புனிதமான திருவடியை வணங்காதவன் கற்ற கல்வியால் பலனேற்படாது என்று வள்ளுவர் கூறுவதாக உரையாசிரியர் சொன்ன போதும், வள்ளுவர் வாழ்ந்த காலத்தில் புலவர்கள் சங்கம் அமைத்துத் தமிழை வளர்த்ததாகத் தமிழர்கள் பெருமைப்படுகிறார்கள். ஆனால் புலவர்கள் சங்கமமைத்து

ஒவ்வொரு புலவரும் தாம் தாம் அறிவாளியெனச் சண்டையிட்டனர். அதனால் வள்ளுவர் கற்றவர்கள், கற்றவர்களை மதிக்காவிட்டால் அவர்கள் கற்ற கல்வியால் பயன் இல்லை என்கிறார்.

**அ**டுத்த குறள்களில் மலரின் மீது வீற்றிருக்கும் கடவுளின் திருவடியை நினைப்பவர்கள் உலகில் நெடுங்காலம் வாழ்வர் என்றும் விருப்பு வெறுப்பில்லாமல் கடவுளின் திருவடியை நினைப்பவர்களுக்கு வாழ்வில் எத்தகைய துன்பங்களும் உண்டாகாது என்றும், இவர்களுக்கு இருவினைகளும் தொடரமாட்டாது என்றும், ஐம்பொறிகளினால் உண்டாகும் ஆசைகளை நீக்கியவர்கள் நிலை பெற்று வாழ்வார்கள் என்றும், கடவுளின் பாதங்களை அடையாதவர்களால் மனக் கவலைகளை மாற்ற முடியாது என்றும், கடவுளின் திருவடியை அடையாதவர்களால் ஆசைகள் என்ற கடல்களைக் கடக்க முடியாது என்றும், கோள்கள் என்று சொல்லப்படுகின்ற நவக்கிரகங்களாலும், ஐம்புலன்களாலும் வருகின்ற கொடிய துன்பங்களை நீக்கும் வல்லமை பெற்ற எண்குணங்களை உடைய கடவுளான சிவருபெருமானை வணங்காத தலை பயனில்லாத தலை என்றும், இறைவனின் திருவடியை அடையாதவர்கள் தொடர்ந்து பிறந்து இறந்து பிறந்து இறந்து துன்பப்படுவர் என்றும் கூறுகிறார்.

**ப**கவத்கீதையைப் போலம் தான் திருக்குறளும், இறைவனின் பெருமைகளைக் கூறி அவனை அடைய வேண்டுமென்றும், அப்படி அடையாவிட்டால் துன்பங்கள், துயரங்கள், வேதனைகள்யாவும் வந்து துன்புறுத்தும் என்று கூறுகிறார். திருக்குறளும், பகவத்கீதையும் பற்றுக்களால் தான் ஒழுக்கக்கேடுகள் உண்டாகின்றன. ஒழுக்கக்கேடுகளால் வாழ்க்கையின் குறிக்கோள் மாறுகிறது என்று கூறுகின்றது.

**ப**கவத்கீதை, திருக்குறள் போலத் திருமந்திரமும் ஐம்பது பாடல்களில் சிவனது அருள் நிலை பற்றிக் கூறுகிறது. பழந்தமிழ்ப் புலவர்கள் ஏதோ ஒரு தமது தேவை கருதியே கடவுள்களை வணங்கினர். உதாரணமாகப் பழம்பெரும் புலவரான ஔவையார், விநாயகரை வணங்கி, ‘‘நான் உனக்கு பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் கலந்து தருகிறேன். நீ எனக்குச் சங்கத் தமிழ் மூன்றும் தா’’ என்று வேண்டுகின்றார். ஆனால் வள்ளுவரும் மூலரும் தமக்கு எதுவும் தேவையில் உனது அருள் மட்டும் போதும் என்கின்றனர். அதைவிடக் கீதையும், குறளும், திருமந்திரமும் படிப்போரை முதலில் கடவுளை வணங்கும் படி கூறுகின்றன.

**தி**ருமந்திரத்தின் முதலாவது கடவுள் வாழ்த்துப்பாடல் முழுமுதற் கடவுளான சிவபெருமானின் எண்குணங்களைக் குறித்துப் பாடியதேயாகும். அத்துடன் அவனது அருள் ‘சிவயநம’ என்னும் திருவைந்தெழுத்தாகும். சிவனது தொன்மை, அவனது வரலாறு, அவனது அருள்நிலை, அவனது பெருமை, அவன் செய்யும் தொழில்கள், அவன் ஆருயிர்களுடன் தொடர்பு கொண்ட விதம், அவன் ஆருயிரில் நிலைகொண்டிருக்கும் இடம், அவனது குணங்கள், அவனை அடையும் வழிகள் போன்றன கடவுள் வாழ்த்தில் கூறப்பட்டுள்ளன. திருமூலர் சொன்னதற்கு மேலாக இதுவரையாரும் சிவனைப் பற்றிச் சொன்னதில்லை.

**க**டவுள் வாழ்த்தில் சிவனது வடிவங்கள் பற்றியும் அவனது திருவிளையாடல்கள் பற்றியும், ஆருயிர்களுடன் அவன் கொண்டுள்ள உறவு பற்றியும், அவன் அணியும் மலர்கள், உடைகள், அணிகலன்கள் பற்றியும் கடவுள் வாழ்த்தில் திருமூலர் விபரமாகக் கூறுகிறார்.

**தி**ருவைந்தெழுத்தைக் கணிக்கும் முறைகள் பற்றியும், மாயை பற்றியும், உலகத் தோற்றம் பற்றியும், அவனை வழிபடும் முறைகள் பற்றியும், திருமுறைகளை ஓதும் முறைகள் பற்றியும் சிவபெருமானின் உருவங்கள் பற்றியும், அவனது உறுப்புக்களின் நிறங்கள் பற்றியும், அவனது கைகளில் உள்ள ஆயுதங்கள் பற்றியும், அவற்றின் பயன்பாடுகள் பற்றியும் விபரமாக மூலர் கூறுகிறார்.

**சி**வனது பல திருவிளையாடல்கள் கடவுள் வாழ்த்தில் இடம்பெற்றுள்ளன. அத்துடன் ஐந்தெழுத்தின், பெருமை, சிவன் ஐந்தெழுத்தை விரும்பும் முறைகள், ஆன்மாக்களது விதி, அந்த விதியின் படி தான் வாழ்வு என்ற உண்மை, ஐந்தொழில்களைச் செய்யும் போது சிவனின் தோற்ற மாறுபாடு, நிறமாறுபாடு என்பன மிகவும் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன. அத்துடன் தான் தினமும் சிவபெருமானை வழிபடும் முறைகள் பற்றியும் கடவுள் வாழ்த்தின் ஐம்பதாவது செய்யுளில் விரிவாகக் கூறுகிறார். அதன்படி சிவனடியார்கள் சிவனை வணங்கவேண்டும் என்றும் திருமூலர் விரும்புகிறார்.

**ஏ**னைய பழந்தமிழ் நூல்களை விட வித்தியாசமான முறையிலேயே இம்மூன்று நூல்களும் கடவுள் வாழ்த்தைக் கூறுகின்றன. அதபோலவே தாம் கூறவந்த கருத்துக்களையும் மாறுபட்ட நிலையில் கூறுகின்றன. பொதுவாக புலவர்கள் நூலை இயற்றுவது பிரசித்திபெற்ற கோவில்களில். முனிவர்கள் இயற்றுவது காட்டில். ஆனால் பகவத்கீதை போர்க்களத்திலும், திருமந்திரம் திருவாவடுதுறையிலும், திருக்குறள் வள்ளுவரது வீட்டிலும் இயற்றப்பட்டது.

**02**

**கை**லாயமலையில் சுந்தரநாதன் சீடர்களுடன் தவஞ்செய்து கொண்டிருந்தபோது சிவபெருமான் அவனை அழைத்து, ‘‘நீ பூவுலகம் சென்று சைவசித்தாந்தத்தைப் பரப்புவாயாக’’ என்று சொல்லத் திருமூலர் தனது சீடர்களுடன் முதல் முறை வந்து பூவுலகெங்கும் சென்று பார்வையிட்ட பின் கைலாயத்திற்குத் திரும்பினார். கயிலாயத்திற்குச் சென்று மூவாயிரம் ஆண்டுகள் தவஞ் செய்தபின் மீண்டும் தமிழ்நாட்டுக்கு வந்தார். அவர் பொதிகை மலைக்கு வரம்போது சாந்தனூரில் வரும்போது அங்கு மந்தைகளை மேய்த்த மூலன் என்பவன் இறந்துகிடந்தான். பசுக்கள் அவனைச் சுற்றி நின்று அழுதன. அதைக் கண்டு இரங்கிய சுந்தரநாதன் தனது உயிரை அவனது உடலில் செலுத்திவிட்டு தனது உடலை ஒரு மரப்பொந்தினுள் வைத்துவிட்டு மந்தைகளை ஓட்டிச் சென்று அதன் உரிமையாளர்களின் வீட்டில் விட்டு விட்டுத் திரும்பி வந்து பார்த்தபோது அவ்வுடலைக் காணாமையால் மூலனின் உடலோடு திருமூலர்

என்ற பெயருடன் திருவாவடுதுறை ஆதீனத்திற்கு வந்து தனது ஏழு சீடர்களுக்கும் திருமந்திரத்தை உபதேசித்தார்.

**தி**ருமூலர் வாழ்ந்த காலம் பற்றிப் பல்வேறுபட்ட கருத்துக்கள் உண்டு. இருப்பினும் இலக்கியச் சான்றுகளின் படி திருமூலர் கயிலாயத்தில் இருந்து புறப்பட்டு வரும் வழியில் மகாநதிக்கரையில் மகாபாரத யுத்தம் முடிவடைந்த பின் கிருஷ்ணன் ஒரு வேடனாற் கொல்லப்பட்டார். அந்த வேடன் கிருஷ்ணனது உடலை ஒரு சிதையில் வைத்துத் தீமூட்டிவிட்டு சென்றுவிட்டான். சென்றதும் பெரு மழை பொழிந்தது. அதனால் ஏற்பட்ட பெருவெள்ளப் பெருக்கில் எரிந்து கொண்டிருந்த சிதை அணைந்துவிட்டது. அரைகுறையாக எரிந்த நிலையில் இருந்த கிருஷ்ணனது உடல் பூமியில் சென்று ஒதுங்கியது. ஒதுங்கிய கிருஷ்ணனது உடலை அவ்வூரவர் கண்டு அது கிருஷ்ணனது உடலென உணர்ந்து அதை அடக்கம் செய்தனர். அதை நேரில் தான் கண்டதாகத் திருமூலர் திருமந்திரத்தில் கூறுகிறார். அந்த உடல் ஒதுங்கிய இடம் தற்போது ஜெகன்நாதம் என அழைக்கப்படுகிறது. இது நடைபெற்றது. கி.மு 3100 ஆம் ஆண்டு.

“இருக்குரு வாகிய எழில் வேதத்தினுள்ளே
உருக்குணர் வாயுணர் வேதத்துள் ஓங்கி
வெருக்குருவாகிய வேதியர் சொல்லும்
கருக்குருவாகிய கண்ணனுமாமே”

**இ**ராவணன் தமிழ்நாட்டை ஆண்டபோது அவனது கொடுமைகளைத் தாங்க முடியாத தமிழர்கள் ஆரியச் சக்கரவர்த்தியான தசரதனின் உதவியை நாடினர். தசரதன் இராமனை அனுப்பி இராவணனைக் கொன்ற பின் ஆரியர்கள் தமிழ்நாட்டிற்கு வந்தனர். அதனால் ஆரியமொழி தமிழ்மொழியோடு கலந்தது. பல கல்விமான்கள் ஆரிய மொழியைக் கற்றுப் பிரம்மரிஷிப் பட்டத்தைப் பெற்று ஆரியராக மாறினர்.

**தி**ருமூலர் தனது காலத்தில் வாழ்ந்தவர்களைப் பற்றியும், தனக்கு முன் வாழ்ந்தவர்களைப் பற்றியும் திருமந்திரப் பாடல்களில் கூறியள்ளார். அகத்தியர், திரிபுராதிகள், இராவணன், சலன் தலன், தக்கன், அந்தக அரக்கன், மார்க்கண்டேயர் ஆகியோரைப் பற்றிய குறிப்புக்கள் திருமந்திரத்தில் உண்டு. இவர்கள் திருமூலரின் காலத்திற்கு முந்தியவராவர். வசிட்டர் பதஞ்சலி முனிவருடனும், வியாக்கிரமருடனும் வாழ்ந்தவர். இவர்கள் ஏழுபேர். அந்த ஏழுபேரில் இராமனது குருவான வசிட்டரும் ஒருவர். வசிட்டரது தங்கையை மணந்தவர் வியாக்கிரமர். இவரது மகன் உபமன்னியு. உபமன்னியு வசிட்டரின் ஆச்சிரமத்தில் பிறந்து வளர்ந்தபோது காமதேனுவின் பாலைப் பருகியவன். உபமன்னியு பிள்ளைப் பருவத்தைக் கடந்ததும் உபமன்னியுவின் தந்தையான வியாக்கிரமர் வசிட்டரின் ஆச்சிரமத்திற்கு வந்து உபமன்னியுவையும் தாயையும் அழைத்துச் சென்றுவிட்டார். காமதேனுவின் பாலைக் குடித்த உபமன்னியுவுக்குப் பசுப்பால் பிடிக்கவில்லை. அதனால் சிவபெருமானை வழிபடச் சிவபெருமான்

பாற்கடலை உபமன்னியு வசிக்கும் ஆச்சிரமத்திற்குத் திருப்பிவிட்டதாகப் புராணங்கள் கூறுகின்றன. இத்தகவல் கோவில் புராணத்தில் உள்ளது.

**இ**ராம இராவண் யுத்தம் நடந்தபோதும், மகாபாரத யுத்தம் முடிவடைந்தபின் கிருஷ்ணன் துவாரகைக்குப் புறப்பட்டுச் செல்லும் போது வேடனால் கொல்லப்பட்ட போதும் அவற்றைத் திருமூலர் அறிந்திருந்தார். பாரதக் கதையில் தான் பகவத்கீதை உள்ளது. மகாபாரதத்தின் இருபத்தைந்தாவது அதிகாரத்தில் இருந்து நாற்பத்தியிரண்டாவது அதிகாரம் வரை உள்ளது. இதில் பதினெட்டு அதிகாரங்கள் உள்ளன. மகாபாரதக் கதை முன்பு எழுதப்பட்டதென்றும், அதன்பின் பகவத்கீதை சேர்க்கப்பட்டதென்றும் சிலர் கூறியுள்ளனர். ஆனால் அதற்குரிய சான்றுகளை யாரும் கூறவில்லை. பகவத்கீதைக்கும், மகாபாரதக் கதைக்கும் மொழிநடைப்பிலும், கருத்தமைப்பிலும் இரண்டும் ஒத்துள்ளன. மகாபாரதக் கதைக்குப் பகவத்கீதை இருதயமாக உள்ளதென்று ஞானிகள் கூறியுள்ளனர்.

**ப**கவத்கீதையைப் படிப்பதால் என்னென்ன நன்மைகள் உண்டாகுமெனக் கிருஷ்ணனும் பல ஞானிகளும் கூறியுள்ளனர். கிருஷ்ணர் பகவத்கீதையைப் பற்றி இவ்வாறு கூறுகிறார், ‘‘கீதையை நாள்தோறும் படித்து வந்தால் பிராப்தகர்மத்தில் ஒருவன் கட்டுண்டிருந்தாலும் அவன் முத்தனாவான். இவ்வுலக இன்பங்கள் அனைத்தையும் அவன் அனுபவிப்பான். கர்மங்கள் அவனைச் சாராது. அவனைப் பாவங்களும், மகாபாவங்களும் தீண்டாது. தாமரை இலையில் தண்ணீர் நிற்பதைப் போல அவன் இருப்பான்.

**கீ**தை என்ற புத்தகம் உள்ள இடங்களிலும், கீதாபாடம் நடைபெறும் இடங்களிலும் புண்ணிய தீர்த்தங்கள் யாவும் வந்துசேரும். அருள்நிலை விலகாதிருக்கும். அவ்விடத்திற்குத் தேவர்களும், ரிஷிகளும், நாரதரும், கோபாலர்களும், கோபிகளும், உத்தவரும், அவரின் கூட்டத்தினரும் வந்து சேர்ந்து ஆசீர்வதிப்பர். அந்த இடத்திற்கு நான் வந்து அங்குள்ளவர்களுக்கு வேண்டியவற்றை அருள்வேன்.

**கீ**தை தான் எனது இருப்பிடம் கீதையில் அமர்ந்திருந்து தான் நான் மூவுலகையும் பரிபாலிக்கிறேன் என்றும் பரமவித்தையாக இருப்பது கீதை. அது பிரம்மரூபம். உறுதியான மனதுடன் தினமும் பதினெட்டு அத்தியாயங்களையும் முறைப்படி ஓதுபவன் ஞான சித்தியடைந்து பின் பரமபதத்தை அடைவான். முழுவதையும் ஓத முடியாவிட்டால் எட்டு அதிகாரங்களை ஓதலாம். அவ்வாறு ஓதுபவன் கோ தானத்தால் உண்டாகும் புண்ணியத்தைப் பெறுவான்.

**ப**கவத்கீதையின் மூன்றில் ஒருபங்கை ஓதுபவன் கங்கையில் ஸ்நானம் செய்த பலனை அடைகிறான். மூன்று அதிகாரங்களை ஓதுபவன் சோமயாகப் பலனைப் பெறுவான். பக்தியுடன் தினமும் ஓர் அத்தியாயம் ஓதுபவன் ருத்திரலோகத்தை அடைந்து ருத்திரலோகக் கணங்களில் ஒருவனாகிறான்.

**ஒ**ரு அத்தியாயத்தை அல்லது ஒரு சுலோகத்தின் காற்பங்கைத் தினமும் படிப்பவன் ஒரு மன்வந்தரம் முடியும் வரையும் மானிடனாகப் பிறப்பெடுப்பான். கீதையை ஓதிக்கொண்டிருப்பவன் உத்தமமான

முத்தியை அடைகிறான். மரணமடையும் போது 'கீதை' என்று உச்சரித்துவிட்டு மரணமடைபவன் வீடுபேற்றை அடைவான்.

**பெ**ரும் பெரும் பாவங்களைச் செய்தவனும் கீதையைக் கேட்பதில் விருப்புடையவனாக இருந்தால் அவன் வைகுண்டத்திற்குச் சென்று விஷ்ணுவுடன் சேர்ந்திருப்பான். ஓயாது வேலைகளைச் செய்து கொண்டிருப்பவனும் கீதையை மனதுள் நினைத்துக் கொண்டிருந்தால் அவன் ஜீவன் முத்தனாகிறான். மரணத்தின் பின் அவன் பரமபதத்தை அடைகிறான். கீதையை வாசித்த பின்பு அதன் மகத்மியத்தைக் கட்டாயம் வாசித்தல் வேண்டும். வாசிக்காவிட்டால் எப்பயனும் கிடைக்காது.

### கீதா மாஹாத்மியம் சூதர் சொன்னது

**கீ**தா மாஹாத்மியத்தில் கூறப்பட்ட கருத்துக்கள் மிகைப்பட்டவைகளாகும். எனவே அவற்றை இருக்கிறபடி வாச்சியார்த்தம் பண்ணலாகாது. தாய் ஒருத்தி குழந்தைக்கு உணவூட்டுகிறாள் விளையாட்டில் நாட்டமுள்ள குழந்தை உணவை உண்ணமறுக்கிறது. உணவு உண்டால் தான் விளையாட்டுப் பொருட்களை வாங்கித் தருவேன் என்கிறாள் தாய். விளையாட்டுப் பொருட்களை விட முக்கியமானது உணவு. அதுபோல கீதா மாஹாத்மியம் விளையாட்டுப் பொருட்களில் ஆசைகாட்டிக் குழந்தைக்கு உணவு கொடுப்பது போல மனிதனுக்கு உதவுகிறது. இவ்வாறு குழந்தைக்கு ஊட்டப்படும் உணவு அதன் ஆரோக்கியத்திற்குக் காரணியாகிறது. இதபோலவே கீதா மாஹாத்மியமும் முத்திக்கு வழிவகுக்கிறது. உணவு நாளடைவில் நிறைஞானயோகமாக மாறி சாதகனுக்கு நன்மை செய்கிறது. அதன்மூலம் அவன் வாழும்போது பேரின்பமாக வாழ்ந்துவிட்டு பிறவிப் பெருங்கடலைத் தாண்டி பரமபதத்தை அடைகிறான்.

**ஒ**ரு நூலை இயற்றுபவர் அந்நூலை வாசிப்பதால் என்னென்ன நன்மைகள் உண்டாகும் என்று கூறுவதில்லை. ஆனால் பகவத்கீதையை உபதேசித்த கடவுளான கிருஷ்ணன் அதை வாசிப்பதனால் உண்டாகும் பயன்களை விரிவாகவும், விளக்கமாகவும் கூறியுள்ளார். அதனால் அடியார்கள் மிகுந்த நம்பிக்கையுடன் வாசிக்கின்றனர்.

**தி**ருமந்திரத்தில் திருமூலர் சிவனது பெருமைகளைப் பற்றி கடவுள் வாழ்த்தில் மட்டும் கூறவில்லை. தான் சொன்ன மூவாயிரம் பாடல்களிலும் சிவனைப்பற்றிச் சொல்லியுள்ளார். பெருமைமிக்க சிவனை வணங்குவதன் மூலம் உண்டாகும் பயன்களையும் விரிவாகக் கூறியுள்ளார். ஆனால் வள்ளுவர் குறள்களை எழுதினாரே தவிர வேறு எதையும் சொல்லவில்லை. கடவுள் வாழ்த்தில் முதலாவது குறளில் அவர் உலகிற்கு முதல்வன் ஆதிபகவன் என்று சொன்னதை உரையாசிரியர் கடவுள் என்று கூறியமை பொருந்தாது. புராணங்கள் ஆதிபகவன் சிவன் என்றும், சூரியனாகப் பிரகாசிப்பவரும் சிவன் என்றும் கூறுகின்றன. பல்வேறு சமயங்கள் உலகில் உள்ளன. அந்த மதங்களைப் பின்பற்றுவோர் தம்மைக் காத்து அருள் செய்வது கடவுள் என்று கூறாது தத்தமது தெய்வங்களையே கூறும் போது இங்கு ஏன்

கடவுள் என்று கூறப்பட்டதென்று புரியவில்லை. அத்துடன் இரண்டாயிரம் வருடங்களாக எந்தவித மறுப்பும் இன்றி இந்து சமயத்தினர் இக்கூற்றை ஏற்றது வியப்பை அளிக்கிறது.

**வ**ள்ளுவர் கடவுள் வாழ்த்தில் இறைவனின் குணங்களையும், அவனது அருள்நிலையையும், அவனை வணங்குவதால் உண்டாகும் பயன்களையும் சொல்கிறார். ஒன்பதாவது குறளில் இறைவன் எண்குணத்தவன் என்கிறார். திருமந்திரம் சிவபெருமான் எண்குணத்தவன் என்று சுமார் நூற்றுக்கு மேற்பட்ட பாடல்களில் கூறுகிறது. வைணவசமய நூல்கள் பகவத்கீதை உட்பட எவையும் மகாவிஷ்ணு எண்குணத்தவன் என்று கூறவில்லை. அத்துடன் இந்துசமயக் கலாச்சாரத்திற்கேற்பவே 1330 குறள்களையும் எழுதியுள்ளார். பல குறள்களில் இந்துமதத் தெய்வங்களை குறிப்பிடுகிறார். வருணன், இந்திரன், திருமகள், மூதேவி என்பனவும் அந்தணர் என்பதும் இந்து சமயத்திற்குரியவை. அன்புடைமை என்ற அதிகாரத்தில் அன்பு பற்றி மிகவும் விரிவாகக் கூறுகிறார். இதை திருமூலர் அன்பே சிவம் என்கிறார். உபநிடதங்கள் ஒருவன் பிற உயிர்கள் மீது செலுத்தும் பற்றற்ற அன்பு சிவனைச் சென்றடைகிறது என்று கூறுகின்றன.

**சு**ருக்கமாகச் சொன்னால் பகவத்கீதையும், திருமந்திரமும், திருக்குறளும் ஓர் ஆன்மா நித்திய இன்பத்தை அடையும் வழியைக் கூறுகின்றன. வாழும்போதும் மரணமடைந்த பின்பு வாழும் வாழ்க்கையும் இன்பமாக இருக்க வேண்டுமானால் என்னென்ன செய்ய வேண்டும் என்று கூறுகின்றன. சமயம் என்பது மார்க்கம். மார்க்கம் என்பது வழி. சமயம் ஆன்மா முத்தியடைய வேண்டிய வழியைக் காண்பிக்கிறது.

**ஒ**ரு பட்டணத்திற்குச் செல்ல வேண்டுமானால் பல வழிகள் உண்டு. ஒவ்வொருவரும் தமக்கு அனுசரனையான வழியில் செல்லவே விரும்புவர். எந்தவழியால் சென்றாலும் பட்டணத்தை அடையலாம். அதுபோல எந்நூல் கூறுகின்ற வழிமுறைகளைக் கடைப்பிடித்தும் இறைவனை அடையலாம். இறைவனை அடைந்ததும் தாம் கடந்துவந்த பாதை தேவையற்றதாகிவிடும். அதுபோலப் பகவத்கீதை கூறுவது ஒருவழி. திருமந்திரம் கூறுவது இன்னொரு வழி. திருக்குறள் கூறுவது வேறொரு வழி. ஆனால் மூன்றும் ஒரே வழி என்பது இறைவனை அடையும் ஞானம் பிறந்த பின்பு தெளிவாகத் தெரியவரும்.

## 03

**வா**ழ்க்கையின் குறிக்கோள் இன்பமாக வாழ்வதாகும். பூமியில் உள்ளவை நிதந்தரமானவை அல்ல. அதனால் அவை தரும் இன்பங்களும் போலியானவை. நித்திய இன்பம் இறைவனை அடைவதாகும். அதுவே முத்தியாகும். உலக மக்கள் எவராவது மீண்டும் பிறக்க விரும்பமாட்டார்கள். மனிதப் பிறவியில் தாம் பெற்ற இன்பங்கள் யாவும் போலியானவை என்று வாழும் ஒவ்வொருவருக்கும் இயற்கை தினமும் உணர்த்திக் கொண்டிருக்கிறது.

**அ**டுத்துப் பிறவி எடுக்காது இன்பமாக வாழவேண்டும் அதற்கு உரிய நெறி யோக நெறியாகும். யோகம், கர்மம், பக்தி ஞானம் என மூன்று பிரிவுகளை உடையது. இம்மூன்றும் இந்துசமய சாத்திர நூல்கள் அனைத்திலும் உண்டு. இம்மூன்றையும் பகவத்கீதை ஒரு மாதிரிச் சொல்கிறது. திருமந்திரம் இன்னொருமாதிரிச் சொல்கிறது. திருக்குறள் மிகவும் இலகுவான முறையில் சொல்கிறது. கீதையையும் திருமந்திரத்தையும் விளங்கிக் கொள்வது மிகவும் கடினமானது.

**ம**னிதனை நிறைவானவனாக்குவதே சமயசாத்திரங்களின் நோக்கமாகும். அதற்கு உறுதியான உடலும், பரபரப்பும் பற்றுக்களும் அற்ற உயர்ந்த மனமும் வேண்டும். மனம் அமைதியடைந்து, பற்றுக்களை விலக்கி இறைவன்மீது செலுத்தும் போது மனம் தெளிவடைந்து உண்மைப் பொருளை உணரும். அப்போது மனம் பேராற்றல் மிக்கதான மாறும். இவ்வாற்றல் அடுத்தவர்களுக்கு நலம் செய்யவும், நலம் செய்விக்கவும் தூண்டும். அதனால் உயிர்கள் மீது அன்பு உண்டாகும். ஆற்றலை அன்பாக மாற்றுவது இறைநம்பிக்கை. இறைவன் மீது நம்பிக்கை உடையவன், இறைவனைப் போல சகல உயிர்களையும் நேசிப்பான்.

**உ**யிர்கள் மீது அன்பு வைப்பவனின் அறிவு அவர்களின் நிலையை விளக்குகிறது. அந்த அறிவு தன்னையும் இயக்கித் தன்னோடு சேர்ந்தவர்களையும் இயக்குகிறது. இதுவே பகவத்கீதையின் கோட்பாடாகும். இந்த அன்பு நிலையைத் திருமந்திரம் மிகமிகச் சிறப்பாகச் சொல்கிறது. வள்ளுவர் அன்புடைமை என்று தனியான ஒரு அதிகாரத்தில் கூறியபோதும், அவர் கூறிய நூற்றுமுப்பத்து மூன்று அதிகாரங்களும் வெவ்வேறு வகையில் அன்பை வெளிப்படுத்துகின்றன.

**நா**ன் ஆய்வுக்கெடுத்துக் கொண்ட மூன்று நூல்களும் வெளித்தோற்றத்திற்கு முரண்பாடுடையவையாகவே தோன்றும். ஆனால் இம் மூன்று நூல்களினதும் மூலக்கருத்தான முத்தியில் மாறுபாடுதென்படாது. ஒருவர் கீதையைப் பக்திநூல் என்பான். இன்னொருவர் போரை ஊக்குவிக்கும் நூல் என்பார். இன்னொருவர் எதற்கும் போர் தீர்வாகாது அன்பாகப் பேசி உண்மை நிலையை விளக்க வேண்டும் என்பார். இவ்வாறு ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்தைக் கூறுவர். அதற்கு அவருக்குச் சுதந்திரம் உண்டு.

**அ**மைதியான சுபாபமும் அன்பும் கொண்ட வள்ளுவர் ஐம்பத்தைந்தாவது அதிகாரமான செங்கோண்மை என்ற அதிகாரத்தில் பத்தாவது குறளில் இவ்வாறு கூறுகிறார்.

“**கொ**லையின் கொடியாரை வேந்து ஒறுதல் பைங்கூழ்

**க**ளைகட்டு அதனோடு நேர்’’ என்கிறார். இதன் அர்த்தம், ‘அரசன் கொடிய குற்றங்களைச் செய்தவர்களுக்கு மரணதண்டனை கொடுத்து நல்லோரைக் காப்பாற்றுவது பயிர்களின் விளைச்சலைத் தடுக்கும் களைகளை விவவசாயிகள் பிடுங்குவதற்குச் சமமானதாகும்.

**ப**கைவர்களை அழிப்பது அரச தர்மம் என்று அரிச்சுனனுக்கு உபதேசிப்பது தான் பகவத்கீதை. அந்த உபதேசம் எழுநூறு சுலோகங்களிற் சொல்லப்படுகிறது. ஆனால் இதை வள்ளுவர் ஒரே ஒரு குறளில் மிகவும் தெளிவாகவும், புரியும்படியாகவும், இலகுவாகவும் சொல்லி முடித்துள்ளார். பகவத்கீதையின் நோக்கமும், உள்ளடக்கமும் அக் குறளில் சொல்லப்பட்டுள்ளது. இதை மிக விரிவாக இறைமாட்சி, குற்றங்கடிதல், பெரியாரைத் துணைக் கோடல், காலம் அறிதல், தெளிந்து தெளிதல், சுற்றம் தழால், செங்கோன்மை, கொடுங்கொன்மை ஆகிய அதிகாரங்களிலும் வேறுசில அதிகாரங்களிலும் கூறியுள்ளார்.

**ம**காபாரதம் மிகவும் நீண்ட கதை. குறள் மிக மிகச் குறுகிய தத்துவம். பகவத்கீதையில் உள்ள ஒவ்வொரு அத்தியாயத்திற்கும் குறள் விளக்கமளிக்கிறது. முதலாவது அத்தியாயமான அர்ச்சுனன் விஷாதயோகத்தில் ஆரம்பத்தில் படைகளின் அணிவகுப்புக் கூறப்படுகிறது. அதன் பின் அரிச்சுனன் தனக்கு முன் அணிவகுத்து நிற்கும் கௌரவர்களது சேனையைப் பார்க்கிறான். பின் தனது சேனை வீரரையும் பார்க்கிறான்.

**இ**ரண்டு சேனைகளிலும் ஆயுதங்களுடன் போருக்குத் தயாராக நிற்கும் தந்தையரையும், பாட்டன்மாரையும், ஆச்சாரியர்களையும், அண்ணன் தம்பிகளையும், உறவினர்களையும், நண்பர்களையும், மூத்த பெரியவர்களையும், அன்பர்களையும் பார்க்கிறான். அவனது மனதில் பற்று, இரக்கம், பரிவு உண்டாகிறது. அதனால் மிக்க சோர்வடைகிறான். தொண்டை வரண்டுவிட்டது. உடல் தளர்ந்து நடுங்குகிறது. அதனால் காண்டீபன் கையைவிட்டு நழுவி தேர்த்தட்டில் விழுகிறது. உணர்ச்சிப் பெருக்கால் கண்ணீர் பெருகி எதிரிலுள்ளவற்றை மறைக்கிறது.

**அ**தை உணர்ந்த கிருஷ்ணன் அரச தர்மத்தை எடுத்துரைத்து அருச்சுனனை போர் செய்யத் தயாராக்குகிறான். இதுவே பகவத்கீதையின் சாரமாகும்.

**தி**ருக்குறள் உலகில் உள்ள தத்துவங்கள் அனைத்தையும் கூறுகிறது. அது கூறாதுவிட்டது எதுவும் இல்லை. மகாபாரதக் கதை முழுவதையும் அது ஒரு சில அதிகாரங்களுக்குள் அடங்கியுள்ளது. ஊழ், இறைமாட்சி, கல்வி, அவா அறுத்தல், மெய்யுணர்தல், நிலையாமை, இன்னா செய்யாமை, வெருளாமை, வாய்மை, புகழ், ஈகை, தீவினை, அச்சம், பிறன் இல்விழையாமை, அடக்கம் உடைமை, நடுவுநிலைமை, மட்கட்பேறு, இல்வாழ்க்கை போன்ற அதிகாரங்களில் உள்ள தத்துவங்களின் கதைதான் மகாபாரதம்.

**வ**ள்ளுவர் மக்களுக்குச் சொன்னவை யாவும் அரசர்களுக்கும், தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் பொருந்தும் இறைமாட்சி, குற்றங்கடிதல், பெரியோரைத் துணைகோடல், சிற்றினம் சேராமை தெரிந்து செயல்வகை போன்ற அதிகாரங்கள் மக்களுக்கும் அரசர்களுக்கும் பொருந்தும் இவற்றையே பகவத்கீதையில் கிருஷ்ணர் அர்ச்சுனனுக்குக் கூறுகிறார்.

**வ**லி அறிதல், காலம் அறிதல், இடம் அறிதல், தெளிந்து தெளிதல், தெரிந்து விளையாடல், பொச்சாவாமை, செங்கோன்மை, கொடுங்கோன்மை, வெருவந்த செய்யாமை, கண்ணோட்டம், ஒற்றாடல், இடுக்கண் அழியாமை, அமைச்சு, தூது, மன்னரைச் சேர்ந்து ஒழுகல், குறிப்பு அறிதல், நாடு அரண், படைமாட்சி, படைச்செருக்கு, நட்பு, பகைமாட்சி, பகைத் திறம் தெரிதல், உட்பகை பெண் வழிச்சேறல், சூது, குடி செயல்வகை, உழவு மேற்சொல்லப்பட்ட அதிகாரங்கள் யாவும் அரசர்க்கு இன்றியமையாதவை. இதைத்தான் கிருஷ்ணன் போர்க்களத்தில் அர்ச்சுனனுக்கு உபதேசித்தார்.

**கி**ருஷ்ணன் துயருற்று செயலற்று இருக்கும் அர்ச்சுனனுக்குச் சொல்கிறான், ‘‘குந்தியின் மைந்தனே இருப்பது இல்லாமற் போகாது. உயிர் அழிவற்றது. அழியாத உயிரை யாராலும் அழிக்க முடியாது. உயிர் கொல்வதுமில்லை, கொல்லப்படுவதுமில்லை. அது இல்லாமற் போவதில்லை. இல்லாதிருந்து பிறப்பதுமில்லை. ஆன்மா இறவாதது, தேயாதது, வளராதது. இதை அறிந்தவன் எப்படிக் கொலை செய்வான்?. பழுதடைந்த உடையைக் களைந்துவிட்டு மனிதர் புதிய உடை அணிவது போல ஆன்மா பழைய உடலை நீக்கிவிட்டுப் புது உடலை மாறி மாறி வினைக்கேற்றபடி பெற்றுகொள்ளும். ஆன்மா நீரில் நனையாது. வெயிலில் காயாது. தீ அதை எரிக்காது, காற்று உலர்த்தாது. அது பொறிகளுக்குத் தென்படாது. சிந்தனைக்கு எட்டாதது. மாறுபாடு அடையாதது. பிறப்பவை இறக்கும். இறந்தவை பிறக்கும். அதனால் அதையிட்டு வருந்துவது பொருத்தமற்றது. செயற்படும் போது லாபம், நட்டம், வெற்றி, தோல்வி என்பவற்றைச் சமனாகக் கருதவேண்டும். எதையும் ஏற்கத்தயாராக இருத்தல் வேண்டும்’’.

‘‘**அ**வ்வாறான எண்ணம் மனதில் உருவானால் வினைப்பயனில் உரிமை உண்டாகாது. வெற்றியையும் தோல்வியையும் சமமெனக் கருதிச் செயற்பட்டால் நீ நடுவு நிலையோகத்தை அடைவாய். பொறிகளைக் கட்டுப்படுத்தி ஞானம் மனதுள்ப் பற்றை உண்டாக்குவதால் செயலில் நாட்டம் குறைகிறது. ஆசை பிறக்கிறது. ஆசை பின் சினமாக மாறுகிறது. பற்றுக்களுடன் செயற்படுபவர்கட்கு மன அமைதி கெடும். பயம் உண்டாகும். செயலில் கவனமெடுக்காமையால் செயல்கள் நிறைவுறாது. பற்றுக்கள் மனதைவிட்டகன்று விட்டால் மனம் சாந்தியடையும். பற்றுள்ளவன் ஒருபோதும் சாந்தியடையமாட்டான்’’. இவ்வாறு கிருஷ்ணர் அரிச்சுனனுக்குக் கூறுகிறார்.

**ப**கவத்கீதையில் சொல்லப்பட்ட பதினெட்டு அதிகாரங்களும் திருக்குறளில் அறத்துப்பாலிலும், பொருட்பாலிலும் கூறப்பட்டுள்ளன. அர்ச்சுனன் விஷாதயோகம் என்பவற்றில் கூறப்பட்ட கருத்துக்கள் நிலையாமை, துறவு என்ற அதிகாரங்களில் கூறப்பட்டுள்ளன. நிலையில்லாதவற்றை நிலையாவை என்று எண்ணுவதால்தான் மனிதன் கெட்டழிகிறான். இது அறியாமையாகும். அது எப்போதும் இழிவையே தரும். உணர்ந்து பார்த்தால் நாள் என்பது ஒருகால அளவு. அது உடம்பில் இருந்து உயிரைப் பிரித்தறுக்கும் வாளாகும். நா அடங்கி விக்கல் எழுந்து மரணம் அடைவதற்கு முன் நல்ல அறச்செயல்களைச் செய்தல் வேண்டும். நேற்று இருந்தார் இன்றில்லையென்று சொல்லும் தன்மையானது இவ் உலகம் எப்பொழுதும் அறநெறிப்படி தமக்கிடப்பட்ட கர்மங்களைச் செய்யாதவர்கள் வீணாக வாழ்கின்றனர்.

**உ**டம்புக்கும் உயிருக்கும் உள்ள உறவென்பது கூட்டுக்கும் பறவைக்கும் உள்ள உறவை ஒத்தது. கூட்டைவிட்டுப் பறவை எந்நேரத்திலும் பறந்து செல்லும். இதைக் கிருஷ்ணர் பழைய துணியைக் களைந்து விட்டுப் புதுத்துணி அணிவது போன்றது வாழ்க்கை என்கிறார். இங்கு சொற்கள் தான் மாறுபாடு அடைகின்றனவே தவிர உட்பொருளில் அணுவளவு மாற்றம் கூட இல்லை. சாவு என்பது ஒருவன் உறங்குவது போன்றது. பிறப்பு என்பது அவன் உறங்கி விழிப்பது போன்றது. அதனால் மரணம் வருமுன் ஒருவர் தமக்கிடப்பட்ட கடமைகளை முறைப்படி செய்து முடிக்க வேண்டும்.

**ப**ற்றுக்களால் அருச்சுனன் தடுமாறும் போது கிருஷ்ணன் சாங்கிய யோகத்திலும் கர்மயோகத்திலும் சொன்னவற்றை வள்ளுவர் துறவில் கூறுகிறார். கிருஷ்ணன், அருச்சுனா இந்திரியங்களை மனதால் அடக்கிப் பற்றற்று, கர்மேந்திரியங்களைக் கொண்டு கர்மயோகம் செய்பவனே மேலானவன். நித்திய கர்மங்களைச் செய்யாதவன் தனது உடலைக் கூட நல்ல முறையில் பேணமாட்டான். ஆத்மாவில் இன்புற்று, ஆத்மாவில் திருப்த்தியடைந்து, ஆத்மாவில் மகிழ்ந்திருப்பவன் தனது கர்மத்தை முறைப்படியாற்றுவான். அதனால் பற்றற்றுக் கடமையைச்செய். மேலோன் செய்வதைத் தான் ஏனையோர் பின்பற்றுகின்றனர். அதை உலகம் அனுசரிக்கிறது. அதனால் உனது கடமையைச் செய்யத் தயங்காதே. பற்றுள்ளவர்களாகப் பாமரர் தமது கர்மாக்களைச் செய்வதைப் போல மேலோர் பற்றின்றிக் கர்மம் செய்தல் வேண்டும்.

**இ**வற்றை துறவு என்ற அதிகாரத்தில் வள்ளுவர் இவ்வாறு சொல்கிறார். ஒருவன் எந்தெந்தப் பொருட்களிலிருந்து ஆசையை நீக்கிக் கொள்கிறானோ அவனுக்கு அந்தந்தப் பொருட்களால் துன்பங்கள் ஏற்படுவதில்லை. பொருட்களின் மீதுள்ள பற்றை நீக்கினால் நமர் பிறர் என்ற பேதம் மனதில் உண்டாகாது. நான், எனது என்ற பற்று இல்லாதவன் தேவர்களும் அடையமுடியாத வீட்டின் பத்தைப் பெறுகிறான். ஆசைகளை நீக்கினால் பிறவிகள் நீங்கும். உலகில் உள்ள பற்றுக்களை விடுவதற்குப் பற்றில்லாத இறைவனிடத்தில் பற்றுக்கொள்ள வேண்டும்.

**இ**தைக் கிருஷ்ணர் அர்ச்சுனனுக்கு அடிக்கடி சொல்கிறார், ''அர்ச்சுனா, கர்மம் எல்லாவற்றையும் எனக்கு அர்ப்பணித்து விட்டு, சித்தத்தை என்பால்வைத்து, ஆசைகளையும் மமகாரத்தையும் அகற்றி என் நினைவுடன் போர் புரிவாயாக பகவத்கீதையும், திருக்குறளும் ஒருவிடயத்தை வெவ்வேறு விதமான கூறினும் அவை மோதகத்தைப் போலவும் கொழுக்கட்டையைப் போலவும் ஒத்தகருத்துடையனவே.

**04**

**தி**ருமந்திரத்தில் உள்ள செய்யுள்கள் ஒவ்வொன்றிலும் சிவனது பெருமைகளைக் கூறிய பின்புதான் திருமூலர் ஏனைய வாழ்க்கைத் தத்துவங்களையும், வாழ்க்கையில் ஏற்படும் துன்பதுயரங்களையும் கூறி அவற்றைச் சிவனின் அருளால் மட்டும் தான் நீக்க முடியும் என்று கூறுகிறார். திருமந்திரத்தில் உள்ள

பல உபதலைப்புக்கள் சிறிதும் மாறாது அப்படியே திருக்குறளிலும் வந்துள்ளன. அன்புடைமை, கல்வி, கல்லாமை, கள்ளுண்ணாமை, கொல்லாமை, நிலையாமை, வான்சிறப்பு, நிலையாமை, புலால் மறுத்தல், மகளிர் இழிவு, பெரியாரைத் துணைகோடல், பொறையுடைமை, தவம், துறவு, புறங்கூறாமை, வாய்மை, ஊழ் என்ற தலைப்புக்கள் திருமந்திரத்தில் உள்ளன. அவை மாறுபாடின்றித் திருக்குறளிலும் உண்டு. சில தலைப்புக்களில் சிறிது மாற்றம் இருந்தபோதும் கருத்தில் மாற்றமில்லை.

**ப**கவத்கீதையும் அரசர்க்குரிய குணவியல்புகளை மிகவும் விரிவாக அரிச்சுனனுக்குக் கூறுவது போல குறளும், மந்திரமும் அரசர்க்குக் கூறுகிறது. மூன்றும் வசன, வாக்கிய சொல் அமைப்பில் வேறுபடுகிறதே தவிரப் பொருளில் வேறுபடவில்லை. பத்து என்ற எண்ணை எடுத்தால் ஒன்பதும் ஒன்றும் பத்து எட்டும் இரண்டும் பத்து. ஏழும் மூன்றும் பத்து. ஆறும் நான்கும் பத்து. ஐந்தும் ஐந்தும் பத்து. இதில் இலக்கங்கள் மாறியமைந்துள்ளனவே தவிர மொத்தப் பெறுமதியில் மாற்றம் இல்லை. இதுபோன்றது தான் நூல்களில் கூறப்பட்ட அறநீதி ஒழுக்கக் கருத்துக்களும்.

**தி**ருமந்திரம் அரசாட்சி முறைளைப் பற்றிப் பத்துப்பாடல்களில் (95 ஆம் பாடலில் இருந்து 104 ஆம் பாட்டு வரை) கூறுகிறது. திருமந்திரம் வழக்கம் போல எல்லாச் செயல்களும் சிவனின் செயல்கள் என்று கூறுகிறது. அரசன் சிவனின் ஏவலன். அவனைச் சிவனாகவே கருத வேண்டும் என்று ஒவ்வொரு பாடலிலும் கூறி அரசாட்சிமுறை இவ்வாறு இருக்க வேண்டும் என்று கூறுகிறது.

**அ**றநீதி ஒழுக்கநெறிகளைக் கற்காது (கற்றாலும் அவற்றைப் பேணாது) சிவனை நினைவிற்கொள்ளாது அருள்வழியில் ஆட்சி செய்யாது கொடுமையான முறையில் ஆட்சி செய்யும் அரசன் கல்லாத அரசனாவான். உடலையும் அதில் குடிகொண்டிருக்கும் உயிரையும் காலம் அறிந்து கவரும் கூற்றுவன் காலன் எனப்படுவான். இருவரும் மக்களைத் துன்புறுத்துவதில் ஒருங்கொப்பர். இருப்பினும் கொடுங்கோல் மன்னன் காரணமின்றி உயிர்களை வதைப்பான். ஆனால் காலன் அவரவர் வினைக் கொப்பவே கவர்வான். அதனால் காலன் மிகவும் நல்லவன். திருவடிவுணர்வுள்ள சிவஞானிகளைக் காலன் நெருங்கான் ஆனால் கொடுங்கோலன் அவர்களுக்கும் துன்பம் செய்வான்.

**சி**வநினைவுடன் நாடாளும் மன்னன் தன் நாட்டில் வாழும் ஒவ்வொருவரினதும் குணவியல்புகளை அறிந்து கண்காணிப்பான். ஒழுக்க நெறிப்படி வாழாவிட்டாலும் ஒழுக்க நெறிக்கு ஊறுவிளைவிப்போரையும் அரசன் தினமும் கண்காணித்து ஆவன செய்வான் அத்துடன் அரசன் தன்னிடம் ஏதாவது குற்றங்கள் இருக்கிறதா எனப் பெரியோர் மூலம் அறிந்து திருத்துதல் வேண்டும், 'தன்குற்றம் நீங்கிப் பிறர்குற்றம் காண்கிற பின் என் குற்றமாகும் இறைக்கு என்பது குறள். இவ்வாறு மன்னன் ஆளாவிட்டால் தினமும் பல கேடுகள், துன்பங்கள் வந்து நாட்டை அழிக்கும். மன்னன் இறுதியில் நாட்டை இழப்பான். இவ்வாறு மந்திரம் கூறுவதைக் குறளும் கூறுகிறது.

**ம**க்களின் மனங்கள் மகிழ்வுடன் எப்போதும் இருக்கக் கூடிய வகையில் அரசபடையினர், ஊழியர், தவக்கோலம் பூண்டோர் நாட்டில் பற்றின்றி வாழவேண்டும். இதற்கு அரசன் முன்மாதிரியாக இருந்து

அனைவரையும் கண்காணித்து தீய ஒழுக்கமுடையோரை வேந்தன் கண்டிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் நல்லின்பம் தரும் நாடாக அந்நாடு திகழும்.

**போ**லியான தவக் கோலமுடையவர்கள் மக்களை ஏமாற்றிப் பணம், பொருட்களைப் பறிப்பதை அரசன் கண்காணிக்க வேண்டும் ஆணவமிடுக்குடையோர் பொய்த்தவக் கோலங்கொண்டு உச்சிக்குடுமியும், பூநூலும் பிறவும் பூண்டு மக்களை ஏமாற்றுகிறார்கள். சிவ வழிபாடு செயலில் இருத்தல் வேண்டும். ஒவ்வொரு குடிமகனும் ஒழுக்கமாக வாழ வேண்டும், பிறரின் பொருளில் ஆசை கொள்ளக் கூடாது. சிவனைத் தமிழ் மந்திரங்களான 'நமசிவய', 'சிவயநம', 'சிவசிவ', 'சிவயசிவ', என்று சொல்லி வணங்க வேண்டும். சிவனைத் தவிர வேறு எவற்றிலும் பற்றுக் கொள்ளலாகாது. பொய்வேடதாரிகளின் உச்சிக் குடும்பியையும், பூநூலையும் அரசன் அறுத்து மெய்மையான சிவனடியார்களை உருவாக்க வேண்டும். கிரியைகளாற் பயன் இல்லை. செயற்பாடுகளைச் (கர்மங்களை) செய்வித்தல் வேண்டும். ஒவ்வொருவரும் தமக்கிடப்பட்ட கர்மங்களைப் பற்றின்றி செய்தல் வேண்டும் என்று திருமந்திரம் கூறுவதையே பகவத்கீதையும் கூறுகிறது.

**அ**ரசனானவன் உயிர்கள் அனைத்தையும் பாகுபாடின்றி வாழ வழி வகுத்தல் வேண்டும். தாய்க்குத் தாயாக விளங்கும் பசுக்களைக் குறையின்றின் காக்க வேண்டும். கற்ற நெறி தவறாது சிவபக்தியுடன் வாழும் தாய்மை உணர்வுள்ள பெண்களைக் காக்க வேண்டும். சொல்லாலோ செயலாலோ அவர்களைக் களங்கப்படுத்துவோரை இணங்கண்டு தண்டித்தல் வேண்டும். முதியோரையும், அறவோரையும், மக்களையும் குறைகளின்றிக் காத்தல் வேண்டும். அவ்வாறு காக்காவிட்டால் சிவனால் தண்டிக்கப்படுவர்.

**நா**ட்டில் உள்ளவர்கள் தத்தமது செய்தொழில் மூலம் பெறும் வருவாயில் ஆறில் ஒரு பகுதியை அரசனுக்குத் திறையாக செலுத்த வேண்டும். நீதிநெறிப்படி ஆளும் மன்னன் குறித்த தொகையை விட மிகக் குறைவான வருவாயையே திறையாக மக்களிடமிருந்து பெறுவான். அவ்வாறு செய்வது மிகச் சிறந்த சிவ புண்ணியமாகும். மன்னன் குடிகளிடத்து அருளுடையவனாக மக்களுடன் இணங்கி வாழ்ந்தால் மன்னன் மக்களாற் போற்றப்படுவான். அவ்வாறு இல்லாத அரசன் காட்டில் வாழும் புலியிலும் கொடியவனாவான்.

**ஒ**வ்வொருவரும் மேற்கொள்ளும் கடவுளைப் பிரார்த்திக்கும் முறையைச் சமயம் என்பர் உலக வாழ்க்கை அனைவருக்கும் பொதுவானது. அதில் வேறுபாடுகள் இல்லை. அவரவர் தத்தமது சமயத்தை முறைப்படி பேணவேண்டும். ஒருவரோடு ஒருவர் முரண்பட்டு வாழ்வது அறமாகாது. சமயங்கள் மக்களது வளர்ச்சியை கோட்பாடாகக் கொண்டவை. அதனால் அவரவர் சமயநெறியில் அவரவர் வாழ வேண்டும். அவ்வாறு வாழாது தீய செயல்களைச் செய்பவர்களையும், தீய செயல்களைச் செய்யுமாறு தூண்டுவோரையும் அரசன் கட்டுப்படுத்த வேண்டும்.

**அ**ரசர்க்குரிய நீதியை திருமந்திரம் இவ்வாறு சொல்கிறது. இதைப் பகவத்கீதை சற்று வித்தியாசமாகச் சொல்கிறது. பற்றுக்களை அகற்று, வெற்றியையும் தோல்வியையும் சமமாகக் கொள்,

கர்மத்தை முறைப்படி செய், பற்றுக்களுடன் செயற்படாதே, சமபுத்தியுடன் செயற்படு, சமபுத்தியுள்ளவன் நன்மையையும், தீமையையும் இம்மையில் துறக்கிறான். கர்மத்தைச் செய் பயனைக் கருத்திற் கொள்ளாதே. துன்பங்கள் வந்தபோது வேதனைப்படாது, இன்பத்தில் நாட்டமில்லாத, பற்று, அச்சம், சினமற்ற உறுதியான மனம் அரசர்க்கு இருத்தல் வேண்டும். இத்தகைய மனம் படைத்தவன் முனி எனப்படுகிறான். இவ்வாறு சாங்கிய யோகத்தில் கிருஷ்ணன் அரிச்சுனனுக்குக் கூறுகிறான் இதையே திருமந்திரமும் திருக்குறளும் கூறுகின்றன.

**ப**வத்கீதை சொல்வதையும் திருமந்திரம் சொல்வதையும் வள்ளுவர் இறைமாட்சி என்ற அதிகாரத்தில் 382ஆம் குறளிலும், 383 ஆவது குறளிலும், 384ஆம் குறளிலும், 386ஆவது குறளிலும், 387ஆவது குறளிலும், 388ஆவது குறளிலும், 390ஆவது குறளிலும் கூறுகிறார். ஏனைய புலவர்கள் நூறு செய்யுள்களில் கூறுவதைப் பொருளில் மாற்றமில்லாது ஒரு குறளில் கூறும் திறமை வள்ளுவருக்கு உண்டு. 390ஆவது குறள் குடிமக்களுக்குக் கொடுக்கும் பண்பு பாதுகாக்கும் தன்மை, நீதி தவறாத முறைமை, அந்நாட்டில் வாழும் சகல மக்களையும் பாதுகாக்கும் குணம் என்ற நான்கும் கொண்ட அரசன், அரசர்க்கெல்லாம் ஒளிவிளக்குப் போன்றவன் என்று வள்ளுவர் சொல்லும் அக்குறள் பகவத்கீதையில் உள்ள 700 சுலோகங்களும் கூறும் கருத்தைக் கூறுகிறது.

**ம**க்கள் மகிழ்வுடன் வாழ்ந்தால் அவர்களுக்கு எந்தவிதமான குறைகளும் இருக்காது அப்படியான மக்கள் தானம், தவம், ஒழுக்கம், நட்பு, பிறரை மதித்தல், பிறருக்குத் தீமை செய்யாமை, பொறாமை இல்லாமை ஆகிய ஒழுக்கங்கள் உடையவர்களாக இருப்பர்.

**அ**வர்கள் பகவத்கீதையில் உள்ள சாங்கியயோகத்தில் கூறிய பண்புகளை உடையவர்களாக இருப்பர். தமக்கெனச் சமைக்காது, சமைத்த உணவில் மிஞ்சியதை உண்ணும் நல்லோர் எல்லாப் பாவங்களில் இருந்தும் விடுபடுகின்றனர். தமக்கெனச் சமைக்கும் பாவிகள் பாவத்தை உண்கின்றனர். தமது மனதுள் இன்புற்று, அதில் திருப்தியடைந்து, அதனால் மகிழ்ந்திருப்பவருக்குக் கர்மம் செய்ய வேண்டிய கடமை இல்லை. அவர்கள் கர்மம் செய்து ஒன்றைப் பெறுவதும், செய்யாது எதையாவது இழப்பதும் இல்லை. அத்துடன் அவர்கள் யாரிடமிருந்தும் எதையும் பெறுவதும் இல்லை. தனது கர்மங்கள் இவை இவையென உணர்ந்தவன் தானாகவே செயற்படுவான். ஒருநோக்குடன் செயற்படுபவன் தான் தான் கர்மத்தைச் செய்வான். அதற்குக் காரணம் தான் விருப்பியவற்றை அடைதலே.

**மே**லோன் எதைச் செய்கிறானோ அதையே ஏனையோரும் பின்பற்றிச் செய்கின்றனர். அதனால் அரசன் செய்வதையே மக்களும் செய்வர். அதனால் அரசன் எவ்வேளையிலும் ஒழுக்கம் தவறலாகாது என்பதைத் திருமந்திரமும், பகவத்கீதையும், திருக்குறளும் கூறுகின்றன. மூன்று நூல்களிலும் சொல்லும் விதமும் சொற்களும் வெவ்வேறாக இருக்கின்றனவே தவிரப் பொருளில் எம்மாற்றமும் இல்லை.

**க**ர்மயோகத்தில் கிருஷ்ணர் அர்ச்சுனனுக்குச் சொல்கிறார், “அர்ச்சுனா செய்யும் கர்மங்கள் அனைத்தையும் எனக்கு அர்ப்பணி. அதன்பின் அக் கர்மங்கள் என்னால் செய்விக்கப்படும். ஆசையையும்

மமகாரத்தையும் அகற்றினால் மனம் ஒரு நிலைப்பட்டுவிடும். அதன் பின் குழப்பங்கள் நீங்கும். அதனால் வினைகளிடமிருந்து விடுபடலாம். ஞானம் ஆசைகளால் மூடப்பட்டுள்ளது. ஆசைகளை நீக்கினால் அவ்விடத்தை ஞானம் வந்து நிரப்பும், இந்திரியங்களும் மனதும் புத்தியும் தான் ஆசைகளது இருப்பிடம், மனம் இந்திரியங்களைவிட மேலானது. அதைவிட மேலானது புத்தி. புத்தியை விட உயர்ந்தது மேலானது ஆன்மா. ஆன்மாவை அடக்கி ஆசை என்ற சத்துருவை அழித்தல் வேண்டும்.

**இ**ந்தச் செய்தி திருமந்திரத்தில் உள்ள மூவாயிரம் பாடல்களில் சுமார் ஆயிரம் பாடல்களில் கூறப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்டவற்றைச் சிவனது அருளால் நீக்கலாம். அவ்வாறு நீக்குவதற்கு தமிழ் மந்திரமான திருவைந்தெழுத்தை ஓதவேண்டும். அறஞ் செய்வான் திறம் என்ற அதிகாரத்தில் எவ்வாறு தானம் செய்வது என்று திருமூலர் கூறுகிறார். திருமந்திரத்தின் 107ஆவது பாடலில் ''ஆர்க்கும் இடுமின்'' என்கிறார். இரப்பவர்களுக்கெல்லாம் தகுதி தராதரம் பாராது அவர்களுக்கெல்லாம் கொடுத்துதவுங்கள் என்ற திருமூலர் அடுத்த பாடலில், ''இறைவற் கொடுபச்சிலை இடுங்கள்'' என்கிறார். உலகையும் உலகில் உள்ள அனைத்துப் பொருட்களையும் படைத்து எமக்களித்த இறைவனுக்கு நன்றி செலுத்தவிரும்பினால் ஒரு பச்சிலையைப் படைத்து வணங்குங்கள் என்கிறார்.

**இ**தையே பகவத்கீதையின் ஒன்பதாம் அதிகாரமாக ராஜவித்தியா ராஜகுஹ்ய யோகத்தில் இருபத்தாறாவது சுலோகத்தில் கிருஷ்ணர் கூறுகிறார், ''யார் எனக்கு இலை மலர் கனி அல்லது நீரைப் பக்தியுடன் படைக்கிறார்களோ அத்தூய மனதை உடையவர்களின் படையலை நான் மிக்க மகிழ்வுடன் ஏற்று அவர்கள் வேண்டியதைக் கொடுப்பேன். இவ்வாறு திருமூலரும் கிருஷ்ணரும் கூறுகிறார்கள். விஷ்ணு புராணங்கள் யாவும் கிருஷ்ணருக்கு மிக்க விருப்புடையது துளசியென்று கூறுகின்றன. சிவபுராணங்கள் சிவனுக்கு மிக்க விருப்புடையது வில்வம் இலை என்கின்றன. வள்ளுவர் இறைவனுக்கு விருப்பமானது சுத்தமான மனம் என்கிறார். அதைத் திருமூலர் இருதயம் ஆயிரம் இதழைக் கொண்ட தாமரை மலர். அதில் சிவனை இருத்தி வணங்குங்கள் என்கிறார்.

**வ**ள்ளுவர் கடவுள் வாழ்த்தில் மலர் மீது அமர்ந்திருந்து அடியவர்களுக்கு அருள் செய்யும் இறைவனை நினைத்து வணங்குகோர் பூவுலகில் நெடுங்காலம் இன்பமாக வாழ்வார்கள் என்கிறார். இவ்வாறு புலவர்கள் இறைவனின் அருட்சக்தியை வெளிப்படுத்தி மக்களை வணங்கி பேரின்ப வாழ்வு பெறும்படி கூறுகின்றனர்.

**பெ**ரியாரைத் துணைக்கோடல் என்ற அதிகாரத்தில் அரசன், தக்க வழிகளை ஆராய்ந்து சொல்லக் கூடிய பெரியோர்களின் சொற்களைக் கேட்கவேண்டும். அப் பெரியவர்கள் அரசனுக்கு ஒளியைத் தரும் கண்களைப் போன்றவர்கள். அத்தகைய பெரியார்களை தனக்குத்துணையாகக் கொள்ள வேண்டும் என்கிறார். இவ்வாறு நடப்பது வல்லமைகளுக்கெல்லாம் பெரியவல்லமை என்றும் கூறுகிறார். இவ்வாறு பெரியவர்களின் ஆசியுடனும் ஆலோசனைகளுடனும் நாட்டை ஆளும் மன்னனுக்குப் பகைவர்களால்

தீங்கு செய்ய முடியாது. அரசன் தவறு செய்யும் போது கண்டித்து அத்தவறை நீக்கக் கூடிய பெரியவர்களின் துணையுள்ள அரசனை யாராலும் கெடுக்கமுடியாது.

**க**ண்டித்து அறிவுரை கூறுகின்ற பெரியவர்களின் துணையில்லாத அரசன், காவலற்றவனாவான். அவன் கெடுப்பதற்கு யாருமில்லாவிட்டாலும் தன்னைத் தானே கெடுத்துக் கொள்வான். இப்படியான அரசர்களின் ஆட்சி பகைவரால் கைப்பற்றப்படும். நல்ல ஆலோசனைகளைக் கூறி அரசனுக்கு நல்வழி காட்டும் பெரியவர்களின் தொடர்பை விட்டு விடுவது பலரது பகையைத் தேடிக் கொள்வதைவிடப் பத்து மடங்கு தீமையானது.

**வ**ள்ளுவர் ஒவ்வொரு அத்தியாயத்திலும் அரசர்களை எவ்வாறு அரசாட்சி செய்யவேண்டும் என்று மக்களுக்குக் கூறுவதுபோல அரசர்களுக்கும் கூறுகிறார். பொதுவாக இவ்வாறு கூறுவது அறத்துப்பால் குறள்களிலும் பொருட்பால் குறள்களிலும் காணப்படுகிறது. இதையே பகவத்கீதையில் கிருஷ்ணரும் சொல்கிறார்.

## 05

**சி**ற்றினம் சேராமை என்ற அதிகாரத்தில் உள்ள எல்லாக் குறள்களும் மக்களுக்கும், தேவர்களுக்கும் பொருந்தும். மக்களின் தலைவன் தான் அரசன். அதனால் அரசனும் மக்களில் ஒருவனாக அதாவது மக்களின் தலைவனாகவே வள்ளுவர் கருதுகிறார். மக்களுக்கு இயற்கை அறிவு மனதால் உண்டாகும். அவனது மதிப்பு அவனது இனத்தால் உண்டாகும். ஒருவனது அறிவு அவன் சேர்த்த இனத்தில் இருந்து வந்ததாகும். இது அரசர்க்கும் பொருந்தும். ஒருவருக்கு நல்ல இனத்தைவிடச் சிறந்த துணையில்லை. அதுபோலத் தீய இனத்தைவிடத் துன்பந்தரும் பெரும்பகையும் இல்லை. இவை முழுமையாக அரசர்க்குப் பொருந்தும். ஓர் அரசன் நாட்டை நல்ல முறையில் ஆளவேண்டுமானால் வல்லமை உள்ள சான்றோரின் உதவி தேவை என்று இறைமாட்சி செங்கோண்மை என்ற அதிகாரங்களில் வள்ளுவர் கூறியிருக்கிறார். வரலாற்றை எடுத்துப்பார்த்தால் இது விளங்கும். கௌரவர்கள் சகுணியின் சகவாசத்தால் தான் கெட்டழிந்தனர். பாண்டவர்கள் கிருஷ்ணரின் சகவாசத்தை புகழ், வெற்றி என்பவற்றையும் பெற்றனர்.

**வ**ள்ளுவர் கூறிய இப்படியான பல முக்கிய விடயங்கள் பகவத்கீதையில் கூறப்படவில்லை. பகவத்கீதை பதினெட்டு அதிகாரங்களை உடையது. முதலாவது அத்தியாயமான அர்ச்சுனன் விஷாதயோகத்தில் அர்ச்சுனனது தடுமாற்றத்தைப் பற்றிக் கூறப்படுகிறது. இரண்டாவது அத்தியாயமான சாங்கிய யோகத்தில் யோகம் பற்றியும், ஆன்மாபற்றியும், அதன் இயல்புகள் பற்றியும் கூறப்படுகிறது. வினைப்பயனில் பற்றுவைக்கலாகாது, கடமையில் இருந்து வழுவலாகாது என்றும், கர்மத்தைக் கர்மயோகமாகக் கருதவேண்டும் என்றும், நிறை ஞானியில் இயல்பு பற்றியும் கூறுகிறது.

**மூ**ன்றாம் அத்தியாயமான கர்மயோகம், அர்ச்சுனனுக்கு ஏற்பட்ட ஐயம், யக்ஞத்தின் சிறப்பு, சாதனையில் இருப்பவன் செய்ய வேண்டிய கடமைகள், அகங்காரத்தை அகற்றும் விதம், பாவத்தின் பிறப்பிடம் பற்றிக் கூறுகிறது. நான்காம் அதிகாரமான ஞானகர்ம சந்நியாச யோகம் ஞானகுரு சிஷ்சியபம்பரை பற்றியும், அவதார மூர்த்தியின் மகிமை பற்றியும், ஞானயோகத்தின் சிறப்புப் பற்றியும், எல்லா மார்க்கங்களும் இறைவனை அடைய வழிகாட்டும் முறை பற்றியும், சிறு தேவதைகளின் வழிபாடும், அவற்றின் தன்மைகளைப் பற்றியும், நான்கு வர்ணங்கள் பற்றியும், கர்ம தத்துவங்கள் பற்றியும் விதம் விதமான யக்ஞங்கள் பற்றியும், குருசீட இணக்கம் பற்றியும், ஞானத்தின் உயர்வு பற்றியும், சந்தேகங்கள் பற்றியும் கூறுகிறது.

**ஐ**ந்தாம் அதிகாரமான சந்தியாச யோகம் கர்மயோகமே கர்மசந்நியாச யோகமாகிறது என்றும், கர்மம் பிரகிருதிக்குரியது, அது ஆத்மாவுக்குரியதல்ல என்றும் சமதிருஷ்டா ஞானம் பற்றியும், விஷ்யசுகம் வேறு, பிரம்ம சுகம் வேறு என்றும் கூறுகிறது. ஆறாம் அதிகாரமான தியானயோகம், யோகமும் சந்நியாசமும் ஒன்றென்றும், யோகம் பயிலும் முறை பற்றியும், யோகத்தின் முன்னேற்றம், யோகசித்தி, யோகப் பிரஷ்டனது நிலை, யோகம் ஒப்பற்றது என்றும் கூறுகிறது.

**ஏ**ழாம் அதிகாரமான ஞானவிக்ஞான யோகம், ஈசனும் அவருடைய சேதன அசேதன பிரகிருதிகள் பற்றியும், பூதங்களின் தன்மாத்திரைகளாக இருப்பவர் ஈசன் என்றும், உயிர்களின் சிறப்புக்கள் ஈசனிடமிருந்தே வந்தன என்றும், முக்குண மாயைகள் பற்றியும், நான்கு விதமான நல்லார்கள் பற்றியும், சிறு தேவதைகளின் காமிய உபாசனை பற்றியும், பகவானது பாங்கு பற்றியும், அறிவிலிகளினதும் அறிஞரதும் குணாதிசயங்கள் பற்றியும் விரிவாகக் கூறுகிறது.

**எ**ட்டாம் அதிகாரமான அஹாரப்ரஹ்மயோகம் சகுணப்பிரம்ம உபாசனை பற்றியும், மரணத்தின் போது இருக்க வேண்டிய மனநிலை பற்றியும், மீண்டும் பிறவாதநிலை பற்றியும், கிருஷ்டிகர்த்தாவின் இரவு, பகல் நிலை பற்றியும், மரணமில்லாத நிலை பற்றியும், ஒளி மார்க்கம், இருள் மார்க்கம் பற்றியும், எப்பொழுதும் யோகியாக இருக்க வேண்டும் என்றும் கூறுகிறது.

**ஒ**ன்பதாம் அதிகாரமான ராஜவித்யா ராஜகுஷ்யயோகம், சகுணப் பிரம்மத்திற்கும் பிரகிருதிக்கும் உள்ள தொடர்பு பற்றியும் அறிவிலிகளின் போக்குப் பற்றியும் பக்தர்களது போக்குப் பற்றியும், அனைத்துமாக இருப்பவர் ஈசன் என்றும், யோகப் பிரியர்களின் நிலை பற்றியும், வந்தனைக்கேற்ற பயன்கள் பற்றியும், இறை வணக்கம் பற்றியும், இறைவன் தன்னை வணங்குவோர்க்கு எளிமையானவன் என்றும் கூறுகிறது.

**ப**த்தாம் அதிகாரமான வீபூதியோகம், அனைத்திற்கும் ஆதாரமாக உள்ளவன் பகவான் என்றும், வீபூதி பற்றிய ஞானம் பக்தியை வளர்க்கும் என்றும், அவ்வளர்ச்சியால் புத்தியோகம் உண்டாகிறது என்றும், தெவிட்டாத இன்பத்தைத் தருவது பவானது வீபூதி என்றும் கூறுகிறது. பதினோராவது

அத்தியாயமான விசுவரூபதர்சன யோகம், அர்ச்சுனனது வேண்டுதலால் அவனுக்கு ஞானக் கண்ணைப் பகவான் வழங்குவது பற்றியும், தான் கண்ட விசுவரூபத்தை அர்ச்சுனனுக்கு விளக்குதல் பற்றியும், அரிச்சுனனது துதி பற்றியும், விசுவரூப தரிசனம் தனக்குப் போதும் என்று அரிச்சுனன் கூறுவது பற்றியும், வாய்ப்புக்களைப் பயன்படுத்தும் முறை பற்றியும் இவ்வதிகாரத்தில் பகவான் கூறுகிறார்.

**ப**ன்னிரண்டாவது அதிகாரமான பக்தியோகத்தில் சகுண, நிர்க்குணப் பிரம்ம உபாசனைகள் பற்றி மிகவும் விரிவாகக் கூறப்படுகிறது. பக்தனது பேரியல்புகள் பற்றியும் விரிவாகக் கூறப்படுகிறது. பதின்மூன்றாம் அதிகாரமான **க்ஷேத்திர க்ஷேத்ரக்ஞ** விபாகியோகத்தில் இருப்பதெல்லாம் பிரகிருதி புருஷன் மயம் என்றும், அவற்றின் உண்மை வெளியாகிய விதம் பற்றியும், சேத்திரத்தின் பாகுபாடுகள் பற்றியும், ஞானத்திற்கு ஏதுவாக இருப்பவை பற்றியும், பிரம்மம் எத்தகையது என்றும், ஞானத்தின் பர்பக்குவம் பற்றியும், பக்தியால் ஞானம் உண்டாவது பற்றியும், புரிஷனும் பிரகிருதியும் என்றும் உள்ளவை என்றும், பிறவிக்கு வித்தாவது எவையென்றும் பிரம்மஞானம் பிறவிப்பெருங்கடலை அகற்றும் விதம் பற்றியும் நான்கு யோகங்கள் பற்றியும் விரிவாகக் கூறுகிறது.

**ப**தின்நாகாம் அதிகாரமான குணத்ரயவிபாகயோகம், பிரம்ம ஞானமே மோட்சத்தைப் பெற்றுத் தரும் என்றும், பிறவிக்கு மூலகாரணமாக உள்ளது எதுவென்றும், குணங்களின் செயல்கள் பற்றியும், குணங்களின் முன்னீட்டத்தை அறிவது பற்றியும், குணாதீதம் முத்தி நிலை பற்றியும், குணங்களைக் கடந்தவனது லட்சணம் பற்றியும் விரிவாகக் கூறுகிறது. பதினைந்தாம் அதிகாரமான புருசோத்தமயோகம், சம்சார விருசம் பற்றியும், மரத்தை வெட்டி மோட்சத்தை நாடு என்பது பற்றியும், எப்படியானவர்கள் மோட்சமடைகிறார்கள் என்றும், பரமபதம் பற்றிய விளக்கமும், ஜீவதத்துவ விளக்கம் பற்றியும், ஞானக் கண் பற்றியும், பரமாத்மனது சொரூபம் பற்றியும், ஜீவன், ஈஸ்வரன், பிரம்மம் பற்றியும் விரிவாகக் கூறுகிறது.

**ப**தினாறாம் அதிகாரமான தெய்வாசர சம்பத்விபாக யோகம், தெய்வீக இயல்புகள் பற்றியும், இரு இயல்புகளுக்குரிய பலாபலன்கள் பற்றியும், அசுர இயல்புகளின் ஆணவப் போக்குகள் பற்றியும், அதனால் உண்டான வீழ்ச்சி பற்றியும், அசுர இயல்பிலிருந்து விடுபடுதல் பற்றியும், சாத்திரங்களின் பயன்கள் பற்றியும் விரிவாகக் கூறுகிறது. அடுத்துப் பதினேழாம் அதிகாரமான சிரத்தாத்ரயவிபாக யோகம், மூன்று விதமான சிரத்தைகள் பற்றியும், மூன்று விதமான உணவுகள் பற்றியும், மூன்று விதமான ஆராதனைகள் பற்றியும், மூன்று விதமான தபசு பற்றியும், மூன்று விதமான தானங்கள் பற்றியும், குறைகளை எப்படி நிறைகளாக்குவது பற்றியும் விரிவாகக் கூறுகிறது.

**அ**டுத்து இறுதி அதிகாரமான மோட்ச சந்நியாச யோகம், இதில் சந்நியாசம் என்பதென்ன? தியாகம் என்பது என்ன என்பதற்கான விளக்கம் உள்ளது. தாமச, ராஜச தியாகம் கூடாது சாத்வீகமே மேலானது என்று விளக்கப்பட்டுள்ளது. கர்மத்துக்கான கேதுகள், ஆத்மாவுக்குக் கர்மம் இல்லை. நான்கு வர்ணத்தர்மங்களுக்கான விளக்கம், கர்மயோகம் தான் பின் கர்ம சந்நியாசமாகிறது என்பதற்கான

விளக்கம், அகங்காரத்தின் கொடுமைகள் பற்றிய விளக்கம், எல்லாம் ஈசன் செயல் உண்மையான நிலை, சரணாகதித் தத்துவம், ஞாணோதயம் என்பன பற்றிய பூரணமான விளக்கம் இவ் அதிகாரத்தில் உள்ளது.

**சி**றுவயதில் இருந்து வனவாசம் முடிவடைந்த பின்பும் கௌரவர்கள் பாண்டவர்களுக்குக் கடுமையான கொடுமைகளைச் செய்து கொண்டிருந்தனர். அவர்கள் சூதாடித் திரௌபதியை இழந்த பின்பு கௌரவர்களால் அவள் சபையோர் முன்நிலையில் துயிலுருவப்பட்ட போது தருமனின் தம்பிமார் நால்வரும் கொதித்தெழுந்தனர். அர்ச்சுனன், துரியோதனனைக் கொல்லச் சபதமெடுத்தான். அவனது கோபத்தை யாராலும் அடக்க முடியவில்லை. தருமன் தான் அப்போதய சூழ்நிலையை விளக்கி அவனது கோபத்தைத் தணித்தான். அதன்பின்பு கிருஷ்ணன் தூது சென்றதை விரும்பாத அர்ச்சுனன் போரையே விரும்பினான். தம்மை சந்தர்ப்பம் வரும்போதெல்லாம் கொடுமைப்படுத்திய துரியோதனையும் அவனது சகோதரர்களையும் எப்படியாவது கொல்ல வேண்டுமென்று துடிதுடித்தான்.

**ஆ**னால் போர் செய்வதென்று முடிவு செய்து போர்க்களத்திற்கு வந்து எதிரிகளை ஆவேசமாகக் கொன்றழிக்கும் எண்ணத்துடன் எதிரிகளைப் பார்த்தபோது இதயத்தில் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணம் வரவில்லை. மாறாக நாட்டை ஆளவேண்டும் என்ற நோக்கத்திற்காகத் தன்னைக் கற்பித்த குருமாரையும், இனத்தவர்களையும், நண்பர்களையும், சுற்றத்தவரையும் கொல்ல வேண்டும் என்ற எண்ணம் மனதில் தோன்றி வளர்ந்து அவனைச் செயலிழக்கப் பண்ணியது.

**அ**தைக் கண்டு அதிசயித்த கண்ணன், அர்ச்சுனனுக்குச் செய்யும் உபதேசம் தான் பகவத்கீதை. பகவத்கீதையில் பதினெட்டு அதிகாரங்கள் உள்ளன. ஒவ்வொரு அதிகாரத்திலும் சில சுலோகங்கள் மட்டும் தான் அவனது மனச்சோர்வை நீக்கும் பொருட்டுக் கூறப்பட்டன. மிகுதி ஆன்மாவின் நிலைபற்றியும், மரணம் பற்றியும், சத்அசத் பற்றியும், யக்ஞம் பற்றியும், பாவம் பற்றியும், சிறுதேவதை வழிபாடு பற்றியும், நான்கு வர்ணங்கள் பற்றியும், கர்மத்தைப் பற்றியும், சந்நியாசத்தைப் பற்றியும், யோகத்தைப் பற்றியும், ஈசன், பூதங்கள், தன்மாத்திரைகள், பகவானைப் பற்றியுமே கூறுகின்றன.

**அ**வற்றைவிடச் சகுணப் பிரமம் பற்றியும், ஈசனது வீபூதிகள், பகவானின் விஸ்பரூபம், சேத்திரத்தின் பயன்பாடுகள், ஞானம் பற்றிய விளக்கம் நான்கு யோகங்கள், தெய்வீக அசுர இயல்புகள், சந்நியாசம், முக்குணங்கள் என்பவை பற்றியே விரிவாகச் சொல்லப்படுகிறது. கடவுளான கிருஷ்ணர் தனது அருட்சக்தியால் அர்ச்சுனனது மனதை மாற்றிப் போர் செய்யச் செய்திருக்கலாம். அல்லது நீதியை நிலை நாட்ட புராணங்களில் அசுரர்களை அழித்தது போலக் கௌரவர்களை அழித்திருக்கலாம். அவ்வாறு செய்யாது அர்ச்சுனனுக்குப் பகவத்கீதையின் பதினெட்டு அதிகாரங்களையும் உபதேசித்தது ஏனைய மக்களும், அரசர்களும் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக.

**ஒ**ரு மனிதன் காரணமில்லாது எதையும் செய்யமாட்டான். அவ்வாறிருக்கக் கடவுளான கிருஷ்ணன் காரணமின்றிப் போர்க்களத்தில் பதினெட்டு அதிகாரங்களைக் கொண்ட பகவத்கீதையை உபதேசிப்பாரா? மக்களின் நலக் கருதித்தான் அது உபதேசிக்கப்பட்டது. அதில் குறிப்பிடப்பட்ட சுலோகங்கள் எழுநூறும்

அர்த்தமுள்ளவை. மக்களுக்குப் பயன் தரவல்லவை. அதனால் தான் கிருஷ்ணர் பகவத்கீதையை உபதேசித்தார்.

## 06

**ப**கவத்கீதையில் உள்ள பதினெட்டு அதிகாரங்களைப் பற்றி இதுவரை பார்த்தோம். இனித் திருமந்திரத்தில் உள்ள ஒன்பது தந்திரங்களும் கூறும் கருத்துக்களைப் பார்ப்போம். திருமந்திரம் என்ற சைவசித்தாந்த நூலைச் சிவபெருமான் கைலாயத்தில் வைத்துத் திருமூலருக்கு உபதேசித்த பின்பு அதைப் பூமியில் பரப்புமாறு கட்டளையிடத் திருமூலர் பூமிக்கு வந்தார்.

**தி**ருமந்திரம் ஒன்பது தந்திரங்களையும் நூற்றித்தொன்னூற்று ஐந்து உபதலைப்புக்களையும் கொண்டது. இதில் மூவாயிரம் திருப்பாடல்கள் உள்ளன. பொதுபாயிரத்தில் நூற்றி இருபத்தெட்டுப் பாடல்களும், தற்சிறப்புப் பாயிரத்தில் நூற்றியிருபத்தெட்டுப் பாடங்களும் உள்ளன. அத்துடன் ஏழுநூறு பாடல்கள் சிறப்புப் பாயிரமாக உள்ளன. இப் பாயிர வைப்பு முறையே திருக்குறளிலும் காணப்படுகிறது.

**தி**ருமந்திரத்தில், திருமூலர் தனது காலத்தில் வாழ்ந்த பெரியவர்களைப் பற்றியும் தனக்கு முன்பு வாழ்ந்த பெரியவர்களைப் பற்றியும் கூறியுள்ளார். அதன்படி அகத்தியர், திபுராதிகன், இராவணன், சலன்தலன், தக்கன், அந்தக அரக்கன், மார்க்கண்டர் ஆகியோரைப் பற்றிய தகவல்களைத் திருமந்திரப் பாடல்களில் குறிப்பிட்டுள்ளார் இவர்கள் திருமூலருக்கு முன் வாழ்ந்தவர்களாவர்.

**த**சரதனின் மகனான இராமனின் குருவாக விளங்கியவர் வசிட்டர். வசிட்டர் பதஞ்சலி முனிவரோடும் வியாக்கிரமருடனும் வேறு ஐவருடனும் சேர்ந்து வாழ்ந்தவன். வசிட்டரது தங்கையை மணந்தவர். இதிலிருந்து இராமாயாணமும் திருமந்திரமும் சமகாலத்து நூல்கள் என்று புரிந்து கொள்ளலாம். இராமாயாணம் நடைபெற்றது கி.மு 6000 என்றும், அவர் பாண்டிய நாட்டின் தலைநகரமான கபாடபுரத்திற்குச் சென்றபோது அந்நாட்டை அனந்தகுல பாண்டியன் ஆண்டான். அவன் இராமரைப் பெருமெடுப்புடன் வரவேற்றான் என்று பாண்டிய நாட்டுச் சரித்திரம் கூறுகிறது.

**தி**ருமந்திரத்தில் காணப்படும் ஒன்பது தந்திரங்களில் முதல் நான்கு தந்திரங்களும் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கினையும் பற்றியே விபரித்துக் கூறுகிறது. ஐந்து முதல் ஒன்பது வரையான தந்திரங்கள் முறையே பேறு, பேற்றுவழி, வழிபாடு, வழிபாட்டில் உறுதி, வாழ்வு என்பது பற்றி விரிவாகக் கூறுகிறது. அதனால் அதை ஐந்தெழுத்தின் விரிவான ஆகமமாகும். முதலாவது தந்திரம் காரணமாகும். இது நூற்றிப் பதினாறு திருப்பாடல்களைக் கொண்டது. உபதேசம் தொடங்கிக் கள்ளுண்ணாமை வரை பதினேழு பிரிவுகளைக் கொண்டது. இது அறத்திற்கு அடிப்படையான முப்பொருள் உண்மையைக் கூறுகிறது. இதில் யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை உயிர் நிலையாமை பற்றிக் கூறுகிறது. இதை வள்ளுவர் நிலையாமை என்ற அதிகாரத்தில் கூறியுள்ளார்.

பகவத்கீதையின் இரண்டாவது அந்நியாயமான சாங்கியயோகத்தின் 12, 13, 15, 16, 17, 18, 19, 20, 71 ஆவது சுலோகங்கள் ஆன்மாவைப் பற்றியும் அதன் செயற்பாடுகள் பற்றியும், நிலையாமை பற்றியும் விரிவாகக் கூறுகின்றன.

**இ**வற்றைத் தவிர கர்மயோகத்தில் 7, 18, 19, 27 சுலோகங்களும் கர்மம் செய்வது பற்றிக் கூறுகின்றன. இதைவிடப் பல்வேறு அதிகாரங்களில் நிலையாமை பற்றிக் கிருஷ்ணர் அர்ச்சுனனுக்கு உபதேசிக்கிறார். திருக்குறள் சுருக்கமாக இருப்பதுடன் ஒருமுறை கூறிய கருத்தைப் பின்பு எக்காரணங் கொண்டும் கூறுவதில்லை. திருமந்திரம் தனித்தனியாக நிலையாமை பற்றிப் பல செய்யுள்களில் கூறுகிறது. வள்ளுவர் ஒரு அதிகாரத்தில் உலகில் உள்ள சகல பொருட்களினதும் நிலையாமை பற்றிக் கூறுகிறார்.

**இ**தைவிடத் திருமூலர் முதலாவது தந்திரத்தில் ஒழுக்கமுடைமை, கொல்லாமை, புலால் மறுத்தல், பிறன்மனை நயவாமை, பெண்வழிச் சேறல், மகளிர் இழிவு நல்குரவு, கல்வி என்பவற்றையும் திருமூலர் இத் தந்திரத்தில் கூறுகிறார். முதலாவது தந்திரத்தில் உள்ள அனைத்துக் குறள்களில் சிறிது மாறுபாட்டுடன் காணப்படுகிறது. இவையாவும் மகாபாரதக் கதையில் வருகின்றன. அதனால் பகவத்கீதை இவற்றைப் பெரிதாகச் சொல்லவில்லை. இருப்பினும் நிலையாமை பற்றிய உபதேசம் பகவத்கீதையில் ஏனைய நூல்களைவிடச் சிறப்பாக இருந்தபோதும் திருக்குறளைப் போல எல்லோருக்கும் விளங்கும்படி கூறப்படவில்லை.

**இ**ரண்டாவது தந்திரம் காமிகாகமம் அது இருநூற்றெட்டுத் திருப்பாடல்களைக் கொண்டது. அகத்தியம் முதல் பெரியோரைத் துணைகோடல் ஈறாக இருபத்தைந்து பிரிவுகளை உடையது. இதில் பெரும்பான்மையான தலைப்புக்கள் சிவனின் பெருமைகளை மட்டும் கூறுகின்றன. மனிதவாழ்வின் மிக மிக முக்கிய இடம் வகிப்பது குழந்தைப்பேறு. குழந்தைகள் பிறந்தால் தான் வம்சம் தழைக்கும். அதை உணர்ந்த திருமூலர் இரண்டாவது தந்திரத்தில் கரு உற்பத்திபற்றி முப்பத்தொன்பது பாடல்களில் கூறுகிறார். அவர் இன்றைய விஞ்ஞானிகள் கூறுவதை விட விளக்கமாகவும் தெளிவாகவும் கூறுகிறார். இதைவிடப் பல விஞ்ஞான தொழில்நுட்ப மருத்துவக் கருத்துக்களைத் தனது செய்யுள்களில் கூறியுள்ளார்.

**இ**றந்த ஓர் உயிர் வாழும் போது செய்யப்பட்ட வினைக்கீடாக அச்சுமாறிப் பிறக்கும். ஓசை, உறு, ஒளி, நாற்றம் இவற்றுடன் மனம், எழுச்சி, இறுப்பு ஆகிய எட்டும் கூடிய வடிவமே மனித உடலில் இது ஒருபோதும் மாற்றமடையாது. ஆனால் வினைக்கேற்றபடி உடல் மாறுபாடையாது. ஆனால் வினைக்கேற்றபடி உடல் மாறுபாடையும். இதைத் திருவள்ளுவர் ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்று கூறியதோடு ‘சிறப்பொல்லா, செய்தொழில் வெற்றுமையான’ என்றும் குறளில் கூறியுள்ளார். மாறுபாடடையும் இவ்வுடம்பு ஐம்பூதங்கள் அறிதற் கருவிகள் ஐந்து, செய்தற் கருவிகள் ஐந்து, வளி பத்து ஆகிய இருபத்தைந்து பொருட்களால் ஆனது. இறப்பும் பிறப்பும் மருவுடம்புக்குரியது. பருவுடம்புள்

குடியிருக்கும் நுண்ணுடம்பு இறந்ததும் (உயிர்) பிரிந்து சென்று வினைக்கீடாகப் பிறக்கிறது. இவற்றிற்கெல்லாம் காரணகர்த்தாவாக விளங்குபவர் சிவனே. அதற்காகக் கணவனும் மனைவியும் சிவனைத் தொழுதபின் கூடுதல் வேண்டும். அவ்வாறு கூடும்போது கரு உண்டாகும். அவர்கள் கூடி இன்புறும் போது இலிங்கமாகிய உருவுடம்பின் வாயிலூடாக விந்து புகும். அதை ஏற்றுக் கொள்வதற்காக யோனி விரியும் அருவுடம்புடன் கருவிற்கூடிய ஆருயிரை அங்கு பொருந்தியிருக்கும் காற்றுக்கள் வளர்த்தெடுக்கும். கருப்பைக்குள்ச் செல்லும் விந்து நடுநாடி வழியாக ஒலியாற்றல் என்னும் நாதசக்திக்கு மேற்பட்டு எதிர்த்துச் சென்றால் சிறப்பாக குழந்தை பிறக்கும். அது பெரும் சிவபக்தனாக விளங்கும். விந்து அமைதியாக எதிர்த்துச் சென்றால் பெரும் அறிஞனாகப் பிறக்கும். சமமாகச் சென்றால் பேரறிவான பிள்ளையாக இருக்கும்.

**உ**றுதியான குழந்தை உருவாகத் தாயினது உடல் நிலை நல்ல முறையில் அமைந்திருத்தல் வேண்டும். முக்கியமாகத் தாய் சத்துள்ள உணவுகளையே உண்ண வேண்டும். கரு அருவுடம்போடு இருக்கும் நிலையைப் புலம்புநிலை என்பர். இந்நிலையில் கரு பேருறக்கம் கொள்ளும். சிவபெருமான் உயிர்களுக்களித்த உடம்பும் அவ்வுடம்பினுள்க் காணப்படும் பொறிகளும் நிலையானது அல்ல. முன்வினைகளுக்கீடாக கருவினுள் அமைக்கப்பெற்ற பேறு, இழவு, இன்பம், பிணி, மூப்பு, சாக்காடு என்பவற்றிற்கு ஏற்றவாறு குணங்கள் உண்டாகும். இவ்வுடலுக்கு ஒன்பது வாயில்களையும் அமைத்துள்ளான்.

**தா**யைப்போலவே பிள்ளை பிறக்கும் என்பதற்கிணங்க பிள்ளையின் உடல் தாயின் உடம்பைப் போன்றதாகவே இருக்கும். பிள்ளையின் வளர்ச்சியமைப்பு பெரும்பாலும் தந்தையைப் போன்றதாகவே இருக்கும். கணவனும் மனைவியும் சேர்ந்திருக்கும் போது ஆணின் வலப்பால் மூச்சு மிகுந்து சென்றால் பிறக்கும் பிள்ளை ஆணாக இருக்கும். பெண்ணாகிய இடப்பால் மூச்சு மிகுந்து சென்றால் பெண் குழந்தை பிறக்கும். இரண்டு மூக்குத்துவாரத்தின் வழியாகவும் வரும் மூச்சுச் சமமாக இருந்தால் அலியே பிறக்கும். உயிர்க் காற்று அளவிற்குறைந்தால் பிறக்கும் பிள்ளை குறுகிய வடிவுடையதாக இருக்கும் அம்மூச்சு நெடுந்தொலைவு ஓடி இளைத்துப் போனால் பிறக்கும் பிள்ளை முடமாகப் பிறக்கும். அம்மூச்சு இடைநிறுத்தப்பட்டால் பிறக்கும் பிள்ளை கூனாகப் பிறக்கும். தந்தையின் உயிர்ப்பு ஐந்து முறை ஓடினால் பிறக்கும் பிள்ளை நூறு வயது வரை வாழும். நான்கு முறை ஓடினால் பிறக்கும் மகவு என்பது வருடங்கள் வாழும்.

**க**ணவனும் மனைவியும் சேர்ந்திருக்கும் போது மனைவியில் உடலும் உள்ளுறுப்புக்களும், மனமும் சுத்தமாக இருத்தல் வேண்டும். சேர்ந்திருக்கும் போது வயிற்றில் அதிக மலமிருந்தால் பிறக்கும் பிள்ளை மந்தபுத்தியுடையதாகப் பிறக்கும். சிறுநீர் அதிகமாக இருந்தால் பிறக்கும் பிள்ளை ஊமையாகப் பிறக்கும். இரண்டும் சமமாக இருந்தால் பிறக்கும் பிள்ளை குருடாகப் பிறக்கும். ஆணும் பெண்ணும் சேர்ந்திருக்கும் போது உயிர்ப்பு வலது மூக்கால் வந்து கொண்டிருந்தால் ஆண்பிள்ளை பிறக்கும். இடது மூக்கால் உயிர்ப்பு வந்து கொண்டிருந்தால் பெண்பிள்ளை பிறக்கும். மலக்காற்கான அபானை எதிர்த்து

வந்தால் இரட்டைக்குழந்தைகள் பிறக்கும். இரண்டு மூக்காலும் உயிர்ப்புச் சமமாக வந்தால் அலியே பிறக்கும்.

**க**ணவனும் மனைவியும் சேர்ந்திருக்கும் போது இருவருக்கும் வருகின்ற உயிர்ப்பு ஓர் அளவாக இருத்தல் வேண்டும். அவ்வாறு வந்தால் அழகும் அறிவும் உள்ள குழந்தை பிறக்கும். அவ்வாறில்லாது கால நேரம் பாராது காமம் மேலிட்டபோதெல்லாம் முறையின்றிக் கொள்ளும் உறவால் தீய பிள்ளைகளே பிறப்பர். தாய் வயிற்றில் உதித்த கரு பத்து மாதங்களின் பின் பிறக்கும். சில பழந்தமிழ் நூல்கள் கணவனும் மனைவியும் எப்படி எவ்வாறு சேர்ந்திருத்தல் வேண்டும் என்று கூறியுள்ளன. திருமூலருக்கு யாவற்றையும் சிவபெருமான் உபதேசித்தமையால் கரு உற்பத்தி பற்றி முழுமையாகக் கூறியுள்ளார். இத்தளவிற்கு வேறு யாரும் கூறவில்லை. உலகவாழ்வில் மகப்பேறே முக்கியமான செயலாகும். அது எவ்வாறு இருக்க வேண்டும் என்று திருமூலர் கூறுவது போல மக்கள் நடந்து கொள்ளல் வேண்டும்.

**ப**கவத்கீதை மகப்பேறு பற்றி எதுவும் சொல்லவில்லை. ஆனால் திருமூலர் கணவன் மனைவி இருவரும் மகப்பேற்றுக்காக ஒன்று சேருமுன் சிவனை வணங்க வேண்டும் என்று கூறி சில தத்துவங்களையும் கூறுகிறார். அவை மனதடக்கம், பரபரப்பின்மை, சிவநினைவு போன்றவையாகும். வள்ளுவர் காமத்தைப் பற்றி இருநூற்றைம்பது குறள்களில் சொல்கிறார். ஆணும் பெண்ணும் ஒருவர் மீது ஒருவர் கொள்வது அன்பு, காதல் அல்ல காமம் என்கிறார். காமத்துப் பாலில் ஓரிடத்திலாவது ஆணும் பெண்ணும் விரும்புவது காதல் என்று கூறவில்லை காமம் என்றே சொல்கிறார்.

**அ**றத்துப்பாலில் இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணை நலம் மக்கட் பேறு என மூன்று அதிகாரங்கள் உண்டு. அதிலும் வள்ளுவர் பெண்ணின் மேலான குணங்களையும் பற்றியும், மக்கட்பேற்றின் பெருமைகளைப் பற்றியும் கூறுகிறாரே தவிரக் கரு உற்பத்தி பற்றிக் கூறவில்லை. ஒழுங்கான முறையில் கரு உற்பத்தியானால் தான் பிறக்கும் பிள்ளை மேலானவனாக, அறிவுள்ளவனாக, ஒழுக்கமுள்ளவனாகப் பிறக்கும் என்றும், தீய வழியில் கூடி இன்பம் அனுபவித்தால் தீய பிள்ளையே பிறக்கும் என்றும் திருமூலர் கூறியதை வள்ளுவர் நினைத்துப் பார்க்கவில்லை.

**ஒ**ரு மரத்தை நடுவதானால் கூட நடும் மரத்தின் வித்து நல்ல முறையில் உருவாக்கப்பட்டால் தான் அந்த மரத்தில் இருந்து நற்பயனைப் பெறலாம். இந்த விடயத்தில் விவசாயிகள் மிக்க கவனத்துடன் செயற்படுகிறார்கள். வள்ளுவர் ஒருவன் பெறவேண்டிய செல்வங்களுள் அறியவேண்டியவற்றை அறியக்கூடிய மக்களைப் பெறும் பெற்றோரை ஏழு பிறவிகளிலும் துன்பங்கள் தொடராது. கற்றவர் கூடிய அவையில் எல்லோரையும் விட முக்கவனாக இருக்கத்தக்க பிள்ளையைப் பெறுவதே தந்தை மகனுக்காற்றும் உதவியாகும். சான்றோரால் போற்றிப் புகழப்படும் பிள்ளைப் பெற்ற தாய் அவனைப் பெற்றபோது அடைந்த மகிழ்ச்சியை விட அதிகம் அடைவாள். இவ்வாறு வள்ளுவர் சொல்லக் காரணமாக இருந்தது திருமூலரது கரு உற்பத்தி என்ற அதிகாரத்தில் கூறப்பட்டவையே.

**வ**ள்ளுவர் காமத்துப்பாலில் பெண்களின் வெளியழகு பற்றியும், அவர்கள் கொள்ளும் காதல் பற்றியும், அக்காதலால் ஏற்படும் துன்பங்கள் பற்றியுமே கூறுகிறார். இது பற்றித் திருமூலர் எதுவும் சொல்லவில்லை. வெளித்தோற்ற அழகை விட மன அழகுதான் வாழ்க்கைகுத் தேவை என்கிறார். நூற்றியொன்பதாவது அதிகாரத்தில் இருந்து நூற்றி முப்பத்து மூன்றாவது அதிகாரம் வரை. அதாவது இருநூற்றைம்பது குறள்களில் வள்ளுவர் பெண்களின் வனப்பை வர்ணிக்கிறார். தகை அணங்கு உறுத்தல் என்ற அதிகாரத்தில் தோழியரோடு நிற்கும் ஓர் அழகியைக் கண்ட இளைஞன் ஒருவன் படும் வேதனையைச் சிறப்பாகச் சொல்கிறார். அடுத்த அதிகாரமான குறிப்பு அறிதல் என்ற அதிகாரத்தில் அப் பெண் தனது விருப்பத்தை எவ்வாறு தெரிவிக்கிறாள் என்றும், அதைக் காதலன் எவ்வாறு புரிந்து கொள்கிறான் என்றும் கூறுகிறாள்.

**பு**ணர்ச்சி மகிழ்தல் என்ற அதிகாரத்தில் ஒரு பெண்ணிடம் அனுபவிக்கும் இன்பம் ஐம்புலன்களாலும் அனுபவிக்கப்படுகிறதென்றும், ஒவ்வொரு முறையும் அவளைக் கூடும் போது விதம் விதமான இன்பங்களைத் தருகிறாள் என்றும் கூறுகிறார். நயம் புனைந்து உரைத்தல் போன்ற அதிகாரங்களில் அவளின் உடலமைப்புப் பற்றியும், அவளின் உடலின் இன்பச் சுவை பற்றியும் கூறுகிறார். நாணுத்துறவு உரைத்தல் என்ற அதிகாரத்தில் காதலனின் அன்பைப் பெறாத பெண்ணிக் வேதனையைப் பற்றிக் கூறுகிறார்.

**அ**லர் அறிவுறுத்தல் என்ற அதிகாரத்தில் ஊரார் அவர்களது காதலைக் கேவலமாகப் பேச அதனால் ஊர் முழுக்க அவ்வதந்தி பரவுவதால் அவள் பெருமகிழ்வடைவதாக வள்ளுவர் கூறுகிறார். அடுத்த அதிகாரமான பிரிவு ஆத்தாமையில் காதலனைப் பிரிந்த காதலிபடும் வேதனையை மிகவும் அற்புதமாகக் கூறுகிறார். படர் மெலிந்து இரங்கல் என்ற அதிகாரத்தில் காம நோயைத் தாங்க முடியாது அல்லற்படும் ஒரு பெண்ணின் துன்பத்தை வாசிப்பவர்களும் வேதனைப்படத்தக்கவாறு கூறுகிறார். கண்விதுப்பு அழிதல் என்ற அதிகாரத்தில் காதலனைக் காட்டி அவனின் அழகில் மயங்கவைத்த கண்கள் இப்போது தாம் அதை உண்ராமல் அழுது வேதனையைத் தருகின்றன என ஒரு பெண் வேதனைப்படுவதைக் கூறுகிறார்.

**ப**சப்புறு பருவரல் என்ற அதிகாரத்தில் ஒரு பெண் தனது காதலன் தொழில் நிமிர்த்தமாக வெளியூருக்குச் செல்ல அனுமதிக்கிறாள். அவன் சென்ற பின்பு அவள் அடையும் துயரம் பற்றியே இவ்வதிகாரம் கூறுகிறது. அடுத்த அதிகாரமான தனிப்படர் மிருதி என்ற அதிகாரத்தில் தாம் விரும்பினால் எவ்வளவு மகிழ்ச்சி, இன்பம் என்பன பற்றிக் கூறிய வள்ளுவர், அவன் பிரிந்து சென்ற பின்படும் வேதனையை மிகவும் சுவையாகச் சொல்கிறார். அடுத்த அதிகாரமான நினைத்த புலம்பல் என்ற அதிகாரத்தில் காதலின் பெருமை பற்றியும், பிரிவு காரணமாக வரும் வேதனை பற்றியும் கூறப்பட்டுள்ளது. அடுத்த அதிகாரமான கனவுநிலை உரைத்தல் என்ற அதிகாரத்தில் பிரிந்து சென்ற காதலன் கனவில் வந்து மட்டற்ற இன்பம் கொடுப்பதை வள்ளுவர் சுவையாகச் சொல்கிறார்.

**அ**டுத்த அதிகாரமான பொழுது கண்டு இரங்கல் என்ற அதிகாரத்தில் பொருள் தேடும் நோக்குடன் பிரிந்து சென்ற காதலன் மாலைப் பொழுதில் நினைவில் வந்து கொடுமைப்படுத்துவதாக வள்ளுவர் கூறுகிறார். மாலைப் பொழுது காதலர்களுக்கு மிக்க மகிழ்ச்சியும் இன்பமும் தரும் பொழுது மாலை மயங்கி இரவாக மாறிக் காதலனைப் பிரிந்த பெண்களை எவ்வாறு துன்புறுத்துகிறது என்று வள்ளுவர் வேதனையுடன் கூறுகிறார். அடுத்த அதிகாரமான உறுப்பு நலன் அழிதல் என்ற அதிகாரத்தில் பிரிந்து சென்ற காதலரை நினைத்துக் காதலியின் உறுப்புக்கள் எப்படியெல்லாம் துன்பப்படுகின்றன என வள்ளுவர் மிக்க சோகத்துடன் கூறுகிறார். கண்கள் தான் மிக மிக மோசமான துன்பங்களை அனுபவிக்கின்றன. காதலனோடு இருக்கும் போது பூரித்துப் பொங்கி அழகுடன் மிளிர்ந்த தோள்கள் மெலிந்த கைகாளில் இருந்து கழன்று விழும் வளையங்கள் பசலை நிறமடைந்த கண்கள், தோள்கள், கைகள், நெற்றி என்பன படும் துன்பங்கள் இவ்வதிகாரத்தில் மிகவும் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது.

**அ**டுத்த அதிகாரமான நெஞ்சோடு கிளத்தல் என்ற அதிகாரத்தில் காதலனைப் பிரிந்த காதலி தனக்கேற்பட்ட தாங்கமுடியாத வேதனையைத் தனது நெஞ்சிற்குச் சொல்லி ஆறுதலடைகிறாள். தன்னை விரும்பி, தன்மீது மோகங் கொண்டு தன்னை விட்டுப் பிரியமாட்டேன் என்று கூறிச்சென்ற காதலருக்கு நான் விரும்பித் தானே அனுமதியளித்தேன். பிறகேன் இப்போது நெஞ்சமே ஏன் துன்பப்படுகிறாய் என்று தனது நெஞ்சுடக்குக் கூறி ஆறுதலடையும் பெண்ணின் துயரத்தைத் தான் அனுபவித்தது போல வள்ளுவர் வேதனையுடன் கூறுகிறார். அடுத்த அதிகாரமான நிறை அழிதல் என்ற அதிகாரத்தில் காமத்தின் கோரநிலை பற்றி வள்ளுவர் மிக அருமையாகக் கூறுகிறார்.

**அ**டுத்த அதிகாரமான அவர் வயின் விதும்பல என்ற அதிகாரத்தில் காதலன் வருவதாகக் குறிப்பிட்டுச் சொன்ன நாட்கள் கழிந்தும் காதலன் வராமையால் அதை எண்ணிக் கவலைப்பட்டு அழும் ஒரு அவலைப் பெண்ணின் துயரம் இவ் அதிகாரத்தில் மிக்க வேதனையோடு கூறப்பட்டுள்ளது. காதலி பிரிவுத் துன்பத்தைத் தாங்க முடியாது உள்ளம் உடைந்து அழிந்துவிட்டால் பின் அவள் தனது காதலனைப் பெறுவதால் என்ன பயன் வரப்போகிறது. முன்பே அவளைப் பெற்றிருந்தாலும் பயனில்லை. இனிப் பெற்றுத் தழுவுவதாலும் பலன் இல்லை ஏனென்றால் அவளது மனம் பிசகி விட்டது. இவ்வாறு வள்ளுவர் கூறுகிறார்.

**அ**டுத்த அதிகாரமான குறிப்பு அறிதல் என்ற அதிகாரத்தில் காதலன் தனது காதலியின் அங்கங்களைப் பார்த்து அவள் தன்மீது கொண்ட காதலின் குறிப்பை அறிந்து கொள்கிறான். காதலி தனது காதலனைப் பார்த்துச் செய்துவிட்டுச் சென்ற குறிப்புக்களைக் காதலன் நினைத்து மகிழ்கிறான். அவள் தனது கண்களாலேயே தனக்குள் உண்டான காமநோயை அறிவிக்கிறாள். அது பெண்மைக்குரிய பெருந்தன்மை என்று காதலன் நினைக்கிறான். அடுத்த அதிகாரமான புணர்ச்சி விதும்பல் என்ற அதிகாரத்தில் முன்பு காதலனோடு கூடியிருந்த காலங்களை எண்ணிக் காதலி மகிழ்வதை இவ் அதிகாரம் சிறப்பாகக் கூறுகிறது. காதலனுக்குக் காம உணர்வு வரும்போது பெண்கள் தினையளவுகூடப் பிணங்கக் கூடாது என்றும் காதலி காதலனோடு ஊடல் கொள்ளவேண்டும் என்று சென்று அவனைக்

கண்டதும் தான் நினைத்து வந்ததை மறந்து தழுவியது பற்றி வள்ளுவர் இவ் அதிகாரத்தில் சுவையாகச் சொல்கிறார்.

**அ**டுத்த அத்தியாயமான நெஞ்சோடு புலத்தல் என்ற அதிகாரத்தில் காதலனைப் பிரிந்த காதலி தன் நெஞ்சோடு தனது துயரமான நிலையைச் சொல்லித் துயரப்படுவதாக வள்ளுவர் கூறுகிறார். இதில் காதலர்களது இயல்பான நிலைகள் யாவும் உணர்ச்சிமயமாகக் கூறப்படுகிறது. காதலர் இல்லாத போது அவரைக் காண முடியவில்லையே என்ற துயரம், காதலர் கூட இருந்தால் இன்னும் சில மணித்தியாலயங்களில் அவர் பிரிந்து சென்றுவிடுவார் என்ற துயரம் இப்படித் துன்பம் ஒருபோதும் முடிவுக்கு வராது என்று தன் நெஞ்சுக்குக் கூறும் அபலையை நினைத்தால் பரிதாபமாக உள்ளது.

**அ**டுத்த அத்தியாயமான புலவியில் காதலி தன் மீதுள்ள அன்பான காமத்தை அறியச் சற்று விலகியிருந்து பார்க்கிறாள். அவ்வகையான ஊடல் அளவோடு இருத்தல் வேண்டும் என்று அவளுக்குத் தெரியும். பிணங்கிய காதலியைச் சமாதானம் செய்தபின்பே கூடுதல் வேண்டும். சிறிது நேரம் பிணங்கினால் காதலன் படும் அவதியைக் காணலாம் என்றும் விரும்புகிறாள். காதலி மீது காமம் கொள்ளாத காதலனிடம் செய்யும் ஊடல் பயனில்லாதது. ஊடல் கொண்டபோது மகிழ்விக்க விரும்புவது காம உணர்வே இவ்வாறு வள்ளுவர் கூறுகிறார்.

**அ**டுத்த அத்தியாயமான புலவி நுணுக்கம் என்ற அதிகாரத்தில் திடகாத்திரமான ஓர் ஆடவனின் திரண்ட மார்பு பற்றிப் பெண்கள் காம உணர்வுடன் பார்க்கும் பார்வை பற்றிக் கூறுகிறார். அவனது மார்பின் அழகை ஏனைய பெண்கள் ரசிப்பது தெரிந்து அவனது காதலிபடும் துன்பத்தையும் , காதலன் காதலி எதிர்பார்த்தவற்றைச் செய்வதையும், அவனது நிலை கண்டு, அவன் வேறு பெண்களைக் காதலிக்கிறானோ என்று எண்ணும் காதலியின் மனநிலை இவ்வதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது. இறுதி அதிகாரமான ஊடல் உவகை என்ற அதிகாரத்தில் பெண் காரணமின்றித் தனது காதலன் மீது ஊடல் கொள்வது, அவனது காம உணர்வை அதிகரிக்கவே. அதனால் உண்டாகும் சிறு கோபம் காம உணர்வைத் தூண்டும். அதனால் காதலி அடிக்கடி தனது காதலனுடன் அளவோடு ஊடல் கொண்டு காம உணர்வைத் தூண்டிப் பூரணமான இன்பத்தை அனுபவிப்பாள். தான் தவறு செய்யாத போதும் காதலி ஊடல் கொண்டால் அவளைத் தழுவாதிருப்பதும் இன்பம் தான். வாடிய பயிருக்கு நீர் பாய்ச்சுவது போல காமத்திற்கு இன்பம் தருவது ஊடல், ஊடல் முடிந்த பின் கூடி மகிழ்ந்தால் அது ஊடலுக்கு இன்பமாகும் என்று வள்ளுவர் கூறுகிறார்.

**பொ**துவாக வள்ளுவர் காமத்துப் பாலில் காமத்தைப் பற்றியே திரும்பத் திரும்ப புதிய வடிவத்தில் மனம் எழுச்சி கொள்ளும்படி கூறுகிறார். அழகு, அவளின் மனதில் எவ்வாறு காம உணர்வை உண்டாக்குவது. காம உணர்வு மிகுந்தால் பெண்ணுக்கு எவ்வகையான துன்பங்கள் வரும் என்று வள்ளுவர் விரிவாகக் கூறுகிறார். இதைப் படிப்போர் பெண்களின் மனதைப் புரிந்து செயற்பட வேண்டும் என்பதே வள்ளுவரது விருப்பமாகும். காமச்சுவை மிகுந்த இன்பத்துப்பால் ஆண்களுக்கும் பெண்களுக்கும் முக்கியமானதொன்றாகும்.

## 07

**தி**ருமந்திரத்தின் மூன்றாம் தந்திரம் வீராகமத்தின் சாரமாகும். இத்தந்திரம் முன்நூற்று முப்பத்து மூன்று செய்யுள்களை உடையது. இச் செய்யுள்கள் இருபத்தொரு பிரிவுகளாகப் பிரித்து விளக்கப்பட்டுள்ளது. முழுக்க முழுக்க இன்பநிலையைக் கூறுவது. இன்பம் என்பது இல்வாழ்வான் கடைப்பிடிக்கும் தவநிலையாகும். திருமணம் செய்து இல்வாழ்க்கையை ஆரம்பிக்கும் தம்பதியினர் சிவனும் சிவையும் என்று கருதப்படுவார்கள் என்று திருமூலர் சொல்கிறார். அவ்வாறான தவநிலைக்குட்பட்ட தம்பதிகள் சிவனை மறவாது அவர்களுக்கெனக் கூறப்பட்ட தீதகற்றல், நன்றாற்றல், இருக்கை, வளிநிலை, தொகைநிலை, பொன்றநிலை, நினைதல் என்ற எட்டு உறுப்புக்களையும் பேணி வாழவேண்டும். அவ்வாறு வாழ்வோர் சிவனருள் பெற்று இறுதியில் சமாதி நிலையடைவர். உயிர்ப்புப் பயிற்சியைத் தினந்தோறும் முறைப்படி செய்து வந்தால் எண்பெரும் சித்திகளையும் அடைவர். உயிர்ப்புப் பயிற்சி தம்பதிகளிடையே அன்பான உறவு உண்டாகும் உடல் திடகாத்திரமாகும்.

**இ**ன்பம் என்பது உடலை உறுதியாக்கி உள்ளத்தைச் சிவனுக்கு அர்ப்பனிப்பதாகும். இதனால் இல்வாழ்க்கை நல்வாழ்க்கையாகும். தம்பதிகளிடையே அன்பு பெருகி, அது காதலாக மாறும். மூன்றாவது தந்திரம் அட்டமாசித்தி என்ற அதிகாரத்தில் தொடங்கிவர சூலம் என்ற அதிகாரத்துடன் நிறைவு பெறுகிறது. அட்டாங்கயோகம் என்பது உயிர்ப்பை எடுத்தலும், விடுதலும், தடுத்தலுமாகும். உயிர்ப்புப் பயிற்சியுடையவர்கள் பதினாறை விடுவித்து பின்னிரண்டை உள்ளிளுபப்பர். அதன்பின் விடுத்தலும் எடுத்தலும் இன்றி தடுப்பர்.

**மூ**ன்றாவது தந்திரத்தில் திருமூலர் கூறியவற்றைத் தான் கிருஷ்ணர் போர்க்களத்தில் அர்ச்சுனனுக்கு உபதேசிக்கிறார். உதாரணமாக தியானம் என்ற உபதலைப்பில் திருமூலர் இவ்வாறு கூறுகிறார். தியானம் என்பது நீங்காத சிவநினைவுடன் மனதை ஒடுக்குவதாகும். இந்தநிலையில் பூதங்கள் ஐந்து, புலன்கள் ஐந்து, கரணங்கள் நான்கு, மாயை ஒன்று ஆருயிர் ஒன்று ஆகிய பதினாறு மெய்களும் ஒடுங்குவதே தியானம். கடவுளின் நினைவுடன் மயக்கமாகிய வெகுளியை அகற்ற வேண்டும். அத்துடன் ஏனையவற்றைத் தூண்டவேண்டும். அவ்வாறு தூண்டக் காமம், வெகுளி மயக்கங்கள் நீங்கும். அப்போது மனதுள் எரியும் விளக்கு மாயா விளக்காகும். அதன்பின் நாட்டம் இரண்டினையும் மூக்கு நுனியில் வைத்தல் வேண்டும். அவ்வாறு வைத்து இறைநினைவுடன் இருந்தால் திருவருள் ஒளி மனதுள்ப் பிரகாசிக்கும்.

**அ**ப்போது மனதுள்ப் பத்துவிதமான இனிமையான ஓசை எழும். இவ்வாறு தியானம் செய்யும் முறைபற்றித் திருமூலர் கூறுகிறார். இதையே கிருஷ்ணர் சாங்கிய யோகத்தில் பல சுலோகங்களில் கூறுகிறார். ஆமை, தனது அவயவங்களை அடக்கிக் கொள்வது போல பொருட்களிடத்திலிருந்து பொறிகளை முழுதும் உள்ளீர்க்க வல்லவனுக்கு நிறை ஞானம் நிலை பெறுகிறது. இதுபோல 57ஆவது,

59ஆவது, 61ஆவது, 65ஆவது சுலோகங்களும் வேறுபல சுலோகங்களும் சொல்கிறன்றன. தியானஞ் செய்பவனது மனம் அமைதியடைகிறது. பற்றுக்களை நீக்குகிறது.

**சா**ங்கிய யோகத்தின் 66ஆவது சுலோகம் இவ்வாறு கூறகிறது. முன் அடங்காதவனுக்கு ஆத்மபோதமில்லை. ஆத்ம பாவனையுமில்லை, ஆத்மதியானமில்லாதவனுக்கு சாந்தி கிடையாது. சாந்தியில்லாதவனுக்கு இன்பம் இராது. அடுத்துத் திருமூலர் சமாதிநிலை பற்றிக் கூறுகிறார். சமாதி நிலை என்பது தீதை அகற்றி நன்றே செய்தல். இதை உரிய முறைப்படி செய்தால் மனம் சமாதிநிலையடையும். அத்துடன் மனம் அருவுடற் கண் நின்று புறுத்துப் பொறியிற் புரியும். அதனால் மனத்தைப் பொருத்து மனம் என்பர். அந்நிலைப்பட்ட மனம் உண்மைநிலையினை அறியும். இந்த உண்மையை உணராதோர் அமிழ்தை உண்டால் நெடுநாள் வாழலாமென்று எண்ணுகின்றனர்.

**தி**ருமூலர் கூறிய சமாதிநிலை அடைந்தோர் எழுவகையான துன்பங்களையும் நீக்கியவராவர். வினைமுதற் காரணங்கள் ஏழையும் தன்னகத்தே கொண்டவராவர். துன்பங்களை வென்றவராவர். அவர்கள் சிவபெருமானைச் சார்ந்தவராவர். இவர்கள் அட்டமா சித்திகளைப் பெற்றவராவர். வேண்டிய வினையைத் தழுவினால் அது கர்மயோகமாகும். அது இருபதினாயிரத்து தொண்ணூறு வேறுபாடுகளைக் கொண்டது. இதையே கிருஷ்ணன் அருச்சுனனுக்குச் சொல்லி அவற்றைத் துறக்கச் சொல்கிறான்.

**இ**துதவிரத் திருமூலர் கேசரியோகம், பரியங்கயோகம், சந்திரயோகம் என்று மூன்று யோகங்களைப் பற்றிக் கூறிறார். கேசரி யோகம் என்பது ஒரு பெண்ணுடன் எவ்வாறு உச்சக்கட்ட இன்பத்தை அனுபவிப்பது பற்றியது. அதை இருபத்தாறு செய்யுள்களில் கூறியுள்ளார். பரியங்கயோகம் என்பது அகத்தவமாகிய யோகப் பயிற்சியைக் கைவிட்டு விட்டு இன்பத்தைத் தரும் யோகப் பயிற்சிக்குச் செல்பவர்களின் நிலைபற்றிக் கூறியுள்ளார். இவ் யோகம் பற்றி இருபது பாடல்களில் கூறியுள்ளார்.

**அ**டுத்து சந்திரயோகம் பற்றிக் கூறுகிறார். சந்திரயோகம் என்பது சந்திரன் தேய்ந்து பின் வளர்வதால் இருவகைப்பட்ட பக்கங்களில் உள்ள கலைகள் நுன்மையில் இருந்து பருமனாகவும், பருமனிலிருந்து நுண்மையாக ஒடுங்கி மறைவதுபோல மக்களது உடம்பும் நுண்மையில் இருந்து பருமனாகவும், பருமனில் இருந்து நுண்மையானதாகவும் ஒடுங்கிக் கொள்ளல் வேண்டும். சூரியனது பன்னிரண்டு கலைகளையும் திங்களின் வெளியாகச் செலுத்தப் பயின்றவர்கள் உலகோர் போற்றிப் புகழும்படியாக வாழ்வர். சூரியனது கலைகள் பன்னிரண்டு சந்திரனின் கலைகள் அறுபத்து நான்கு. இவை தனித்தனியாக விளங்கிக் கொண்டிருக்கின்றன.

**ச**ந்திரயோகம் என்ற தலைப்பில் திருமூலர் முப்பத்து மூன்று பாடல்களில் சந்திரனுக்கும், சூரியனுக்கும், அக்கினிக்கும் உள்ள தொடர்பை விளக்கியுள்ளார். அவர் கொடுக்கும் விளக்கம் தற்போது சந்திரமண்டலத்திற்குச் சென்ற விஞ்ஞானிகளால் கூடக்கூற முடியவில்லை. யோகம் பற்றிப் பகவத்கீதையும் சொல்கிறது. அந்த யோகத்திற்கு மூலகாரணிகளாக இருப்பது சந்திரனும், சூரியனும், அக்கினியும் தான் என்று திருமந்திரம் கூறுகிறது. திருமந்திரம் கூறும் யோகம், கோள்கள், சந்திர சூரியர்

பற்றித் தனித்தனியாக ஆராய்தல் வேண்டும். ஏனெனில் திருமூலர் அவற்றைப் பற்றி ஏராளமாகக் கூறியதோடு அவை உயிர்களுக்குப் பயன்படும் முறைகளையும் தெளிவாக விளக்கியுள்ளார்.

**அ**டுத்து நான்காம் தந்திரத்தைப் பற்றி ஆராய்வோம். நான்காவது தந்திரம் சித்தாகமத்தின் சாரமாகும். இது ஐஞ்நூற்று முப்பது திருப்பாடல்களைக் கொண்டது. அசபை முதலாகத் தவாக்கரிச் சக்கரம் வரை பதின்மூன்று பிரிவுகளை உடையது. முத்தி என்பது தன்னை இழப்பதாகும். தன்வசமுள்ள பொருட்கள் அனைத்தையும் துறந்து தன்மனதைச் சிவனுக்கு அர்ப்பணிப்பதாகும். இவர்களை இந்நிலைக்குட்படுத்தியது எல்லா மந்திரங்களுக்கும் உயிராக இருந்த யாவற்றையும் விளக்கும் ஆதியந்தமில்லாத திருவைந்தெழுத்தே. அதையே நான்காம் தந்திரம் விளக்குகிறது. அத்துடன் சுக்கரவழிபாடுபற்றியும் விளக்கமாகக் கூறுகிறது. அத்துடன் சுக்கர வழிபாட்டின் பெருமைகளையும் கூறுகிறது. பகவத்கீதையும் சக்கர வழிபாட்டைப்பற்றிக் கூறுகிறது. கர்மயோகத்தில் 14ஆம், 15ஆம், 16ஆம் சுலோகங்கள் பிரவிருத்திச் சக்கரம் பற்றிக் கூறுகின்றன. உணவில் இருந்து உயிர்கள் உண்டாகின்றன. மழையால் உணவு உற்பத்தியாகிறது. யக்ஞத்திலிருந்து மழை வருகிறது. யக்ஞத்திற்குப் பிறப்பிடம் கர்மம். கர்மம் வேதத்திலிருந்து உருவானது. வேதத்தை உபதேசித்தவர் பரமாத்மா. அதனால் வேதம் யக்ஞத்தில் நிலைபெற்றுள்ளது. உலகில் இவ்வாறு இயங்குகின்ற சக்கரத்தைப் பின்பற்றாதவன் பாவ வாழ்க்கையே வாழ்கிறான். பகவத்கீதை ஒரு சக்கர வழிபாட்டைப் பற்றிச் சொல்கிறது. ஆனால் திருமந்திரம் பலவிதமான சக்கர வழிபாடு பற்றிக் கூறுகிறது.

**பூ**க்களின் மீது அமர்ந்துள்ள சிவனைத் தாமரை, கருங்குவளை, செங்கழுநீர், நெய்தல், பலா, மாதவி, மந்தாரம், தும்பை, மகிழ், சுரபுன்னை, மல்லிகை, செண்பகம், பாதிரி, செவ்வந்தி ஆகிய பதின்நான்கு வகையான மலர்களால் அர்ச்சிக்க வேண்டும். இதைத் திருக்குறளின் கடவுள் வாழ்த்தின் மூன்றாவது குறளும் சொல்கிறது. ஐம்புலன்களையும் அடக்கியவர்கள் என்று சொல்லப்படுபவர் யாரெனில் பிறர் மனை நோக்காதவரே என்று திருமூலர் சொல்கிறார். திருமூலர் ஒரு செய்யுளில் கூறியதை வள்ளுவர் பிறன் இல்விழையாமை என்ற அதிகாரத்தில் பத்துக் குறள்களில் சொல்கிறான். அதில் முக்கியமானது பிறன் மனைவியை விரும்பாதவனே அறநெறி தவறாதவன். அவன் தான் ஆண்மையுள்ளவன். நன்மைக்குரியவன். படுபாதகமான தீய செயல்களைச் செய்தாலும் பிறன் மனைவியை விரும்பாமல் வாழ்வது மேலானது என்று வள்ளுவர் கூறுகிறார். திருமந்திரமும் திருக்குறளும் பிறன்மனை விரும்பாமை பற்றித் தெளிவாகக் கூறியபோதும் பகவத்கீதை இதுபற்றி எதுவும் சொல்லவில்லை. அதற்குக் காரணம் பாஞ்சாலியைத் துகிலுரிந்தமையால் தான் போரே உருவானது என்பதால் போலும்.

**அ**டுத்து ஐந்தாம் தந்திரம் கூறுபவற்றை ஆராய்வோம். இது வாதுளாகமத்தின் சாரமாகும். இது நூற்று ஐம்பத்து நான்கு திருப்பாடல்களைக் கொண்டது. சுத்தசைவம் முதல் உட்சமயம் ஈறாக இருபது பிரிவுகளைக் கொண்டது. அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கையும் அறம் என்றே ஐந்தாம் தந்திரம் கூறுகிறது. அறம் என்பதும் வேதம் என்பதும் ஒன்றேயாகும். திருமந்திரம் அறம் பற்றியே விரிவாக விளக்கிக் கூறுகிறது. அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கினிலும் மேலாகக்

கருதப்படுவது பேறு என்று திருமந்திரம் கூறுகிறது. பேறென்பது சைவசித்தாந்தத்தைக் கடைப்பிடிப்பது. அந்நிலை வேதத்தை முழுமையாக அறிந்த பின்பு ஏற்படுகிறது.

**பே**று என்பது திருகடிக்கலப்பு. கலப்பென்பது மறவாத இன்பநிலை. அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கும் நான்மறையாகும். இப்பேற்றின் இன்ப நிலையைத் திருமந்திரம் சிறப்பித்துக் கூறுகிறது. ஐந்தாம் தந்திரத்தில் யோகம் (செறிவு) பற்றியும் ஞானம் பற்றியும் திருமூலர் கூறுகிறார். பகவத்கீதையின் அனைத்து அதிகாரங்களும் யோகம், ஞானம் பற்றியே கூறுகின்றன. வள்ளுவரும் யோகம், ஞானம் பற்றியே 1330 குறள்களிலும் கூறுகிறார். ஆனால் அவர் யோகம், ஞானம், பற்று என்று தனித்தனி கூறாது சகல குறள்களிலும் கூறியுள்ளார். நாம் தான் அவற்றைப் பிரித்தறிய வேண்டும்.

**ஆ**சான் அருளிய அருமறை வழியில் வாழ்ந்து வந்தால் யோகத்தில் பொருந்தலாம். மலரில் இருந்து நறுமணம் வெளிவருவது போல ஆருயிரிடமிருந்து சிவனின் சாயல் வெளிப்பட வேண்டும். அப்படியானவர்கள் தான். சிவனை உணர்ந்தறிவார் அவர்கள் சிவனைக் கண்டமையா உய்வர். சிவத்தை நம்பி செயற்படும் சிவபக்தர்கள் யோக நிலையை அடைவர். இவர்களுக்குப் பிறப்புக்கள் இல்லை. இவ்வாறு திருமூலர் திருமந்திரத்தில் கூறுவதையே கிருஷ்ணர் பகவத்கீதையில் கூறுகிறார். போத்தலின் நிறத்திற்கேற்ப அதனுள் விட்ட சுத்தமான நீர் மாறுதலடைவதைப் போலத் தோன்றுவது போலவே திருமந்திரமும், பகவத்கீதையும், குறளும் உள்ளன. பல்வேறு நிறப்போத்தல்களில் விட்ட நீரைப் போலத்தான் இவ் மூன்று நூல்களினதும் தத்துவங்கள் வேறு போலத் தோன்றுகின்றன. ஆனால் அவற்றின் பொருளில் மாற்றம் ஏற்படுவதில்லை.

**அ**டுத்துத் திருமூலர் ஞானத்தைப் பற்றிக் கூறுகிறார். ஞானத்தை விடச் சிறந்த அறநெறி எதுவுமில்லை. ஞானத்திற்கு வேறான சமயங்களும் இல்லை. சிவஞானத்தைப் பெற்றவர்கள் சிவஞானிகளாகிவிடுவர். அவர்கள் சிவசக்தி மிகுந்த சிவவுலகில் வாழ்வர். இவர்களுக்கு நான்கு பண்புகள் உண்டு. அவை அறிவிற்சீலம், அறிவில் நோன்பு, அறிவிற் செறிவு, அறிவில் அறிவு என்பனவாகும். முழுமையான ஞானமடைந்தவர்களுக்கு இந்நான்கு பண்புகளும் அடைந்த இவர்கள் மேனிலையாகிய மோனத்தை எய்தியவராவர். இவர்கள் இருவினைகளையும் கடந்தவர்கள்.

**தி**ருமூலர் தனித்தனியாக யோகத்தையும், ஞானத்தையும் கூறியுள்ளார். ஆனால் பகவத்கீதை தான் சொல்ல வந்த பதினெட்டு அத்தியாயங்களிலும் யோகத்தைச் சேர்த்துள்ளது. இரண்டாம் அத்தியாயமான சாங்கிய யோகத்தில் பதினொராவது சுலோகத்தில் கிருஷ்ணர், அர்ச்சுனனுக்குச் சொல்கிறார், ‘‘துயரத்துக்குரியவர் அல்லார் பொருட்டு நீ துயரப்படுகிறாய். ஞானிகளது உபதேசங்களையும் சொல்கிறாய், பண்டிதர்கள் இறந்தவர்களுக்காகவோ, இருப்பவர்களுக்காகவோ புலம்பார்கள்’’ முன்பு எப்பொழுதாவது நான், நீ, ‘‘இவ்வரசர்கள் இல்லாதிருந்ததில்லை. இவ் உடம்புகள் அழியுமிடத்து நாம் இல்லாமற்போகமாட்டோம்’’ இது ஞானோபதேசமாகும். அர்ச்சுனன் குருகுலத்தில் கல்வி கற்கும் போது

குரு ஞானோபதேசம் செய்திருப்பார். யோகம் பற்றியும் கூறியிருப்பார். அவை பற்றுக்களால் மறக்கப்பட்டிருக்கும்.

**இ**ரண்டாம் அதிகாரமான சாங்கியயோகத்தின் 45ஆவது சுலோகத்தில் இருந்து 53ஆவது சுலோகம் வரை யோகத்திற்குத் திறவுகோல் என்ற பகுதியில் கிருஷ்ணர் உபதேசிப்பவை திருமந்திரத்திலும் சொல்லப்பட்டுள்ளன. அர்ச்சுனா இருமைகளில் இருந்து விடுபடு. நடுவுநிலை நின்று யோகத்தில் பயின்றவற்றைச் செய். முக்குணங்களையும் கடந்து செல். வினையாற்றக் கடமைப்பட்டுள்ளாய் அதன் பயனில் பற்றுவைக்காதே. யோகத்தில் நிலைபெற்று நில். அப்போது வெற்றி தோல்விகளைச் சமமாகக் கொள்வாய். இது நடுவு நிலை யோகமாகும். உனது குழம்பிய அறிவை ஆத்மாவில் நிறுத்து. அப்போது நீ யோகநிலையை அடைவாய்".

**ப**கவத்கீதையின் நான்காவது அதிகாரமான ஞானகர்ம சந்நியாச யோகத்தின் பத்தாவது சுலோகம் ஞானயோகத்தின் சிறப்புக்கள் பற்றிக் கூறுகிறது, "ஆசை, அச்சம், சினம், நீங்கியவர்களாய், என்மயமாய், என்னை அடைக்கலம் புகுந்து, ஞானதபசால் புனிதர்களாகிய பலர் எனது இயல்பை எய்தினர்", "யார் என்னை எப்படி வழிபடுகிறார்களோ அவர்களுக்கு நான் அப்படியே அருள்புரிகிறேன். பார்த்தா மக்கள் எப்போதும் எனது வழியையே பின்பற்றுகின்றனர். கிருஷ்ணர் கடவுள் அவர் பகவத்கீதையில் கடவுளாகவே அவதாரமெடுத்து வந்து அர்ச்சுனனுக்கு உபதேசிக்கிறார். திருமந்திரத்தில் சிவபெருமான் திருமூலருக்கு உபதேசித்ததைத் தனது சீடர்களுக்கு உபதேசித்து நாடெங்கும் மடங்கள் அமைத்துப் பிரசாரம் செய்யுமாறு கூறுகிறார்.

**வ**ள்ளுவர் சாதாரணமான மனிதர். அவர் தனது மனத்துள்த் தோன்றியவற்றைத் திருக்குறளாக எழுதியுள்ளார். உலகில் உள்ள எல்லாச் சமயங்களும் ஏற்றுக் கொண்ட அறநீதி ஒழுக்கக் கருத்துக்களை அவர் சிறப்பான முறையில் குறள்களாக்கியுள்ளார். 133 அதிகாரங்களையும், அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற முப்பால்களுக்குள் அடக்கியுள்ளார். அறத்துப்பால், பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல் என நான்கு பகுதிகளை உடையது. பொருட்பால் அரசியல், அமைச்சியல், அரணியல், கூழியல், படையியல், நட்பியல், குடியியல் என ஏழு பகுதிகளை உடையது. காமத்துப்பால் களவியல், கற்பியல் என இரு பகுதிகளை உடையது.

**வ**ள்ளுவர் தான் எழுதிய 133 அதிகாரங்களுக்குள் உலகில் உள்ள அறநீதி ஒழுக்கக்கருத்துக்களையெல்லாம் எழுதியுள்ளார். அது திருமந்திரம், பகவத்கீதை என்ற நூல்களில் உள்ளவையல்ல, உலகிலுள்ள சகல மத நூல்களிலும் உள்ள கருத்துக்கள் குறள்களில் அடங்கியுள்ளன. கடவுள் வாழ்த்து சகல சமயங்களையும் உள்ளடக்கியது. வான் சிறப்பு என்ற அதிகாரத்தின் பத்தாவது குறள் மழை பெய்யாவிட்டால் உயிர்களுக்கு உண்டாகும் துன்பங்கள் அனைத்தையும் கூறுகிறது. அறன் வலியுறுத்தல் என்ற அதிகாரத்தின் முதலாவது குறள் பகவத்கீதை, திருமந்திரம் கூறும் கருத்துகளையே கூறுகிறது.

**இ**ல்வாழ்க்கை என்ற அதிகாரத்தின் 49ஆவது, 50ஆவது குறள்கள் இல்லற வாழ்வின் முறைமையைக் கூறுகிறது. இது பகவத்கீதை கூறும் ஞானம் யோகத்திற்குச் சமமானதை. அன்புடைமை என்ற அதிகாரம் அன்பே சிவம் என்ற திருமந்திரப் பாடலை நினைவூட்டுகிறது. இனியவை கூறலும் திருமந்திரத்தில் உள்ளவையே. பகவத்கீதை கூறும் ஞான கர்ம சந்நியாச யோகத்தில் உள்ள பத்தாவது, பத்தொன்பதாவது, இருபத்தேளாவது சுலோகங்கள் திருக்குறளின் நடுவுநிலைமை, அடக்கம் உடைமை, ஒழுக்கம் உடைமை ஆகிய அதிகாரங்களில் உள்ள குறள்களின் கருத்தை ஒத்தன.

**இ**துதவிரப் பொறை உடையயில் உள்ள முதலாவது, இரண்டாவது, நான்காவது, ஏழாவது, எட்டாவது, ஒன்பதாவது, பத்தாவது குறள்கள் திருமந்திரம் கூறும் ஞானம், யோகம், சகமாற்றம், சற்புத்திரமார்க்கம் என்னும் பகுதிகளில் இருந்து சிவனின் பெருமைகள் நீக்கினால் வரும் கோட்பாடுகளை ஒத்தது. மொத்தத்தில் திருமந்திரமே திருக்குறளாகும்.

**அ**ழுக்காறாமை, வெஃகாமை, தீவினை, அச்சம், ஒப்புரவு அறிதல், ஈகை, புகழ், அருள், உடைமை, தவம், கூடா ஒழுக்கம், கள்ளாமை, வாய்மை, வெகுளாமை, இன்னாசெய்யாமை, கொல்லாமை, நிலையாமை, துறவு, மெய் உணர்தல், அவா அறுத்தல், ஊழ் என்ற அதிகாரங்களில் கூறப்பட்டவை அனைத்தும் திருமந்திரத்திலும் கூறப்பட்டுள்ளன. திருமந்திரம் கூறிய சிவனின் பெருமைகளைத் திருவள்ளுவர் திரும்பத் திரும்பச் சொல்லாது விட்டிருக்கிறார். அது எழுத்தாளனின் பண்பாகும்.

**நி**லையாமை பற்றித் திருமந்திரம் தனித்தனியாக ஒவ்வொரு செயல்களையும் கூறுகிறது. உதாரணமாக இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை, யாக்கை நிலையாமை என ஒவ்வொன்றையும் தனித்தனியாகச் சொல்லத் திருக்குறள் உலகில் உள்ள அனைத்தும் நிலையானவை அல்ல என்று ஓர் அத்தியாயத்தில் திருமந்திரத்தை விடச் சிறப்பாகச் சொல்கிறது.

**ப**கவத்கீதையின் உள்ளடக்கமே நிலையாமை தான். பகவத்கீதை பதினெட்டு அதிகாரங்களிலும் மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் கூறுவது நிலையாமை பற்றியே, “அர்ச்சுனா, போர் செய்யவென வந்து உன்முன் நிற்போரெல்லாம் முன்பும் இருந்தவர்கள். அவர்கள் கொல்லப்படமாட்டார்கள். உயிரைக் கொல்லும் உரிமை யாருக்கும் இல்லை. யமன் உயிரைக் கவர்ந்து செல்வானே தவிர அதைக் கொல்லமாட்டான். கொல்லவும் முடியாது. யமனால் கவரப்படும் உயிர் இன்னொரு உடலை எடுக்கிறது. யமனால் கூட கொல்ல முடியாத உயிரை உன்னால் கொல்ல முடியுமா. வினைக்கேற்ப உயிர் வேறொரு உடலைப் பெறும். முத்தியடைந்த உயிர் இறைவனைச் சென்றடைந்து இறைவனுடன் இருக்கும். இதுதான் படைப்பின் இரகசியம் நீ உனக்கு விதிக்கப்பட்ட கடமைகளைச் செய்” என்கிறார் கிருஷ்ணர்.

## 08

**ப**கவத்கீதையின் நான்காம் அதிகாரமான ஞானகர்ம சந்நியாசயோகத்தில் யோக சாத்திரம் பற்றிக் கிருஷ்ணர் அர்ச்சுனனுக்குக் கூறுகிறார், ''அர்ச்சுனா, யோகம் அழிவில்லாதது. இதை நான் விவஸ்வான் மனுவுக்கு உபதேசித்தேன். மறு இஷ்வாகுவுக்கு உபதேசித்தான். இவ்யோகத்தை முனிவர்களும், ரிசிகளும், பின் உலகத்தவரும் அறிந்து கொண்டனர். நீ எனது பக்தனாகவும், தோழனாகவும் இருப்பதால் இன்று நான் அதை உனக்கு உபதேசிக்கிறேன் என்று கூறித் தன்னைப் பற்றிய வரலாற்றை எடுத்துக் கூறுகிறார்.

**தி**ருமந்திரம் யோகநிலை பற்றி மிகவும் விரிவாகக் கூறுகிறது. திருக்குறள் யோகநிலை பற்றித் தனியாகக் கூறாது பல அதிகாரங்களில் பகவத்கீதையிலும் திருமந்திரத்திலும் கூறிய யோகக் கருத்துக்களைக் கூறுகிறது. பகவத்கீதை யோகம் பற்றி இவ்வாறு கூறுகிறது, ''ஆசையற்றவன், மனதையும் உடலையும் அடக்கியவன், உடமைகளைத் துறந்தவன், வெறும் உடலால் வினையாற்றுபவன் பாசத்தை அடையமாட்டான்'' பகவத்கீதை, திருமந்திரமும் திருக்குறளும் கூறியது போல உறுதிபடக் கூறவில்லை, ''சில யோகிகள் தேவதைகளுக்கு யாகம் செய்கிறார்கள். இன்னும் சிலர் பிரம்மமாகிய அக்கினியில் ஆத்மாவைக் கொண்டு ஆத்ம கோமம் செய்கிறார்கள். சிலர் அடக்குதல் என்ற அக்கினியில் செவி முதலிய இந்திரியங்களைக் கோமம் செய்கின்றனர். சிலர் சப்தம் முதலிய விஷயங்களை இந்திரியங்கள் என்ற அக்கினியில் கோமம் செய்கின்றனர்''. இவ்வாறு யோகம் பற்றிப் பகவத் கீதை கூறுகிறது. ஒரு சாதாரண மனிதன் எவ்வாறு யோகம் செய்வது என்று திருமந்திரம் விளக்கமாகக் கூறுகிறது.

**ப**கவத்கீதை யோகத்தைப் பற்றியும், அதன் மூலம் ஞானம் பெறும் விதத்தையும் இவ்வாறு கூறுகிறது, ''பணிந்தும், கேட்டும், பணிவிடைகள் செய்தும் நீ யோகத்தைப் பற்றி அறிக. உண்மைகளை உணர்ந்த ஞானிகள் உபதேசிப்பர். யோகசித்தன் நாளடைவில் தன்னகத்தே இந்த ஞானத்தைப் பெறுவான். சிரத்தை உடையவன், புலன்களை வென்றவன், ஞானத்தை விரைவிற்பெற்று மேலான சாந்தியை அடைகிறான்'' இவ்வாறு யோகத்தைப் பற்றியும் ஞானத்தைப் பற்றியும் பகவத்கீதை சொல்கிறது.

**ப**கவத்கீதையின் ஐந்தாம் அதிகாரமான சந்நியாச யோகம் சந்நியாசத்தை விடக் கர்மம் செய்வது மேலானது. விருப்பு வெறுப்பற்றவன் தான் சந்நியாசி. சாங்கிய தத்துவமும் யோகமும் ஒன்று. கர்மயோகம் தான் பிரம்மத்தை அடையச் செய்கிறது. தத்துவம் தெரிந்த யோகி எதைச் செய்தாலும் நான் எதையும் செய்யவில்லை. யாவும் இறைவனின் செயல் என்பான். இப்படியானவர்கள் தாமரை இலையில் நீர் நிற்பது போல இருப்பார்கள். இவர்களைப் பாவங்கள் தீண்டுவதில்லை. யோகிகள் பற்றைத் துறந்து ஆத்ம ஈடேற்றத்திற்காகவே கர்மங்களைச் செய்கின்றனர்.

**யோ**கி பற்றற்றுக் கர்மமாற்றுவதால் அவன் சாந்தி பெறுகிறான். இவன் நவ வாயிலில் இன்புற்றிருப்பான். கர்மங்களை இறைவன் உண்டுபண்ணவில்லை. இயற்கையே இவற்றை உருவாக்குகிறது. அக்ஞானம் ஆத்மஞானத்தால் அழிக்கப்படுகிறது. அந்த ஞானம் சூரியப் பிரகாசம் போல பிரகாசித்து பரம்பொருளை அடையவைக்கிறது. பிராமணர்கள், பசு, யானை, நாய், நாயை உண்ணும் இழிந்தவர்கள் போன்ற அனைவரிடமும் ஞானிகள் சமமாகவே நடந்து கொள்வர்.

**ம**னதைச் சமநிலைப்படுத்தியவர்கள் இம்மையிலேயே பரம்பொருளை அடைந்தவராவர். இவர்களுக்குப் பிரியமானவை என்று எதுவுமில்லை. அதுபோலப் பிரியமில்லாதவை என்றும் எவையுமில்லை. அதனால் அவர்கள் அழியாத இன்பத்தை அடைகின்றனர். இவர்கள் சரீரத்தை விட்டுச் செல்லமுன் காமம், குரோதம், பற்று ஆகியவற்றை நீக்கிவிடுகின்ற யோகியர் ஆவர்.

**ஆ**த்மாவின் இன்பங் கண்டு, ஆத்மாவை விரும்பித் தனக்குத் தேவையானவற்றை ஆத்மாவில் இருந்து பெற்றுக் கொள்கிறானோ அவன் தனக்குத் தானே ஈஸ்வரனாகிவிடுகிறான். விருப்பு வெறுப்புகளில் இருந்து விடுபட்டு மனதை அடக்கி, ஆத்மஞானம் பெற்றயோகி என்றும் பரமானந்தத்தை அனுபவிப்பான். வெளியுலக இன்பங்களை ஒதுக்கி, கண்களைப் புருவங்களுக்கிடையில் நிறுத்தி, பிராண, அபாண வாயுக்களைச் சமப்படுத்தி இந்திரியம், மனம், புத்தியை அடக்கி முத்தியை விரும்பி ஆசை, அச்சம், சினம் ஆகியவற்றை விலக்கி முனிவனைப் போல இருப்பவனே முத்தனாவான். கேள்விகளையும், தகவல்களையும் அனுபவிப்பவன் நானே என்றும் அத்துடன் உலகனைத்திற்கும் இறைவனும் நானே என்றும், உயிர்களுக்கெல்லாம் நண்பனும் நானே என்றும் உணர்பவனே சாந்தியடைகிறான். இவ்வாறு பகவத்கீதை கூறுகிறது.

**அ**டுத்துத் திருமந்திரத்தின் ஆறாவது தந்திரத்தை ஆராய்வோம். இது வியாமளாகமத்தின் சாரமாகும். இது நூற்று இருபத்தெட்டு திருப்பாடல்களைக் கொண்டது. ஐந்தாம் தந்திரம் கூறியபடி பேற்றுக்கு அடிப்படையான சிவநெறியை மேற்கொண்டவர்களை ஆட்கொள்வதற்கு எழுந்தருளிவரும் சிவகுருவைப் பற்றி விபரிக்கிறது. சிவகுருவின் தரிசனம் முதல் பக்குவன் ஈறாகப் பதின்நான்கு பிரிவுகளை உடையது. சிவகுரு பக்குவமடைந்த சிவனடியார்களை ஆட்கொள்வதில் இருந்து அவரது பெருமைகள் யாவும் விளக்கப்படுகிறது. சிவனே சிவகுருவாக வந்து திருவடிப்பேறு கொடுப்பார் என இத்தந்திரம் விரிவாகக் கூறுகிறது.

**ப**கவத்கீதையில் கிருஷ்ணர் நண்பனாகவும், உறவினனாகவும், கடவுளாகவும் வந்து அர்ச்சுனனுக்குக் கீதையை உபதேசித்து அவனைப் பற்றுக்களில் இருந்து நீங்க வைக்கிறார். திருமந்திரத்தில் சிவபெருமான் பக்குவப்பட்ட சிவனடியார்களுக்குக் குருவாக வந்து முத்தியைக் கொடுக்கிறார். ஆராய்ந்து பார்த்தால் இரண்டும் ஒன்று என்று சொல்லலாம். வேறு என்றும் சொல்லலாம். திருமந்திரத்தில் சிவபெருமான் பக்குவப்பட்ட சிவனடியார்கள் அனைவருக்கும் குருவாக வந்து உபதேசித்து முத்தியின்பம் கொடுப்பார். பகவத்கீதையில் அர்ச்சுனனுக்கு மட்டும் உபதேசிக்கிறார்.

**தி**ருவருள் கைகூடப் பெற்ற சிவனடியார்கள் சிவபெருமானைத் தொடர்ந்து தொழுவர். அப்போது சிவபெருமான் சிவகுருவாக வந்து மும்மலங்களையும் அகற்றி உச்சி மீது தனது திருக்கையினை வைத்து அருள், உயிர் அவரது திருவடி உயிரின் உள்ளத்தில் வெளிப்பட்டு அமர்ந்து கொள்ளும். அவ்வாறு சிவனது திருவடி உள்ளத்தில் பதியும்போது பொறிபுலன்களுக்கு அடிமைப்பட்டிருந்த உயிர் அறியாமையை நீக்கிச் சிவனோடு சேர்ந்து கொள்ளும். அப்போது மலமாயை கன்மம் மாயேயம் என்னும் நான்கினது இயல்புகளும் நீங்கும். அவ்வாறு நீங்கியதும் உயிரும் உயிருக்குயிரான சிவனும் ஒன்றுபடும். இவ்வாறு திருமந்திரம் கூறுகிறது. பகவத்கீதை இந்நிலைக்கு ஆட்படுமாறு கூறுகிறது. கிருஷ்ணர் இந்நிலைக்கு அரிச்சுனனை ஆட்படுத்தவே கீதையை உபதேசிக்கிறார். திருமந்திரம் பக்குவப்பட்ட சிவனடியாருக்குத் திருவடிப்பேறு வழங்குகிறது. கீதை பரபரப்பும் பற்றும் மிக்க அர்ச்சுனனைத் திருவடிப்பேற்றிற்குத் தயாராக்குகிறது.

**ஒ**ருவருக்குப் பிறப்பும் இறப்பும் கொடுக்கின்ற துன்பங்களை நீக்கி இறைவனுக்கு அடிமையாகிய மெய்யுணர்வு பெறுதலே துறவும் தவமுமாகும். இவ்வாறு திருமந்திரம் கூறுகிறது. பகவத்கீதை மூன்றாவது அதிகாரமான சந்நியாச யோகத்தின் மூன்றாவது சுலோகத்தில், “துறவி என்பவன் விருப்பு வெறுப்புக்களைக் கடந்தவன், இன்ப துன்பம் என்ற இரு பந்தங்களையும் விட்டு விலகிவிடுவதால் செயல்களைச் செய்வதிலிருந்து விலகிவிடுவான். எல்லாம் இறைவனிலிருந்து உருவானது என்று எண்ணி எல்லாவற்றையும் இறைவனாக எண்ணி செயலற்று இறைநினைவாகவே இருப்பவன் தான் துறவி என்கிறது.

**தி**ருக்குறள் தவம், துறவு பற்றி இரு அதிகாரங்களில் கூறுகிறது. தவம் என்பது தனக்குப் பிறரால் வரும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்வதும் பிற உயிர்களுக்குத் தீங்கு செய்யாமலும், தீங்கு செய்யவேண்டும் என்று நினையாமலும் இருத்தலே. தீமை செய்வோரை அடக்குதலும், நன்மை செய்வோரை உயர்த்துவதும் தவவலிமை உள்ளவர்களால் தான் முடியும். தவவலிமையால் பெருமாற்றலைப் பெற்றவர்கள் மரணத்தையும் வென்றுவிடுவார்கள் என்று தவம் பற்றிக் குறள் கூறுகிறது.

**து**றவு பற்றி வள்ளுவர் மிக அருமையாகக் கூறுகிறார். துன்பமில்லாமல் வாழ விரும்புவோர் பொருட்கள் மீதுள்ள பற்றை நீக்க வேண்டும். நீக்கினால் வாழும் போதே துறவியாகி விடலாம். முற்றும் துறந்தவரே துறவிகளுள் உயர்ந்தவர். அவருக்குப் பிறவித் துன்பம் இல்லை. இப்படியான பற்றுக்களை விடுவதற்கு பற்றில்லாத இறைவன் மீது பற்றுவைவக்க வேண்டும். மெய்யுணர்வு இல்லாதவர்கள் ஐம்புலன்களின் உணர்வுகளையும் பணம், பொருள், செல்வாக்கு ஆகிய அனைத்தையும் பெற்றிருந்தாலும் அவற்றில் பயன்களைப் பெறமாட்டார். எப்பொருளினதும் வெளித்தோற்றத்தைக் கண்டு மயங்காமல், அதன் உண்மையான தன்மையை அறிவதே மெய்யுணர்ந்த அறிவாகும். கற்கவேண்டியவற்றைக் கற்று அதன் உண்மையான பொருளை உணர்ந்து கொண்டவர்கள் மீண்டும் பிறவிகளை எடுக்கமாட்டார்கள். துன்பங்களுக்குக் காரணம் அறியாமையாகும். அறியாமை நீங்கினால் மெய்யுணர்வு உண்டாகும். இவ்வாறு மெய்யுணர்தல் என்ற அதிகாரத்தில் வள்ளுவர் கூறுகிறார். மெய்யுணர்ந்தவர்கள் துறவிகளாவர்.

**அ**வா அறுத்தல் என்ற அதிகாரத்தில் வள்ளுவர் இவ்வாறு கூறுகிறார். துன்பங்களுக்குக் காரணம் அவா என்ற ஆசை. ஆசைதான் துன்பங்களின் விதையாகும். ஒருவன் மறுபடியும் பிறக்காத நிலையே விரும்ப வேண்டும். விரும்பும் போகப் பொருட்கள் யாவும் துன்பங்களைத் தந்து பிறவிகளைக் கொடுக்கும். ஆசை அற்ற நிலையே உலகில் உள்ள செல்வங்கள் அனைத்திலும் உயர்ந்த செல்வம். அது தூய்மையான நிலை. அதனால் இறைவனை அடையும் நிலை ஏற்படும். ஆசை ஒருபோதும் அமடங்கமாட்டாது. நாட்செல்லச் செல்லப் பெருகி வளர்ந்து கொண்டே இருக்கும். அதன் வளர்ச்சியைக் கணக்கிடவோ கண்டுகொள்ளவோ முடியாது. வள்ளுவர் தான் எழுதிய 133 அதிகாரங்களிலும் ஆசையைப் பற்றிக் கூறுகிறார். தவம், துறவுக்கு மட்டுமல்ல ஆசை விரோதி உலகில் உள்ள அனைத்து விடயங்களிலும் ஆசையே விரோதியாக மாறி அனைவரினதும் வாழ்வை கெடுக்கிறது என்பதை வள்ளுவர் காமத்துப்பாலிலும் கூறுகிறார். காமத்தின் மீது ஆசை கொண்டோர் படும் துன்பங்கள் காமத்துப்பாலில் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன.

**அ**ன்பும் அறமும் தான் இல்வாழ்க்கை என்று கூறும் வள்ளுவர் அறத்துப்பாலிலும் பொருட்பாலிலும் உள்ள 108 அதிகாரங்களிலும் அன்பும் அறமும் தான் வாழ்க்கை சிறக்கக் காரணம் என்று வெளிப்படாது உள்நின்று கூறுகிறார். உதாரணமாக வாழ்க்கைத் துணை நலம், மட்கட்பேறு, அன்புடைமை, விருந்தோம்பல் இப்படியே எல்லா அதிகாரங்களுக்கும் அன்பும் அறமும் தான் மூலகாரணமாக விளங்குகிறது என்று கூறுகிறார். இதையே திருமந்திரமும் கூறுகிறது. அன்பே சிவம் என்றும் அன்பு செய்பவரை அறிவான் சிவன் என்றும் கரு உற்பத்தி என்ற பகுதியில் கணவனும் மனைவியும் மிக்க அன்புடன் சிவனினைவாகச் சேர்ந்திருத்தல் வேண்டும். அப்படிச் சேர்ந்திருந்தால் உத்தமமான சற்புத்திரன் அவதரிப்பான் என்று கூறுகிறார்.

**09**

**ஆ**றாவது அதிகாரமான தியானயோகத்தில் கிருஷ்ணர் அருச்சுனனுக்குச் சொல்கிறார், ‘‘அர்ச்சுனா, பலனை எதிர்பாராது செய்ய வேண்டிய கர்மங்களைச் செய்பவனே சந்நியாசி. சந்நியாசம் தான் யோகமாகும். சந்நியாசிக்கு கர்மம் செய்வது கட்டாயமானது. தியானம் சித்தியடைந்தவனுக்கு செயலற்றிருப்பதே சிறந்ததாகும். இவ்வாறு செயற்படுபவன் யோகாரூடன் எனப்படுகிறான். ஒருவன் தன்னைத் தான் தான் உயர்திக்கொள்ளல் வேண்டும் ஏனென்றால் அவன் தான் அவனுக்கு நண்பனும், பகைவனுமாவான். தன்னைத் தான் வென்றவனுக்குத் தானே உறவினனாவான். அவனுக்கு எவ்வேளையிலும் பரமாத்மாவைத் தரிசிக்கும் பேறுகிடைக்கும். இத்தகை யோகி சமாதியில் உறுதிபெற்றவனாகிறான். சமூகத்தில் வாழ்கின்ற நல்லவர்கள், கற்றவர்கள், தீயவர்கள், கீழானவர்கள் ஆகிய அனைவரிடத்தும் சமமாகப் பழகுபவன் மேலோன்.

**யோ**கி என்பவன் யாருமில்லாத இடத்தில் தனிமையில் இருந்து மனதையும், உடலையும் அடக்கிக் கல்லாக்க வேண்டும். பொருத்தமான ஆசனத்தை அமைத்து மனதை ஒருமுகப்படுத்தி யோகம் பயில வேண்டும். இவ்வாறு முறைப்படி யோகம் பயில்பவன் முற்றுப்பெறுகின்ற சாந்தியைப் பெறுவான். யோகத்தைப் பயிலும் போது அளவாக உண்ண வேண்டும். உண்ணாமல் நோன்பிருத்தல் ஆகாது. அப்படியான நிலையில் மனம் ஆத்மாவில் நிலைத்திருக்கும். அதுவே உறுதியான யோகமாகும்.

**து**ன்பங்களை விலக்குவதே யோகமாகும். இதற்கு இந்திரியங்களை அடக்கவேண்டும். அதனால் அலைந்து செல்லும் மனதை உறுதிசெய்து ஆத்மாவில் நிலைநிறுத்த வேண்டும். இந்நிலை ஏற்பட்டால் யோகிதானே பிரம்மமாகிறான். அதனால் பேரானந்தத்தைப் பெறுகிறான். இவன் எல்லா உயிர்களிலும் பகவானான நான் இருப்பதை உணர்ந்து என்னுள் இருப்பவனாகிறான். அவ்வாறு சிரத்தையுடன் மனதை என்மீது வைத்து என்னைப் பூசிப்பவர்கள் யோகியருள் மேலானவர்கள் என்று கிருஷ்ணர் அர்ச்சுனனுக்குக் கூறுகிறார். திருமந்திரம் தவம், துறவு, யோகிகள் பற்றி மிகவும் விரிவாகப் பகவத்கீதையில் கிருஷ்ணர் கூறுவது போலக் கூறுகிறது. பகவத்கீதையில் எல்லாம் தான் தான் என்று கிருஷ்ணர் கூறுகிறார். திருமந்திரத்தில் திருமூலர் எல்லாம் சிவன் செயல் என்று கூறகிறார். ஒருவர் தன்னைப்பற்றிக் கூறுவதைவிடப் பிறர் சிறப்பாக அவரைப்பற்றிக் கூறுவார்கள். இந்த வகையில் திருமந்திரம் சிவனைப்பற்றிச் சிறப்பாகச் சொல்கிறது.

**ப**கவத்கீதை பல விடயங்களைத் திருமந்திரத்தைப் போலத் திரும்பத் திரும்பச் சொல்கிறது. கர்மயோகம், ஞானகர்ம சந்நியாச யோகம், சந்நியாச யோகம், தியானயோகம் என்பவற்றில் ஆத்மா, கடவுள், மனிதன் பற்றிய தகவல்கள் சற்று வித்தியாசமாகச் சொன்னாலும் சொன்னவற்றையே திரும்பவும் சொல்வது போன்ற உணர்வு உண்டாகிறது. ஏனைய அத்தியாயங்கள் எழுதும் போது இதுபற்றிய மேலதிகத் தகவல்களைத் தருவேன். திருக்குறள் சொன்னதைத் திரும்பச் சொல்வதில்லை. திருமந்திரமும், பகவத்கீதையும் சொன்னவற்றைத் திருக்குறள் சுருக்கமாகவும், விளக்கமாகவும் கூறுகிறது. அத்துடன் ஒருவர் தனது வீட்டில் இருந்து மனைவி, பிள்ளைகள், சுற்றத்தவருடன் அன்பாகவும், பண்பாகவும், முறைப்படியும் பழகித் தவம் செய்யலாம். யோகம் செய்யலாம். பற்றுடன் அவர்களை நேசிக்கலாம். ஆனால் தீயபற்றுக்கள் கொள்ளக்கூடாது என்று திருக்குறள் கூறுகிறது.

**அ**டுத்துத் திருமந்திரத்தின் ஏழாவது தந்திரத்தை ஆராய்வோம். இது காலோத்தராகமத்தின் சாராம்சமாகும். இதில் நானூற்று ஏழு திருப்பாடல்கள் உண்டு. ஆறாதாரம் முதல் கிதோபதேசம் ஈறாக முப்பது பகுதிகளைக் கொண்டது. இது பேற்றுவழிபாடான சிவலிங்கவழிபாடு பற்றிச் சிறப்பாகவும் விரிவாகவும் கூறுகிறது. அத்துடன் சிவலிங்கத்தின் வகைகள் அனைத்தையும் கூறுகிறது. அத்துடன் சிவலிங்க வழிபாடு மிகவும் தொன்மையானது என்றும் அவ்வழிபாடு அன்று எவ்வாறு இருந்ததென்றும் கூறுகிறது. அத்துடன் சிவகுருவைப் பற்றியும், அவரது செயல்களைப் பற்றியும் விரிவாகக் கூறுகிறது.

**ப**ல்வேறுவகையான லிங்கங்கள் பற்றியும், அவற்றின் அருள்நிலை பற்றியும், அவற்றை வழிபடும் முறை பற்றியும் இத்தந்திரம் விரிவாகக் கூறுகிறது. குறிப்பாக ஆத்மலிங்கம் (உயிர்ச்சிவம்) பற்றி விசேடமாகக் கூறுகிறது. நாதமே சிவலிங்கமாகும் ஆதாரவிந்துபீடமாகும். இவ்விரண்டின் புணர்ச்சியே ஆத்மலிங்கமாகும். எட்டாம் தந்திரம் சுப்பிராகமமாகும். இது ஐஞ்நூற்றெட்டுத் திருப்பதிகங்களை உடையது. இது உடலிற் பஞ்சபேதம் முதல் சோதனை ஈறாக முப்பத்து மூன்று பிரிவுகளை உடையது. இது உடலின் பஞ்சபேதங்களை விளக்குகிறது. ஒன்பதாம் தந்திரம் மகுடாகமாகும். இது குருமடதரிசனத்தில் இருந்து சர்வவியாபிவரை கூறுகிறது. நானூறு திருப்பாடல்களைக் கொண்ட ஒன்பதாவது தந்திரம் குருமடதரிசனம், ஞானகுரு தரிசனம், பிரணவசமாதி என்பன பற்றிக் கூறுகிறது.

**ப**கவத்கீதையின் ஏழாவது அதிகாரம் ஞான விக்ஞானயோகமாகும். இதில் கிருஷ்ணர், ‘‘அர்ச்சுனா, பற்று என்ற மயக்கம் தீர என்னைச் சரணடை. என்னிடம் அடைக்கலம் பெறு. என்னை முழுமையாக அறிந்து கொள். ஆயிரக்கணக்கான மனிதர்களுள் யாரோ ஒருவன் மனநிறைவின் பொருட்டு முயன்று என்னை உள்ளபடி அறிகிறான். எனது பிரகிருதி எட்டுவிதமாகப் பிரிக்கப்பட்டுள்ளது. எனக்கு மேலானது எதுவும் இல்லை. நூலிலே மணிகள் கோர்க்கப்பட்டது போல இவையாவும் என்மீது கோர்க்கப்பட்டுள்ளன’’ இவ்வாறு கிருஷ்ணன் தனது மகிமைகள் பெருமைகளை அர்ச்சுனனுக்குக் கூறுகிறார். உலகில் உள்ள பொருட்கள் எல்லாம் நானே என்றும், அவை என்னால் தான் இயங்குகின்றன என்றும் கூறுகிறார்.

**ப**கவத்கீதையில் கிருஷ்ணர் தன்னைப்பற்றியும் தனது மகிமைகள், பெருமைகள் பற்றியும் தானே கூறுகிறார். திருமந்திரத்தில் திருமூலர் கிருஷ்ணர் கூறிய பெருமைகள் அனைத்தும் சிவபெருமானிடம் உள்ளன என்றும், கிருஷ்ணருக்கு அருள்வதும் சிவபெருமான் என்றும் கூறுகிறார். அத்துடன் சிவனைச் சுத்தமான தமிழ் மந்திரத்தைக் கூறி வணங்கும்படியும் கூறுகிறார்.

**எ**ட்டாவது அதிகாரமான அக்ஷரப் பிரம்மயோகத்தில் பிரம்மத்தைப் பற்றியும் அதியக்ஞன் பற்றியும் பகவான் கிருஷ்ணர் அர்ச்சுனனுக்கு விளக்குகிறார். ‘‘மரணகாலத்தில் என்னை நினைக்கும் ஆத்மா துன்பமற்ற நிலையை அடையும். இறுதிக்காலத்தில் ஒருவர் எதை நினைத்துக் கொண்டு உயிரைவிடுகிறாரோ, அவர் அதையே அடைவார். ஆதனால் எப்போதும் என்னை நினைத்தவாறு செயற்படு என்னை அடைவாய். உயிர்கள் யாவும் யாரிடமிருந்து வந்ததோ, எவரால் உலகம் வியாபித்திருக்கின்றதோ அந்தப் பரம்புரிசனை பற்றில்லாத பக்தியினால் அடையலாம்’’.

**கி**ருஷ்ணர் அர்ச்சுனனுக்கு உபதேசிக்கும் கடவுள்க் கோட்பாடு திருமந்திரத்தில் திருமூலரால் சொல்லப்படுகிறது. திருமந்திரம் சிவபெருமானைப் பற்றியும், பகவத்கீதை கிருஷ்ணரைப் பற்றியும் கூறுகிறது. திருக்குறள் ஒரே ஒரு குறளில் மட்டும் கடவுளைப்பற்றிக் கூறுகிறது. கடவுள் வாழ்த்தில் ஒன்பதாவது குறளில் சிவபெருமானைப் பற்றிக் கூறிவிட்டு ஏனைய குறள்களில் கடவுளை வணங்கினால் எல்லா நன்மைகளையும் பெறலாம் என்று கூறுகிறது. அத்துடன் பகவத்கீதை அரசர்களுக்கு உபதேசிக்கப்பட்டது. குறளும், திருமந்திரமும் சகல மக்களுக்கும் சொல்லப்பட்டன.

**தி**ருக்குறள் கடவுள் வாழ்த்துக்குப் பின் வான்சிறப்புப் பற்றி அழகாகக் கூறுகிறது. அவையாவும் திருமந்திரத்தில் முறைபே கூறப்பட்டுவிட்டன. பகவத்கீதை கூறும் தத்துவங்கள் யாவும் சாதாரண மக்களுக்கும் பொருந்தும். ஆனால் போர்க்களத்தில் அர்ச்சுனன் பற்று மேலீட்டால் மனம் குழம்பியபோது நீதியை நிலைநாட்டவெனத் தொடக்கப்பட்ட போர் நிறுத்தப்படலாம். அல்லாவிட்டால் பாண்டவர்களுக்குத் தோல்வி ஏற்படலாம் என்ற காரணத்தால் தான் கீதை போர்க்களத்தில் உபதேசிக்கப்பட்டது. சிறுவயதில் இருந்து கௌரவர்களைப் பழிவாங்க வேண்டும் என்று மிக மிகக் கொடூரமாகக் கோபங்கொண்டு சபதமிட்ட அர்ச்சுனன் போர்க்களத்தில் இவ்வாறு மனம்மாறுவான் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. முன்பெல்லாம் அர்ச்சுனனும் வீமனும் அளவுக்கதிகமாகக் கோபங்கொண்டு கௌரவர்களைக் கொல்ல ஆயத்தமான போது அதைத்தடுத்த கிருஷ்ணர் போர்க்களத்தில் அர்ச்சுனன் போர் செய்யமாட்டேன் என்று கூறி காண்டீபத்தைத் தேர்த்தட்டில் வைத்துவிட்டு அமர்ந்தபோது கிருஷ்ணன் நீதியை நிலைநாட்டச் செய்த உபதேசம் தான் பகவத்கீதை.

**தி**ருமந்திரம் மிக மிக அமைதியாகப் பகவத்கீதை கூறிய பல விடயங்களைக் கூறுகிறது. திருக்குறள் பகவத்கீதை கூறிய கடவுள் பற்றிய கோட்பாட்டை இலகுபடுத்தி தேவையற்றவற்றை நீக்கிவிட்டுச் சொல்கிறது. இதுபோலவே திருமந்திரம் கூறிய சிவபெருமான் பற்றிய செய்திகளை முழுமையாக நீக்கிவிட்டு அறநீதி ஒழுக்கக் கருத்துக்களை மட்டும் கூறுகிறது. புராணங்கள் பிராமணர்களுக்குக் கொடுக்கப்படும் தானங்களால் தான் பெரும்பயன்கள் வருகின்றன என்று கூறத் திருமந்திரமும் திருகுறளும் இரப்பவர்க்கெல்லாம் பாகுபாடுகாட்டாது கொடுத்துதவுங்கள் என்று கூறுகின்றன.

**ப**கவத்கீதையும், குறளும் சொல்லும் பல விடயங்களைத் திருக்குறள் சொல்கிறது. எட்டாம் தந்திரத்தில் அவத்தைபேதம், ஞானியின் செயல், வாய்மை பற்றிக் கூறுகிறது. ஒன்பதாவது தந்திரம் மகுடாகமத்தின் சாரமாகும். இத்தந்திரத்தில் அனைந்தோர் தன்மை, ஊழ் ஆகிய இரு அதிகாரங்கள் உள்ளன. பகவத்கீதை அணைந்தோர் தன்மைபற்றி வெளிப்படையாகத் தனியான தலையங்கத்தின் கீழ் கூறாவிட்டாலும் அதைப் பற்றிப் பல யோகங்களில் சிறப்பாகக் கூறுகிறது.

**ப**கவத்கீதையும் திருமந்திரமும் வழிபாடு பற்றிக் கூறுகின்றன. கன்மம் மறு பிறப்பு பற்றி திருமந்திரமும், பகவத்கீதையும், திருக்குறளும் ஒரேமாதிரிக் கூறுகின்றன. சாங்கியயோகத்தில் ஆத்மா அழிவில்லாதது அதைக் கொல்லாமுடியாது. அதைக் கொல்வதாக நினைப்பவர்கள் அறிவிலிகள் என்று கூறுகிறது. ஆனால் திருமந்திரமும் திருக்குறளும் கொலை செய்வது பெரும்பாவமானது என்று கூறுவதோடு உயிர்களைக் கொல்லாமல் வாழ்வது தான் உயர்ந்தமேலான அறம் என்றும் கூறுகிறது. கொலை செய்தோர் அடுத்து வரும் பிறவிகளில் நோய்மிகுந்த உடம்போடு வறுமையில் வாடுவர் என்றும் திருக்குறள் கூறுகிறது. இதைச் சிறிது மாறுபாட்டுடன் திருமந்திரம் கூறுகிறது. திருமந்திரப் பாடல்களில் உள்ள பாடல்களில் சிவனின் பெருமைகளையும், அருள்நிலையையும் வள்ளுவர் நீக்கிவிட்டுக் காலத்திற்கேற்றவகையில் அவற்றைக் குறள்களாக மாற்றியுள்ளார்.

**அ**த்துடன் புலால் உண்பதைத் திருக்குறளும் திருமந்திரமும் கண்டிக்கின்றன. கொலை செய்யும் ஆயுதங்களைக் கையில் வைத்திருப்பவனின் நெஞ்சில் இரக்கமிராது, அருளும் இராது புலால் உண்பவனை நகரம் ஒருபோதும் வெளியேவிடாது. புலால் உண்ணாமல் வாழ்வோரை உலகில் உள்ள உயிர்கள் எல்லாம் கைகூப்பித் தொழும் என்று திருமந்திரமும் திருக்குறளும் கூறுகிறது.

**ப**கவத்கீதையின் ஒன்பதாவது அதிகாரமான ராஜவித்தியா ராஜகுஹ்ய யோகத்தில் பகவான் கிருஷ்ணர் அர்ச்சுனனுக்கு ஞானத்தை உபதேசிக்கிறார், “அர்ச்சுனா, ஞானம் தானவித்தைகளுக்கெல்லாம் அரசன். வேதத்தை விடச் சிறப்பானது. தூய்மையானது. தர்மமானது. கடைப்பிடிப்பதும் இலகுவானது. இதில் சிரத்தை உள்ளவர்கள் தான் என்னை வந்தடைவர். ஐம்பூதங்களும் என்னுள் நிலைபெற்றிருக்கின்றன. அவற்றை இல்லாமற் பண்ணுவதும், தோற்றுவிப்பதும் நான் தான் என்னை நம்பாதவர்கள் இராட்சத இயல்பை அடைகின்றனர்.

**எ**ன்மீது பற்றுக் கொண்ட மகாத்மாக்கள் தாமும் இன்புற்று மற்றவர்களையும் இன்புற வைக்கின்றனர். நானே உலகில் உள்ள அனைத்துமாக இருக்கிறேன். உதாரணமாக மந்திரங்களும் நானே, கோமமும் நான், கோமநெய்யும் நான். அக்கினியும் நான். எனக்குதான் தானம் செய்யப்படுகிறது. அத்துடன் தாய், தந்தை, பாட்டன் ஆகிய அனைவரும் நானே. இவ்வாறு உலகில் உள்ள அனைத்தும் தான் தான் என்று கிருஷ்ணர் அருச்சுனனுக்கு உபதேசிக்கிறார்.

**இ**வ்வாறு கிருஷ்ணர் உலகில் உள்ள பொருட்கள் யாவும் தானே என்கிறார். திருமந்திரத்தில் திருமூலர் நான் அடியவன், எளியவன், கடையவன் என்று கூறி உலகில் உள்ள அனைத்தையும் படைத்துக் காத்து அருளி மறைந்து அழிப்பவன் சிவபெருமான் என்கிறார். இரண்டு நூல்களையும் சொல்பவர் இருவராக இருந்தாலும் சொல்லப்படும் விடயங்கள் ஒன்றாக வேறுபாடுகள் இன்றிக் காணப்படுகின்றன.

**தி**ருவள்ளுவர் திருமூலர் சொன்ன கடவுளின் அருள்நிலையை ஒப்புக்கொள்கிறார். கடவுள் வாழ்த்தில் கூறப்பட்ட கடவுளின் இலட்சணங்களை விட வேறு அதிகாரங்களில் கடவுளைப்பற்றி அவர் எதுவும் சொல்லவில்லை. எனினும் அவர் ஒவ்வொரு அதிகாரங்களிலும் சொல்லப்பட்ட அறநீதி ஒழுக்கக் கருத்துக்கள் எல்லா சமயங்களுக்கும் பொருத்தமானவையாக இருக்கின்றன உதாரணமாக நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல், இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணை நலம், மக்கட்பேறு, அன்புடைமை என்ற அதிகாரங்களில் அன்பே ஊடுருவி நிற்கின்றது. இதே அதிகாரங்கள் திருமந்திரத்திலும் உள்ளன. இவ்வதிகாரங்களின் மூலமாகத் திகழ்வது அன்பு. அதைவிடத் திருமூலர் அன்பே சிவம் என்கிறார். இதை உபநிடதங்கள் உறுதி செய்கின்றன. அன்பு செய்வாரை அறிவான் சிவன் என்ற திருமந்திரத்தின் பகுதி அன்பை சிறப்பாக விளங்குகிறது.

**10**

**வி**ருந்தோம்பல் என்ற அதிகாரம் தானம் செய்வதைக் குறிக்கிறது. இனியவை கூறலும் ஒருவகைத் தானம் தான். பொருள், உணவு, உடைகள், பணம் முதலியவற்றைக் கொடுப்பது மட்டும் தானமல்ல. நல்ல உபதேசம் செய்வது, புத்திமதி கூறலும், ஆலோசனை கூறுவதும் சிறந்த தானம் என்று திருக்குறளும் திருமந்திரமும் கூறுகின்றன. அந்த வகையில் பார்த்தால் பகவத்கீதையில் மேலான தானத்தைப் பக்தனுக்கு வழங்குகிறது. சோர்வையும், களைப்பையும் நீக்கி உற்சாகத்தையும் நம்பிக்கையையும் கொடுக்கும் நூலாகவே பகவத்கீதை உள்ளது. கடவுளின் தோற்றத்தையும், இயல்பையும், அவரை வழிபடுவதால் உண்டாகும் நற்பயன்களையும் கூறுவதால் அதை நம்பும் பக்தர்கள் பெரும் நன்மை அடைவர்.

**தி**ருமந்திரமும், சிவனின் தோற்றத்தையும் அருட்செயல்களையும், அற்புதங்களையும், திருவிளையாடல்களையும் கூறுவதால் அது சிவனடியார்களுக்கு உற்றதுணைவனாக விளங்குகிறது. பகவத்கீதை கடவுள் தன்னைப் பற்றிக் கூறி அதை உரிய முறையில் மக்கள் பின்பற்றி நடத்தால் இன்பமாக வாழலாம். பிறவித்துன்பமும் இருக்கமாட்டாது என்கிறார். திருமந்திரம் திருமூலரால் உபதேசிக்கப்பட்டது. சிவனின் பெருமையையும் அருள்நிலையையும் சிவனை வணங்கும் முறைகளையும் கூறுகிறது. அதையும் பின்பற்றி வாழ்ந்தால் பூமியில் இன்பமாக வாழலாம். பிறவித்துன்பமிராது. சிவபெருமானுடன் கூட இருக்கலாம் என்கிறது.

**ப**கவத்கீதை வைணவர்களுக்காகக் கூறப்பட்ட நூல் இருப்பினும் இந்துசமயத்தவர் அதைப்படிக்கலாம். அதைக் கைக்கொள்ளலாம். அதுபோலத் திருமந்திரம் சைவசமயத்தவர்க்கென எழுதப்பட்டது. இந்துசமயத்தினர் அதைக் கைக்கொள்ளலாம் இந்துசமயத்தைச் சேர்ந்த ஆறு சமயத்தவர்களும் சிவனையும், கிருஷ்ணனையும் வணங்குகிறார்கள். இருவருமே இந்து சமயத்தினரின் முக்கியமான தெய்வங்கள். ஆனால் முழுமையான வாழ்க்கைத் தத்துவங்களை உபதேசித்து, அதைப் பின்பற்றுவதன் மூலம் பிறவிகளை நீக்கி இறைவனை அடையலாம் என்று கூறிய திருவள்ளுவரை ஒரு நாயன்மாராகவோ, அல்லது இறைவனாகவோ, அல்லது இறைதூதராகவோ யாரும் ஏற்காதுவியப்பை அளிக்கிறது. ஆனால் உலகில் உள்ள ஏனைய சமயமக்கள் திருக்குறளைத் தமக்கும் உரியவேத நூல் என்று ஏற்றுக்கொண்டுள்ளனர்.

**அ**டுத்துப் பகவத்கீதையின் பத்தாவது அதிகாரமான வீபூதியோகத்தில் அர்ச்சுனனுக்குப் பகவான் கிருஷ்ணர் தனது பெருமைகளைப் பற்றி விபரிக்கிறார், ‘‘நான் ஆதியில்லாதவன், பிறவாதவன், உலகிற்குத் தலைவன், புத்தி, ஞானம், மயக்கமின்மை போன்ற அனைத்து குணதிசயங்களும் என்னிடமிருந்தே உயிர்களைச் சென்றடைகின்றன. மகரிஷிகள் ஏழுவரும், மனுக்கள் நால்வரும் எனது மனதில் உதிந்தவர்களே. இவற்றை அறிபவன் யோகியாகிவிடுவான். அனைத்தும் என்னிடமிருந்தே பிறந்தன. அவை என்னிடமிருந்தே விரிகின்றன. இதை ஞானிகள் அறிவர். அவர்களுக்கு நான்

புத்தியோகத்தை வழங்கி, என்னுடன் சேர்த்துக்கொள்கிறேன். எனது வீபூதியின் விஸ்தரிப்புக்கு முடிவில்லை'' என்று கூறிய மகாவிஷ்ணு தனது வீபூதிகளை அர்ச்சுனனுக்கு விளக்குகிறார்.

‘‘**அ**ர்ச்சுனா, ஒளிர்பவைகளுள் நான் சூரியன். மருத்துக்களுள் மரீசி, வேதங்களுள் நான் சாமவேதம், தேவர்களுள் நான் இந்திரன், இந்திரிங்களுள் நான் மனம், இது தவிர சங்கரனாகவும், குபேரனாகவும், அக்கினியாகவும், மேருமலையாகவும், பிரகஸ்பதியாகவும், முருகக்கடவுளாகவும், கடலாகவும், அரசமரமாகவும், கபிலமுனியாகவும், உச்சிரனவாய்சாகவும், ஐராவதமாகவும், வஜ்ராயுதமாகவும், காமதேனுவாகவும், வாசுகியாகவும், அனந்தனாகவும், வருணனாகவும், யமனாகவும், சிங்கமாகவும், கருடனாகவும், காற்றாகவும், இராமனாகவும், கங்கைநதியாகவும், அகரமாகவும், மரணமாகவும், பெண்மைக்குள் தின்மையாகவும், வசந்தகாலமாகவும் இருப்பவன் நானே.

**ஒ**வ்வொரு வகையான பிரிவினர்க்கும் தான் தான் தலைவன் என்று கிருஷ்ணர் அர்ச்சுனனுக்குக் கூறுகிறார். இது சைவசமயத்தைப் பொறுத்தவரையும் பொருந்தும். திருமூலர் உலகத்தையும், உலகத்தில் உள்ள உயிர்களையும், பொருட்களையும் படைத்த சிவபெருமான் அவற்றிற்குள்ளே வீற்றிருக்கிறார் என்கிறார். மனம் ஆயிரம் இதழ்களைக் கொண்ட தாமரை. அதில் சிவபெருமான் வீற்றிருப்பதாகத் திருமூலர் பல பாடல்களில் கூறியுள்ளார். அத்துடன் இந்த தெய்வங்கள் அனைத்திற்கும் மிருகங்களும் பறவைகளும் வாகனங்களாக உள்ளன. சிவனுக்குக் காளை வாகனமாகும். அதுபோல கிருஷ்ணருக்குக் கருடன் வாகனமாகும்.

**மூ**ன்று நூல்களும் வணங்கும் முறையில் சிறிது வேறுபட்டாலும், இந்துசமய வணக்க முறையையே மூன்று நூல்களும் அனுசரிக்கின்றன திருக்குறள் வணங்கும் முறைபற்றி எந்த ஒரு குறளிலும் கூறவில்லை. வணங்கும் படியும் கூறவில்லை. எழுத்துக்களுக்கு அகரம் முதலாக உடையது போல உலகிற்கு முதலானவன் ஆதிபகவன் என்று கூறுகிறது. பகவத்கீதையும் விஷ்ணுபுராணங்களும் உலகிற்கு முதல்வன் சூரியனாகப் பிரகாசிக்கும் மகாவிஷ்ணு என்கின்றன. சிவபுராணங்களும் திருமந்திரமும் (சிவமகாபுராணம்) உலகிற்கு முதல்வன் சிவசூரியனான சிவபெருமான் என்கின்றன. சிவமகாபுராணத்தில் திருமாலும் மகாவிஷ்ணுவும் அவர்களிடையே தோன்றிய ஒளியின் அடிமுடி தேடிய கதையில் அந்தப் பேரொளி சிவசூரியனான சிவபெருமான் என்கின்றது.

**இ**வ்வாறு இந்துசமய புராணங்கள் பல்வேறு விடயங்களில் வேறுபட்டிருக்கின்றன. இதைவிடக் கற்றவர்கள் கடவுளை வணங்காவிட்டால் அவர்கள் கற்ற கல்வியால் பயனேற்படாது என்றும் வள்ளுவர் கூறுகிறார். மலரின் மீது வீற்றிருக்கின்ற கடவுளின் திருவடியை நினைப்பவர்கள் பூமியில் நெடுங்காலம் இன்பமாக வாழ்வர் என்றும், விருப்புவெறுப்பில்லாக் கடவுளின் திருவடியை வணங்குபவர்களுக்கு எத்தகைய துன்பங்களும் வராது என்றும், அத்துடன் இவர்களை இருவினைகளும் தொடரமாட்டாது என்றும், கடவுளைப் போற்றுபவர்கள் நிலையான இன்பமான வாழ்வு வாழ்வர் என்றும், கடவுளின் பாதங்களை அடையாதவர்களால் மனக் கவலையை மாற்ற முடியாது என்றும், உலக ஆசைகளில்

இருந்து அவர்களால் மீளமுடியாதென்றும், இறைவனை வணங்காத தலை பயனில்லாத தலை என்றும், இறைவனின் திருவடியைச் சேர்ந்தவர்களுக்குப் பிறவித் துன்பம் இல்லை என்றும் கூறுகிறாரே தவிர வணக்க முறைகள் பற்றிக் கூறவில்லை.

**தி**ருக்குறளுக்கு முன் எழுதப்பட்ட நூல்களில் கடவுளை வணங்கும் முறைகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. சிவன், பிள்ளையார், முருகன், வைரவர் ஆகியோரையும் ஏனைய கடவுள்களையும் வணங்கும் முறைகள் பற்றியும், அவர்களுக்கு விருப்பமான உணவுகள், இலைகள், வாகனங்கள் பற்றியும் விரிவாகக் கூறியதால் வள்ளுவர் வணக்க முறைகளைக் கூறாதுவிட்டிருக்கலாம். அத்துடன் வள்ளுவர் திருமந்திரத்தைத் தழுவியே திருக்குறளை எழுதினார். திருமந்திரம் ஏராளமான வழிபாட்டு முறைகளைக் கூறுகிறது. வள்ளுவர் சுத்தமான மணதை இறைவனுக்கு அர்ப்பணியுங்கள், பற்றுக்களில்லாத சுத்தமான மனதுடன் செயலாற்றுங்கள் என்றே எல்லா அதிகாரங்களிலும் சொல்கிறார். திருக்குறள் இதுவரை வெளிவராத புதிய இலக்கிய வடிவம். அதனால் வணக்க முறைகளை எழுதாதுவிட்டிருக்கலாம்.

**தி**ருமந்திரம் சக்கரவழிபாடு பற்றி மிகவும் விரிவாகக் கூறுகிறது. சக்கரங்களை அமைக்கும் விதம். வணங்கும் முறைகள் பற்றியும் திருமூலர் கூறுகிறார். முக்கியமானது சக்கரங்கள், திருவம்பலச்சக்கரம். இது பற்றித் திருமூலர் எண்பத்து மூன்று செய்யுள்களில் கூறுகிறார். இச் சக்கரத்துள் ஐந்தெழுத்தை அமைக்கும் முறைகள் சிவபெருமானை அச்சக்கரத்தில் அமர்தல், பூசை செய்தல் பற்றி விரிவாகக் கூறுகிறார்.

**ம**ற்றும் திரிபுரைச் சக்கரம், ஏரொளிச் சக்கரம், வயிரவர் சக்கரம், சாம்பவி மண்டலச் சக்கரம், புவனாபதிச் சக்கரம், நவாக்கரிச் சக்கரம் ஆகிய சக்கர வழிபாடு பற்றித் திருமூலர் நான்காவது தந்திரத்தில் கூறுகிறார் மகாவிஷ்ணுவின் ஆயுதம் சக்கரம். அந்த வலிமைமிக்க பயங்கரமான சக்கரத்தை சிவபெருமான் மகாவிஷ்ணுவுக்கு வழங்கினார். அச்சக்கராயுதம் போரில் பல அசுரர்களைக் கொன்றது. பாரதயுத்தத்தின் போது மகாவிஷ்ணு சக்கராயுதத்தைப் பாவிக்கவில்லை. அந்த வலிமைமிக்க சக்கராயுதத்தையும் சங்கையும் வைணவர்கள் மகாவிஷ்ணுவாக நினைத்து வணங்குகின்றனர்.

**அ**டுத்துப் பகவத்கீதையின் பதினோராவது அதிகாரமான விச்வரூப தர்சன யோகம் பற்றி ஆராய்வோம். யுத்தகளத்தில் அர்ச்சுனன், ''பகவானே, உமது உபதேசத்தால் என்னைப்பற்றிப் பிடித்திருந்த மயக்கம் தீர்ந்துவிட்டது. உண்மை எது? நீதி எது? தர்மம் எது எனப் புரிந்து கொண்டேன். அடுத்து உமது ஈஸ்வர வடிவத்தை எனக்குக் காட்டியருளும் என்று வணங்குகிறான்.

**அ**ர்ச்சுனா, பலவகைப்பட்டதும், பலநிறங்களையும் வடிவங்களையும் உடையதுமான எனது தெய்வீக உருவங்களை நூறு நூறாகவும், ஆயிரம் ஆயிரமாகவும் உன்முன் தோன்றும். அதைப்பார் ஊனக்கண்களால் அதைப்பார்க்க முடியாது உனக்கு நான் ஞானக் கண்களை வழங்குகிறேன்'' என்று கூறி ஞானக் கண்களை வழங்கினார்.

**த**ன்னெதிரே நின்ற அந்த உயரத்தை, நீளத்தை, அகலத்தைக் கணிக்க முடியாத உருவத்தை வியப்புடன் பார்த்தான் அர்ச்சுனன். அவ்வடிவம் அனேக முகங்கள், கண்கள், அதிசயக் காட்சிகள், தெய்வீக ஆபரணங்கள், கைகளில் பல்லாயிரக்கணக்கான ஆயுதங்களுடன் காட்சியளித்தது. திவ்வியமான கணக்கற்ற பெறுமதியான ஆபரணங்களும், விதம் விதமான மாலைகளும் அணிந்து எங்கும் பரந்திருந்தது.

**அ**வ்வுருவத்துள் பலவாகப் பிரிந்திருந்த உலகங்கள் ஒன்றாகக் காட்சியளித்தன. அவற்றைக் கண்ட அருச்சுனன் சொன்னான், ‘‘தேவதேவா, உமது உருவத்துள் தேவர்கள் எல்லோரையும் உயிர்கள் அனைத்தையும் பிரம்மாவையும், தேவசர்ப்பங்களையும் காண்கிறேன். உமது உடலில் எண்ணிக்கையில்லாக் கைகள், வயிறுகள், முகங்கள், கண்கள் உடைய உமது உருவத்தைக் காண்கிறேன். ஆனால் உமது தொடக்கத்தையோ, இடையையோ, முடிவையோ காணமுடியவில்லை உலகம் பூராகவும் இடைவெளியின்றி உமது உருவமே தெரிகிறது’’.

**வா**னவர்கள் எல்லோரும் உமது உடலினுள்ப் புகுகின்றனர். சிலர் கைகூப்பி வணங்கி உன்புகழ் பாடுகின்றனர். ரிஷிகள், முனிவர்கள், உருத்திரர், ஆதித்தியர் முதலானோர் உம்மைச் சூழ நின்று வணங்குகின்றனர். அவ்வுருவின் பயங்கரமான நிலையைக் கண்டு உலகங்கள் யாவும் நடுங்குகின்றன. உமது கோரமான முகத்தையும், உருவத்தையும் கண்டு பயம் உண்டாகிறது. அதனால் உடல் நடுங்குகிறது திக்குத்திசைகள் தெரியவில்லை’’.

‘‘**தி**ருதராட்டினனும், அவனது புத்திரர்களும், பாராளும் வேந்தர்களும், பீஷ்மர், துரோணர் போன்ற பலர் கோரப் பற்களை உடைய உமது வாய்க்குள் புகுகின்றனர். வெங்கனலைக் கக்கும் உமது வாய்க்குள் புகுவோரை மென்று தின்று ருசிபார்க்கிறார். எனக்குப் பயமாக உள்ளது நீர் யார்? ஏன் இவ்வாறு சொல்கிறீர்’’ என்று கேட்டான் அர்ச்சுனன்.

**அ**தற்கு மகாவிஷ்ணு சொன்னார், ‘‘அர்ச்சுனா உலகங்களையும், அங்கு வாழ்வோரையும் அழிக்கும் காலன் நான் நீ அழிப்பதாக நினைக்காதே. எல்லோரையும் அழிப்பவன் நான். நீ போர் செய்யாவிட்டாலும் அவர்கள் கொல்லப்படுவார்கள். அதனால் சந்தேகமின்றி உற்சாகத்துடன் போர் செய்து அழியாப் புகழைப் பெறு. எல்லோரையும் எனது கருவியாக இருந்து கொல்ல பயப்படாதே. துணிந்து போரிடு’’ என்கிறார் மகாவிஷ்ணு.

**சு**மார் ஐயாயிரம் வருடங்களுக்கு முன்பு மகாவிஷ்ணுவால் உபதேசிக்கப்பட்ட இவ்விதி இப்போதும் பேணப்படுகிறது. அன்று அரசர்கள் நீதியை வழங்கினர். அரசர் மரணதண்டனை வழங்கினால், மரணதண்டனை வழங்கப்பட்டவனைக் கொல்பவனுக்கு அரசரால் வேதனமும், இதரபடிகளும் வழங்கப்பட்டன. இன்று நீதிமன்றங்களால் வழங்கப்படும் மரணதண்டனைகளை நிறைவேற்றுவோருக்கும் வேதனமும், இதரபடிகளும், அரசால் வழங்கக்கப்படுகிறது. ஒருவன் ஒரு கொலையை ஏதோ ஒரு

காரணத்துக்காகச் செய்தால் அவன் குற்றவாளி. அதை அரச ஊழியன் செய்தால் வேதனம். இதுதான் உலகநீதி என்பதைப் பகவத்கீதை எடுத்துக்கூறியது என்றும் நியாயமானதென்று கடைப்பிடிக்கப்படுகிறது.

**உ**லகில் உள்ள சமயங்கள் யாவும் தத்தமது கடவுள்களினால் தான் உலகும் உலகில் வாழும் உயிர்களும் படைக்கப்பட்டன என்று கூறுகின்றன. திருமூலர் திருமந்திரத்தில் சிவபெருமனால் தான் யாவும் படைக்கப்ட்டன. படைக்கப்பட்ட அத்தனை பொருட்களுள்ளும் சிவன் வீற்றிருக்கிறான் என்று பல நூறு பாடல்களில் கூறுகிறார். பகவத்கீதையை எழுதியது வேதவியாசர் எனக் கூறப்படுகிறது. கடவுள் எதையும் தான் செய்வதில்லை. தனது பக்தர்களைக் கொண்டே செய்விக்கிறார் என்று எல்லாச் சமயங்களும் கூறுகின்றன. அதன்படி சிவபெருமான் நாயன்மார்களைக் கொண்டும் மகாவிஷ்ணு ஆழ்வார்களைக் கொண்டுமே பக்தர்களின் குறைகளைத் தீர்த்தனர்.

**சி**வபெருமான் அறுபத்து மூன்று திருவிளையாடல்களையும் தனது சொந்த உருவத்தோடு சென்று நிகழ்த்தவில்லை. மீனவனாகவும், புலவனாகவும், அறிஞனாகவும் அந்தந்தத் திருவிளையாடல்களுக்கு ஏற்ற உருவத்துடனேயே சென்று நிகழ்த்தியுள்ளார். பக்தனைப் பரவசப்படுத்தவும், அவனை ஆட்கொள்ளவும் சிவபெருமான் குருவாக எழுந்தருளி ஆட்கொள்வாரென்று திருமந்திரத்தின் ஐந்தாம் தந்திரம் கூறுகிறது.

**தி**ருமூலரின் காலத்தில் தமிழ்நாட்டின் எல்லை பற்றி புறநாநூறு கூறுகிறது, ‘‘வடாஅதுபனிபடு நெடுவரை வடக்கும், தெனாஅது உருகெழுகுமரியின் தெற்கும், குணா அது கரைபொரு தொடுகல் குணக்கும், குடா அது தொன்று முதிர் பவ்வத்தின் குடக்கும்.

**பு**றநானூற்றின் கூற்றுப்படி தமிழ்நாடானது வடக்கே இமயமலை வரைக்கும், தெற்கே கடாடபுரம் வரைக்கும், கிழக்கே வங்கக்கடல் வரைக்கும், மேற்கே அராபிக் கடல் வரையும் இருந்தது. அதை விட உலகெற்கும் தமிழ் ஆட்சி மொழியாக இருந்ததாகவும் அங்குள்ளோர் சிவனையே வழிபட்டதாகவும் திருமந்திரம் உட்படப் பல நூல்கள் கூறுகின்றன. திருமூலர் புதிதாகச் சிவலிங்கங்களைப் பிரதிட்டை செய்ய வேண்டாம். உலகெங்கும் ஒருகோடி சிவலிங்கங்கள் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளன. அங்கு சென்று வணங்குங்கள் என்று கூறுகிறார். அது உண்மை. உலகெங்கும் பிரதிட்டை செய்யப்பட்ட சிவன் கோவில்கள் கவனிப்பாரற்று பாழடைந்துள்ளன. அகழ்வாராய்ச்சிகளின்போது ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்க நாடுகளிலும், அவுஸ்ரேலியாவிலும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சிவலிங்கங்கள் கண்டுபிடிக்கப்படுவதாகச் செய்திகள் மூலம் அறிகிறோம்.

**அ**து உண்மையானது எனக்குத் தெரிந்த ஒரு பிள்ளையார் கோவிலில் ஐம்பது அறுபது வருடங்களுக்கு முன் தேவாரம் பாடவும், சுவாமியைக் காவவும் பலத்த போட்டி இருந்தது. இப்போது தேவாரம் பாட ஆள் இல்லை. சுவாமி விசேட தினங்களில் வீதிவலம் வர ஒரு வண்டில் செய்து வைத்திருக்கின்றனர். அதில் சுவாமியை வைத்து ஐயரும், பூசை உபயகாரரும் தள்ளிச் செல்கின்றனர். இதை 5000 வருடங்களுக்கு முன்பே திருமூலர் உணர்ந்தமையால் தான் அவ்வாறு எழுதியுள்ளார்.

**வி**ச்வரூப தர்சன யோகத்தில் தனது உருவம் பற்றிக் கூறிய கிருஷ்ணர், ஞானகர்ம சந்நியாச யோகத்தில் சிறு தேவதைகளின் வழிபாட்டின் பயன் பற்றிக் கூறுகிறார். தான் தான் தெய்வம். தன்னைத் தவிர தெய்வங்கள் இல்லை. தான் தான் உலகையும் உயிர்களையும் படைக்கிறேன் என்று கூறியவர், சிறு தேவதைகளின் வழிபாட்டில் இவ்வாறு கூறுகிறார்.

**ஞா**னகர்ம சந்நியாச யோகத்தின் பதினோராவது சுலோகத்தில் கிருஷ்ணர் இவ்வாறு கூறுகிறார், ‘‘அர்ச்சுனா, யார் என்னை எப்படி வழிபடுகிறார்களோ அவர்களுக்கு நான் அப்படியே அருள் புரிகிறேன். பார்த்தா மக்கள் எப்பொழுதும் எனது வழியையே பின்பற்றுகின்றனர். அடுத்த சுலோகத்தில் இவ்வாறு கூறுகிறார், ‘‘வினைப்பயனை விரும்புபவர்கள் இம்மையில் தேவதைகளை வணங்குகின்றனர். ஏனென்றால் பூமியில் வினைப்பயன் உடனுக்குடன் கிடைக்கிறது. அப்படியானால் அவரை வணங்குவதால் என்ன பயன் கிடைக்கும் என்று அவர் கூறவில்லை.

**இ**ச் சுலோகம் தேவதைகள் என்று கிருஷ்ணரைத் தவிர்ந்த பிள்ளையார், முருகன் போன்ற பல்வேறு தெய்வங்களைச் சொல்கின்றனவா? இல்லை வேறு கிராமியத் தெய்வங்களைக் குறிப்பிடுகின்றதா எனத் தெரியவில்லை. திருமூலரின் காலத்தில் சைவசமயம் மட்டும் தான் இருந்தது. ஒரே ஒரு தெய்வமாக இருந்தவர் சிவபெருமான். திருமந்திரம் சிவனையும், உமாதேவியாரையும் மட்டும் தான் தெய்வம் என்று கூறுகிறது. அத்துடன் சிவபெருமான் அர்த்தநாரீஸ்வரராக இருப்பதால் அது முழுமையான சிவவுருவம் என்றே கணிக்கப்படுகிறது.

**ச**ங்கரர் சைவ சமயத்தை ஆறு பிரிவுகளாகப் பிரித்து ஆறு பிரிவுகளுக்கும் ஒவ்வொரு பெயரிட்டு அவற்றிற்கான தெய்வங்களையும் குறிப்பிட்டார். இதன்படி பிள்ளையாரை வணங்குவோர் காணாபத்திய மதத்தினர் என்றும், சிவனை வணங்குவோர் சைவசமயத்தவர் என்றும், மகாவிஷ்ணுவை வணங்குவோர் வைணவர்கள் என்றும், முருகனை வணங்குவோர் கௌமார சமயத்தினர் என்றும், சூரியனை வணங்குவோர் சௌர மதத்தினர் என்றும், உமாதேவியாரை வணங்குவோர் சரக்த மதத்தினர் என்றும் பிரித்தார். சிவனையும் உமாதேவியாரையும் பிரிக்க முடியாது அவ்வாறாயின் எப்படி சக்திக்குத் தனியான மதம் கொடுக்கலாம்.

**உ**லகில் உள்ள இந்துக் கோவில்களில் முதல் பூசை பிள்ளையாருக்குரியது. அவ்வாறு தான் நடைபெறுகிறது. அப்படியிருக்கும் போது உலகில் உள்ள இந்துக்கள் அனைவரும் முதலில் பிள்ளையாரைத் தான் வணங்க வேண்டும். அப்படியிருக்கையில் பிள்ளையாருக்கு எப்படி தனி மதம் கொடுப்பது. ஏனைய சமயங்கள் தமது மூல நூல் சொன்னபடி தான் தமது அடியார்களைப் பண்டு தொட்டு இன்றுவரை செயற்படுத்தி வருகிறது. ஆனால் இந்து சமயத்தைப் பொறுத்தவரை அந்தநிலை இல்லை. யாரும் சொல்லலாம். எல்லோரும் அதைக் கேட்பார்கள். திருமந்திரம் சிவபெருமானைத் தவிர வேறு எதையும் நம்பக் கூடாது என்கிறது. முக்கியமாகச் சோதிடம், கிரியைகள், பரிகாரங்கள், பூசை முறைகள் எதையும் நம்பாது சிவனை மட்டும் நம்புங்கள் என்கிறது.

**நா**யன்மார்கள் முக்கியமாக ஞானசம்பந்தர் கோளறு பதிகத்தைப் படித்து விட்டு கர்மங்களையெல்லாம் சிவனிடம் ஒப்படைத்துவிட்டு எச்செயலையும் செய்யலாம் என்கிறார். கோள்கள் யாவற்றையும் படைத்து அவற்றை தனது ஆணைப்படி இயங்கவைப்பவர் சிவபெருமான். அதனால் சிவனை வணங்கும் சிவபக்தர்களைக் கோள்கள் எதுவும் செய்யாது என்று திருமந்திரமும் கூறுகிறது. அடுத்தது பரிகாரம். ஒரு தீயசெயலைச் செய்தால் அதற்குப் பரிகாரமே இல்லை. ஒரு மிருகத்தை கொன்றால் அதற்குப் பரிகாரம் அதை உயிர்பித்துவிடுவது.

**சா**தாரண செயல்களுக்குப் பரிகாரம் உண்டு. ஒருவன் ஒரு மாட்டைத் திருடினால் அதற்குப் பரிகாரமாக அம்மாட்டிற்குரிய பெறுமதியைக் கொடுத்தல் வேண்டும். அதை மாட்டின் உரிமையாளன் மகிழ்வுடன் ஏற்கவேண்டும். அப்படி ஏற்றால் அது பரிகாரமாகும். அதை அவன் ஏற்காது கூடியளவு பணம் கேட்டால் கட்டாயம் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் அதைப் போல ஒரு மாடு தேவை என்றால் அதை வாங்கிக் கொடுக்க வேண்டும். இதுதான் பரிகாரம் என்று திருமந்திரம் கூறிகிறது.

**தி**ருக்குறள் தீயசெயல்களை எக்காரணம் கொண்டும் செய்யக் கூடாது. செய்தால் அதற்கான தண்டனையைப் பெறுவாய் என்கிறது. ஒழுக்கமுள்ளவர்களாகப் பற்றற்றவர்களாக வாழுங்கள் உங்களைத் துன்பங்கள் நெருங்காது என்கிறது. ஒழுக்கமாக வாழ கடவுளை நம்பு, மற்றவர்களைக் கெடுக்கவும் நினைக்காதே என்கிறது.

## 11

**அ**டுத்துப் பகவத்கீதையின் பன்னிரண்டாம் அதிகாரமான பக்தியோகத்தைப் பற்றி ஆராய்வோம். இதில் முதலாவது சுலோகத்தில் அர்ச்சுனன், கிருஷ்ணனிடம் கேட்கிறான், ''யார் பக்தியில் சிறந்தவர்கள்'' என்று அதற்குப் பகவான் கிருஷ்ணர், ''அர்ச்சுனா, என்னிடத்தில் தனது மனதை ஒப்படைத்துவிட்டு பெருஞ் சிரத்தையுடன் யார் என்னை வணங்குகிறார்களோ அவர்கள் மேம்பட்டவர்கள். அவர்கள் என்னை வந்தடையும் பக்தியில் மேம்பட்டவராவர். தமது வினைப்பயனை எனக்கு அர்ப்பணித்து என்னையே நினைத்து வணங்குபவர்களும், என்னையே பரகதியாக எண்ணியவர்களையும் நான் பிறப்புக்களில் இருந்து விடுவிப்பேன்''.

**இ**வற்றைச் செய்ய முடியாதவர்கள் அப்பியாசயோகத்தால் என்னை வந்தடையலாம். அதுவும் முடியாவிட்டால் எனக்காகக் கர்மஞ்செய், அதுவும் செய்ய முடியாவிட்டால் கர்மபயன் முழுவதையும் எனக்கு அர்ப்பணம் செய். அப்பியாசத்தை விட ஞானம் சிறந்தது. ஞானத்திலும் பார்க்கத்தியானம் மேலானது. தியானத்தை விட கர்ம பலனைத் தியாகம் செய்வது உயர்ந்தது. உயிர்கள் அனைத்திலும் பற்றற்ற அன்புடையவனாகவும், ஆணவம் அற்றவனாகவும், இன்பதுன்பங்களைச் சமமாக மதிப்பவனாகவும், தன்னடக்கமுள்ளவனாகவும் இருந்து என்னை வணங்கு என்னை வந்தடைவாய்.

“**சி**ரத்தையுடன் யார் என்னையே கதியாகக் கொண்டு எனது அமிர்தம் போன்ற தர்மத்தை கடைப்பிடிக்கிறார்களோ அவர்கள் எனக்கு மிகவும் இனிமையானவர்கள்” பகவத்கீதையின் எந்த ஒரு சுலோகத்திலாவது கிரியைகள், பூசைகள் பற்றிக் கூறப்படவில்லை. அதுபோலத் திருமந்திரத்திலும் கூறப்படவில்லை. திருக்குறளிலும் கூறப்படவில்லை. இவை மூன்றும் தான் மிகமிக முக்கியமான நூல்கள். இவற்றில் கூறப்படாத கிரியைகளை மக்கள் நம்பிக்கையுடன் விரும்பிச் செய்வதற்கான காரணம் புரியவில்லை. திருமந்திரத்தில் திருமூலர் சிவபெருமானுக்கு ஒரு பச்சிலையைப் படைத்து தமிழ் மந்திரமான ஐந்தெழுத்தைக் கூறிப் பிரார்த்தித்தால் போதும் என்கிறார். பகவத்கீதையில் கிருஷ்ணர் தனக்குப் பூ, நீர், பழம், இலை தான் விருப்பம். துளசி இலையைப் படைத்து வணங்கினால் வணங்குபவனிடம் நான் இலகுவாக அகப்பட்டுவிடுவேன் என்கிறார். அத்துடன் பக்தியோகத்தில் மனதைத் தன்னிடம் ஒப்படைக்குமாறு கூறுகிறார்.

**தி**ருக்குறளில் வள்ளுவர் பற்றுக்களற்ற சுத்தமான மனதால் மலர் மீது அமர்ந்திருக்கும் இறைவனை வணங்கு, விருப்பு வெறுப்பில்லாத கடவுளின் திருவடியை நினை, அவரது புகழைப்போற்று என்று கூறுகிறார். அவ்வாறு போற்றி வணங்கினால் வாழ்வில் எத்தகைய துன்பங்களும் ஏற்படாது. கடவுளின் புகழைப் போற்றுபவர்களுக்கு மனக்கவலை இராது, இருவினைகளும் தொடராது, பிறப்பு இறப்புக்கள் இல்லை. இவ்வாறு கூறுகிறாரே தவிரப் பூசைகள், ஆராதனைகள், அபிசேகங்கள் செய்யும்படி மூவரும் கூறவில்லை.

**த**மிழ்நாட்டிற்கு ஆரியர் வந்த பின்பு தான் கிரியைகள் செய்யத் தமிழ்நாட்டு மக்கள் விரும்பினர். அவற்றிற்கு அளவற்ற ஆசைகளே காரணமாகும். திருமணம் நிறைவேற ஒரு சடங்கு, பிள்ளைகள் இல்லாதவர்களுக்குப் பிள்ளைப் பேறு கிடைக்க ஒரு சடங்கு. பணம் பெற விரும்பியவையை அடைய இவ்வாறு மனிதர்கள் ஆசைப்படும் ஒவ்வொரு நிகழ்வுக்கும் ஒவ்வொரு சடங்கைச் செய்யும் படியும், அதனால் பயனடையலாம் என்றும் பிராமணர்கள் கூறியதையே நம்பி மக்கள் பெருந்தொகையான பணம் பொருட்களைச் செலவு செய்கிறார்கள். இப்படியான ஆடம்பரமான பூசைகளால் பலனில்லை. சுத்தமான மனமும், அடுத்தவர்களுக்கு பயன்கருதாது செய்யும் உதவிகளுமே கடவுளின் அருளைத் தரும் என்று மூன்று நூல்களும் கூறுகின்றனர்.

**இ**ந்துக்களின் கிரியைகளுள் மரணக்கிரியை மிகமிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இதுபற்றித் திருமந்திரம் விபரமாகக் கூறுகிறது. திருமந்திரத்தின் முதலாவது தந்திரத்தில் யாக்கை நிலையாமை என்ற பகுதியில் மரணக் கிரியைகள் பற்றிக் கூறப்படுகிறது ஒரு வகையான மண்ணே இரு வகைக் கலன்களாகும். ஒன்று தீயால் சுட்டது. அடுத்தது சுடாதது. மழை பெய்யும் போது தீயில் சுட்ட கலம் கரையாது. சுடாத கலம் கரைந்து அழிந்து விடும். திருவருளைச் சார்ந்த கலம் நிலைபெற்று நிற்கும். சாராதகலம் அழிந்து அழிந்து மீண்டும் மீண்டும் புதிய கலமாகும். தீயில் சுடாத கலம் தான் மனித உடம்பு. அது அழிந்து அழிந்து புதிய உடல்களைப் பெறும்.

**உ**யிர் நீங்கிய உடம்பை சூழ இருந்து உறவினர், நண்பர்கள், மனைவி மக்களெல்லாம் அழுவர். உண்மையான பெயர், காரணப் பெயர், கௌரவப் பெயர்கள் யாவும் நீங்கிவிடும். அதன்பின் பிணம் என்று பெயரிடுவர். பின் மயானத்திற்கு எடுத்துச் சென்று வாய்க்கரிசியிட்டுக் குடமுடைப்பர். பின் எரியூட்டுவர். நன்றாக எரிந்தபின் சாம்பலை அள்ளிச் சென்று புனிதநீரில் கரைத்துவிட்டு நீராடுவர். அதன் பின் அந்தப் புனித நீரை எடுத்து வந்து வீட்டைச் சுத்தமாக்குவர். இதுபற்றித் திருமூலர் இருபத்தைந்து செய்யுள்களில் விளக்கியுள்ளார்.

**சை**வ சித்தாந்த கோட்பாட்டின்படி ஓர் உயிர் சட்டை இல்லாமல் (உடம்பு) ஒரு கணம் கூட இருக்கமாட்டாது. இறந்தவுடன் இறைவன் வினைக்கீடாக வேறோர் உடம்பைக் கொடுத்துவிடுவார். அதனால் பிறப்பெடுத்த உயிருக்கு கிரியைகளோ, துவசம், மாலையம் போன்றனவோ கொடுக்கப்பட்டவில்லை. இறந்து ஐம்பது ஆண்டுகள் கழிந்தவர்களுக்கும் இப்போது சிலர் துவசம் கொடுகின்றனர். இது பற்றி சைவசித்தாந்த நூல்களில் தகவல் இல்லை. இறந்தவுடன் இனத்தவர், ஊரவர்களுடன் சேர்ந்து அழுதுவிட்டு உடலைத் தகனஞ் செய்யும் படி தான் திருமந்திரம் கூறுகிறது. கிரியைகள் பற்றிக் கூறப்படவில்லை.

**கி**ரியைகள், பூசைகள் யாவும் பணத்தை மையமாகக் கொண்டவையே தவிர புண்ணியத்தைத் தருவன அல்ல என்று பகவத்கீதையும், திருமந்திரமும், திருக்குறளும் கூறுகின்றன. இவைதான் இந்து சமயத்தின் மூல நூல்கள். இவை ஏழை, எளியவர்கள், அனாதைகள், சிவனடியார்களுக்குத் தானங்கள், உணவுகள் கொடுக்கும் படி கூறுகின்றன. அதனால் சிவனும், மகாவிஷ்ணுவும் மிக்க மகிழ்வடைவர் என்று திருமந்திரமும், பகவத்கீதையும் கூறுகின்றன. பக்தியோகம் முழுவதும் பிறருக்கு பிரதியுபகாரத்தை எதிர்பாராது கொடு, என்னிடம் அடைக்கலமாகு, என்னையே நினைத்திரு என்று தான் கூறுகிறதே தவிர எனக்குப் பூசை செய், ஆபரணங்களை வாங்கித்தா என்று சொல்லவில்லை. அத்துடன் பகவத்கீதையில் உள்ள எழுநூறு சுலோகங்களில் ஒன்றில் கூட அவ்வாறு கூறப்படவில்லை.

**ம**காவிஷ்ணு ஒன்பது அவதாரங்களை எடுத்துள்ளார். பத்தாவது அவதாரம் கல்கி அவதாரம். மிக விரைவில் அவ்வவதாரத்தை எடுப்பார் என்று பல நூல்கள் பல நூற்றாண்டுகளாகச் சொல்லி வருகின்றன. கல்கி அவதாரம் மிகமிகச் சிறப்பாக இருக்கும் என்றும், மக்களுக்கு எந்தவிதமான குறைபாடுகளும் இருக்காதென்றும் சம்பந்தப்பட்ட நூல்கள் கூறுகின்றன. இந்து சமயத்தைப் பொறுத்தவரை யாரும் எதுவும் சொல்லலாம். யாரும் தட்டிக் கேட்கமாட்டார்கள். இப்போது பல புதிய அவதாரங்கள் தமிழ்நாட்டில் தோன்றி இலங்கையிலும் பரவிவருகின்றன.

**ம**காவிஷ்ணு தான் அவதாரம் எடுப்பவர், அவர் பத்தாவது அவதாரத்தை எடுக்காத நிலையில் அவதாரமென்று சொல்வோரின் பின் மக்கள் செல்கின்றனர். துன்பங்களை, நோய்களைத் தீர்த்ததாகத் தெரியவில்லை. திருவள்ளுவர் 619ஆவது குறளில் இவ்வாறு சொல்கிறார்,

“**தெ**ய்வந்தால் ஆகாது எனினும் முயற்சிதான் மெய்வருந்தக் கூலி தரும்”

**ப**ஞ்சமா பாதகங்களைச் செய்துவிட்டுத் தான் நினைப்பது நடைபெற வேண்டும் என்று தெய்வத்தை வணங்கினால் பயன்கிடைக்குமா? கோடிக்கணக்கான மக்கள் வாழ்கின்றனர். ஒவ்வொருவரும் தெய்வத்தை வணங்கி, காணிக்கைகள் கொடுத்தால் இறைவன் அருள்வாரா.

**ப**கவத்கீதையின் பக்தியோகம் சொல்வதையே இக் குறளும் சொல்கிறது. பரபரப்பில்லாது, பற்றில்லாது, மற்றவர்களுக்குத் துன்பங்கள் செய்யாது கடவுளை வணங்குபவரின் முயற்சிக்குக் கடவுள் உறுதுணையாக இருப்பார். இதைத்தான் நான் ஆராய்வு செய்யும் மூன்று நூல்களும் கூறுகின்றன. இதைச் சொல்வதற்காகத் தான் நான் ஆய்வு செய்கிறேன். எல்லோருக்கும் உதவி செய்து மன மகிழ்வுடன் வாழ்பவனுக்கு எல்லோரும் உதவுவர். நான் 1330 குறள்களுக்கும் தற்காலத்திற்கேற்றபடி கதைகள் எழுதினேன். 1000 குறள்களுக்கு கதைகள் கூறினேன். பகவத்கீதை, திருமந்திரமும் முதலியவற்றிற்கும் கதைகள் எழுதினேன். அதில் எல்லாவற்றையும் விளக்கமாக எழுதியுள்ளேன். அத்துடன் விபரமாகச் சொல்லியும் உள்ளேன்.

**உ**லகில் உள்ள எல்லாக் கடவுள்களும் உயிர்களுக்குக் கொடுக்க விரும்புவார்களே தவிர பெற விரும்பமாட்டார்கள் என்று அவரவரது சமய நூல்கள் கூறுகின்றன. கடவுளிடம் எல்லாம் உண்டு. அதனால் தான் திருமந்திரம், பகவத்கீதை, திருக்குறள் உட்பட அனைத்து நூல்களும் இறைவனிடம் மாசில்லாத சுத்தமான அன்பைச் செலுத்துங்கள். அவர் உங்கள் தேவைகளை நிறைவு செய்வார் என்று கூறுகின்றன.

**ப**ன்னிரண்டாம் அத்தியாயமான பக்தியோகத்தில் பரமாத்மா மனதைப் பற்றி விரிவாகக் கூறுகிறார். மனம் தான் இறைவனை அடையக் காரணமாக இருக்கிறது. பற்றற்ற சுத்தமான மனதையே பகவான் விரும்புவதாகப் பக்தியோகத்தில் கூறுகிறார். அடுத்துப் பதின்மூன்றாவது அதிகாரமான க்ஷேத்திர சேத்ரக்ஞ விபாத யோகத்தில் உடலைப் பற்றியும் உயிரைப் பற்றியும் கூறுகிறார். சேத்திரம் என்றால் உடல் சேத்திரக்ஞன் என்றால் உயிர். இவற்றைப் பற்றி அறிவதே ஞானமாகும். உடல் உணர்ச்சி, காமம், நான் என்ற அகங்காரம், ஐம்புலன்களான மெய், வாய், கண், மூக்கு, செவி முதலியன தேடும் இன்பசுகம், உணர்ச்சிப் பெருக்கு, ஆரவாரம், இருதயத்துடிப்பு இவற்றைக் கொண்டது தான் உடல் என்ற சேத்திரம்.

**இ**வ் அதிகாரத்தில் உடலும் உயிரும் என்று பகவான் கூறுகிறார். ஆவணம் இல்லாதிருத்தல், ஆரவாரம் செய்யாதிருத்தல், அகிம்சை, பொறுமை, நேர்மை ஆகியவற்றை மேலாகக் கருதி பற்றற்று வாழ்தல், பிறப்பு, இறப்பு, மூப்பு, வியாதி, துக்கம் இவற்றை உணர்ந்து மனதைச் சமநிலையில் வைத்திருத்தல், குருவைப் பணிதல் போன்றவற்றுடன் தாமரை இலையில் உள்ள தண்ணீரைப்போல பற்றற்று வாழுதல். மனைவி மக்கள் பிள்ளைகளுடன் பற்றற்று ஒட்டாமல் தனித்திருத்தல், எப்பொழுதும் நடுவுநிலை தவறாது இருப்பது வேறு எவற்றையும் எண்ணாது என்னிடம் மாறாத பக்தியுடன், தனியிடத்தில் இருந்து என்னை வணங்குதல். சனக்கூட்டத்துடன் சேராதிருத்தல், ஆன்மாவில் நிலைத்திருத்தல் என்பனவெல்லாம் ஞானமாகும். இவற்றிற்கு மாறானவை யாவும் அஞ்ஞானமாகும்.

**இ**வையாவும் திருக்குறளில் கூறப்பட்ட அறக்கருத்துக்களே. திருக்குறளின் ஒவ்வொரு அத்தியாயத்திலும் இத்தகைய அறநீதி ஒழுக்கக் கருத்துக்கள் சேர்க்கப்பட்டுள்ளது. வள்ளுவர் அஞ்ஞானக் கருத்துகளைக் கூறும் அதிகாரங்களிலும் ஞானக்கருத்துக்களை கூறியுள்ளார். அஞ்ஞானத்தை ஞானமாக மாற்றுவதே திருக்குறளின் குறிக்கோளாகும். உதாரணமாகத் தீவினை அச்சம் என்ற அதிகாரத்தின் 204ஆவது குறள் இவ்வாறு சொல்கிறது, ‘‘நீ மறந்துங்கூட பிறருக்குத் தீங்கு செய்ய நினைக்காதே, ஏனென்றால் தீங்கு செய்தவனுக்கு அறமே தீங்கு செய்யும்.

**ப**யன் இல சொல்லாமை என்ற அதிகாரத்தின் ஏழாவது குறள் (197) இவ்வாறு சொல்கிறது, ‘‘அறிவுடையவர்கள் அறமில்லாத சொற்களைச் சொன்னாலும் சொல்லலாம். ஆனால் ஒருபோதும் பயனில்லாத சொற்களைச் சொல்லமாட்டார்கள். அர்ச்சுனா, இன்னும் ஒருவிடயத்தை நான் உனக்குக் கூறுகிறேன். அது என்னவென்றால் பரம்பொருளைப் பற்றிய உண்மை. அதைப்பற்றி அறிந்தவனுக்கு மரணம் இல்லை. அது எங்கும் உள்ளது. மிக்க பிரகாசம் கொண்டது. அது எங்கும் கைகளையும், கால்களையும் உடையது. தலை, வாய், கண் முதலியன உள்ளது. அதன் காதுகள் எங்குமுள்ளன. உலகெங்கும் அது வியாபித்துள்ளது’’.

‘‘**இ**ந்திரியங்களின் வாயில் அது. இந்திரியங்கள் அற்றது, பற்றற்றது, அனைத்தையும் தாங்குவது, குணங்கள் இல்லாமலே குணங்களை அனுபவிப்பது, பொருட்களுக்கு உள்ளும், புறமும் உள்ளது. அசையாதது, அசைவது, நுண்மையானது, எட்டவும் கிட்டவும் இருப்பது. பிளவுபடாதது. ஒளிக்கு ஒளியானது. அது எல்லோரினதும் உள்ளத்தில் இருக்கிறது. இவற்றை அறிபவனே என்னை அறிந்து கொள்கிறான். பிரகிருதிக்கும் புரிசனுக்கும் ஆதி அந்தம் இல்லை வேறுபாடுகளும் குணங்களும் பிரகிருதியில் இருந்து பிறந்தன. உடலுக்கும் இந்திரியங்களுக்கும் காரணமாக இருப்பது பிரகிருதியே. இன்பதுன்பங்களை அனுபவிப்பதற்குக் காரணமாக இருப்பது உயிர். புரிசனையும் பிரகிருதியையும் அறிந்து கொள்பவன் மறுபடியும் பிறப்பதில்லை’’.

‘‘**அ**ர்ச்சுனா, தியானத்தின் மூலப்பெறும் அறிவால் சிலர் தமது உள்ளத்தில் ஆத்மாவை உணர்கின்றனர். சிலர் ஞான யோகத்தாலும், இன்னும் சிலர் கர்மயோகத்தாலும் ஆத்மாவை உணர்கின்றனர். சிலர் பெரியோரின் சொற்கேட்டு அதை நம்பி அதன்படி வாழ்ந்து தமது பிறப்பை அறுக்கின்றனர். ஓர் உயிர் தோன்றுவதற்குக் காரணம் உடலினது சேர்க்கையாகும். எங்கும் பரந்திருக்கும் பரமபொருளான ஈஸ்வரனைக் காண்பவனுக்குத் துன்பங்கள் வந்துசேராது. அதனால் அவன் முத்தியடைகிறான்’’.

**க**ர்மங்கள் எதுவும் தன்னால் செய்யப்படுவதில்லை அவை பிரகிருதியால் செய்யப்படுகின்றன. ஆத்மா செயலற்றது என்று உணர்பவன் ஈஸ்வரனை உணர்ந்தனாவான். ஒரு பொருளிலேயே எல்லாம் அடங்கியிருக்கின்றன. அந்த ஒரு பொருளில் இருந்தே அவை வெளிப்படுகின்றன என்று உணர்ந்து கொள்பவன் பிரமமாகிறான். குந்தியின் மகனே, ஆதியும் அந்தமும் இல்லாத கேடில்லாத பரமாத்மா

உடலில் இருந்தாலும் அது செயலற்றது பற்றற்றது. எங்கும் நிறைந்துள்ள ஆகாயம் ஒருபோதும் களங்கமடைவதில்லை அதுபோல உடலெங்கும் நிறைந்துள்ள ஆத்மாவும் களங்கமடைவதில்லை. உலகை ஒரே ஒரு சூரியன் ஒளிரச் செய்வது போல உலகங்கள் அனைத்தையும் பரமாத்மா பிரகாசிக்கச் செய்கிறான். இவற்றையெல்லாம் ஞானக்கண்ணால் கண்டு அவற்றை உணர்ந்து கொண்டவன் பிரம்மதை அடைகிறான்.

**ப**கவத்கீதையும், திருமந்திரமும் விஷ்ணுவைப் பற்றியும், சிவபெருமானைப் பற்றியும், அவர்களது அருட்செயல்களைப் பற்றியும் விரிவாகக் கூறுகிறது. ஆனால் திருக்குறள் பொதுவாகக் கடவுள்பற்றி சில குறள்களில் பகவத்கீதையும், திருமந்திரமும் கூறுவதைக் கூறுகிறது. திருமந்திரம் உடலும் உயிரும் பற்றிப் பகவத்கீதை கூறியவற்றையே கூறுகிறது. யாக்கை நிலையாமை என்ற பகுதியில் ஐம்பது பாடல்களில் நிலையாமை பற்றிக் கூறுகிறது. இதில் யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை, உயிர் நிலையாமை என்பன அடங்குகின்றன. யாக்கை நிலையாமை என்ற பகுதியிலும், உயிர் நிலையாமை என்ற பகுதியிலும் திருமூலரால் கூறப்பட்டவை பகவத்கீதையின் பதின்மூன்றாவது அத்தியாயத்தில் கூறப்பட்டவையே சிறிது மாறுபாட்டுடன் கூறப்பட்டுள்ளது.

**க**ளிமண்ணினால் மண்பாத்திரங்கள் செய்பவர்கள் அது உடையாதிருப்பதற்காகச் சூளையில் இட்டு சுடுகின்றனர். சூளையில் இட்டுச் சுடாதபாத்திரம் உடைய உடைய வேறு பாத்திரங்கள் செய்வர். சுட்ட பாத்திரம் உடையாது. உடைந்தாலும் மண்ணோடு சேராது. இதுபோன்றது தான் பிறப்பு. திருவருளோடு கூடிய ஆத்மா சுட்டபாத்திரம். திருவருளோடு கூடாத ஆத்மா திரும்பத்திரும்பப் பிறப்பெடுக்கும். உடல் நாட் செல்லச் செல்லமூப்பை அடையும். நோய்களும் வந்து சேரும் பின் உடல் அழியும்.

**வா**ழும்போது மனைவியைக் கொண்டு சுவையான உணவுகள் தயாரித்து உண்டு, கூடி மகிழ்ந்திருந்தவர் நெஞ்சின் இடப்பக்கம் வலிப்பதாகக் கூறி விழுந்தவர் எழும்பவில்லை. இது தான் உடலின் நிலை. நாட்டின் தலைவனான அரசன் பல்லக்கில் செல்லும் போது மங்கல வாத்தியங்கள் இசைக்கும். நடன மகளிர் நடனமாடுவர். பேரிகைகள் முழங்கும். மக்கள் பூக்களைத் தூவி வணங்குவர். ஒருநாள் அரசன் இறந்துவிட்டான். அவனைப் பாடையில் கொண்டு செல்கின்றனர். பறைமேளம் அடிக்கிறது. சுடலையில் உடலை வைத்து தகனம் செய்தபின் எல்லோரும் வீட்டுக்குச் செல்கின்றனர். இது தான் உடலின் நிலை.

**அ**த்திப்பழமாகிய உடலும் அறக்கீரை வித்தாகிய உயிரும் இருவினைப் பயனை அனுபவித்த பின்பு உயிர்நீங்க உடலை மயானத்திற்கு எடுத்துச் சென்றனர். அவரது கல்வி, பணம், பொருள், பெயர், சிறப்புப் பெயர், பட்டப்பெயர் யாவும் மறையப் பிணமெனப் பெயர் சூட்டினர். இதுதான் உடலின் சிறப்பு உடலின் நிலையாமை பற்றித் திருமூலர் இருபத்தைந்து செய்யுள்களில் கூறுகிறார். இவை பகவத்கீதை சொல்வியதைவிடப் பல மடங்கு சிறப்பாகச் சொல்கிறார்.

**அ**டுத்து உயிர் நிலையாமை பற்றித் திருமூலர் பத்துச் செய்யுள்களில் கூறுகிறார். ஒரு மரம் மிகவும் செழித்து வளர்ந்து பூக்கள் காய்களுடன் மிகவுமஅழகாக இருக்கிறது. பின் இலைகள், காய்கள் யாவும் உதிர்ந்து மாறுபடுகிறது. இதுபோல எமக்கும் உண்டாகும் என்று யாரும் நினைப்பதில்லை. ஆருயிராகிய விளைநிலம் ஐம்புலன்களுக்கும் உரிமையானது. அவ் ஐவரும் அவ்விளைநிலத்தை தம் வழி இழுத்து காத்துநின்றனர். இவ் ஐவரும் சிவபெருமானின் கட்டளைப்படி நடப்பவர்கள் அவ்வுயிர் சிவனது ஆணைக்குட்பட்டால் பிறவிப் பிணியை நீக்கும். இல்லாவிட்டால் பிறவியை ஒழிக்க முடியாது பிறந்து பிறந்து இறக்கும். திருவருள் வசப்படாத உடல் எரிந்தழியும் போது உயிர் மீண்டும் மீண்டும் பிறக்கும் வண்டுகள் பூவிலுள்ள தேனை மனம் மகிழ்ந்து குடிக்கும் அதுபோல உயிர்கள் திருவடிப்பேரின்பத்தைக் குடிக்க வேண்டும். அல்லாத உயிர்கள் பிறப்புக்கள் எடுத்துத் துன்புறும். இவ்வாறு திருமந்திரம் உயிர் நிலையாமை பற்றிக் கூறுகிறது.

**நி**லையாமை பற்றி வள்ளுவர் இவ்வாறு கூறுகிறார், ‘‘நிலையில்லாதவற்றை நிலையானது என்று தவறாக எண்ணுவது அறியாமையாகும். நாள் என்பது ஒருகால அளவு அது உடம்பில் இருந்து உயிரைப் பிரித்து அறுக்கும் வாள். நேற்று இருந்தவன் இன்றில்லை என்று சொல்லும் பெருமையை உடையது இந்த உலகம். உடம்புக்கும் உயிருக்கும் உள்ள உறவென்பது கூட்டிற்கும் பறவைக்கும் உள்ள தொடர்பை ஒத்தது. மரணம் என்பது ஒருவர் உறங்குவது போன்றது. பிறப்பு என்பது உறங்கி விழிப்பதைப் போன்றது. நோய்களின் இருப்பிடமான உடலின் ஒரு மூலையில் தங்கியிருக்கும் உயிருக்கு ஒரு நிலையான இடம் இல்லை. இவ்வாறு திருக்குறள் சொல்கிறது.

## 12

**அ**டுத்துப் பதின்னான்காம் அதிகாரமான குணத்ரய விபாக யோகம் பற்றி ஆராய்வோம். பிரம்மஞானமே மோட்சத்திற்கு வழிவகுக்கிறது என்பதே இதன் சாரமாகும். போர்க்களத்தில் உபதேசம் செய்தும் பற்றுக்களை நீக்க முடியாது அவதிப்படும் அர்ச்சுனனை நோக்கிப் பகவான் சொல்கிறார், ‘‘அர்ச்சுனா, ஞானங்களுள் சிறந்ததும், பரம்பொருளை அடைய வழிகாட்டுவது சம்பந்தமான முக்கியமான ஞானத்தை உனக்கு மீண்டும் சொல்கிறேன் கேட்பாயாக. இந்த ஞானத்தை அறிந்தவர்கள் மீண்டும் பிறப்பதில்லை. பிரளயத்தின்போது துன்புறுவதுமில்லை. பெரிய பிரகிருதியே எனது கர்ப்பப்பை. அதில் நான் கர்ப்பத்தை வைக்கிறேன். அங்கிருந்து உயிர்கள் பிறக்கின்றன. அவற்றிற்குத் தாயாகப் பிரகிருதி விளங்குகிறாள். அவற்றின் தந்தை நான்’’.

‘‘**ச**த்வம், ரஜஸ், தாமசம் என்னும் முக்குணங்களுள் சத்துவம் தூய்மையானது ஒளி பொருந்தியது ராஜோகுணம் ஆசை வடிவானது. பற்றுக் காரணமாக அது உடம்பைச் சேர்கிறது. தாமோ குணம் அக் ஞானத்தில் பிறந்தது. அது உயிர்களை மயக்கிச் சோம்பல், அசட்டை, உறக்கம் என்பவற்றைக்

கொடுக்கிறது. சத்துவகுணம் இன்பத்தைத் தருகிறது. ராஜோகுணம் கர்மத்தில் ஈடுபடவைக்கிறது. தாமோ குணம் நல்லவற்றை மறைத்துத் தவறானவற்றைச் செய்விக்கிறது''.

**எ**ப்பொழுது ஐம்பொறிகளிடத்தும் நல்லசிந்தனைகள் தோன்றுகின்றனவோ, அப்போது ஞானம் பிறந்து விடுகிறது. ஒருவன் சத்துவ குணம் மேலோங்கியிருக்கும் போது மரணமடைந்தால் ஞானவானாவான் இல்லாவிடில் துன்பப் பிறப்புக்களிலே பிறக்கிறான். ஒருவன் குணங்களுக்கு அப்பாற்பட்டுப் பரம்பொருளைக் காண்கின்றானோ, அப்போது அவன் பிரம்மசொரூபத்தை அடைகிறான். துன்பங்களையும், இன்பங்களையும் சமமாக மதிப்பவன் ஆத்மாவில் நிலைத்திருக்கிறான். ஒருவன் மாறாத பக்தியுடன் என்னை வணங்கினால் அவன் முக்குணங்களையும் கடந்து பிரமமாகிறான். அர்ச்சுனா அழியாத மோட்சத்தினதும் தர்மத்தினதும் இருப்பிடம் நானே''.

**ப**கவத்கீதையின் பதின்நான்காவது அதிகாரமான குணத்ரய விபாகயோகம் கூறுபவற்றைத் திருமந்திரத்தின் மூன்றாவது தந்திரம் கூறுகிறது. உயிர்ப்புப் பயிற்சியின் போது பதினாறையும் உள்ளிழுக்கும் தகுதியைப் பெற்றவர்கள் விடுத்தலும் எடுத்தலுமின்றி தடுத்தலாகவே நிற்பர். திருவருளால் இயமமாகிய தீதகற்றலும், நியமமாகிய நன்றாற்றலும் செய்து முடித்தவர் நொசிப்பாகிய சமாதி நிலையை அடைவர். அந்நெறி இந்நெறி என்று தடுமாறாது அகத்தவமாகிய எட்டுறுப்புகள் கொண்ட யோகநெறியைப் பின்பற்றி சமாதிநிலை அடையுங்கள். இந்நெறியில் செல்பவர்கள் ஞானமான திருவடியுணர்வு வந்து சேரும். தீதகற்றல், நன்றாக்கல், அளவிலா இருக்கை, வளிநிலை, தொகைநிலை, பொறைநிலை, நினைதல், நொசிப்பு என்னும் வழிமுறைத் தவநிலை பயில வேண்டும் என்று சிவபெருமான் கூறியுள்ளார் என்று திருமூலர் இயமம் என்ற பகுதியில் கூறியுள்ளார்.

**வ**ள்ளுவரும், திருமூலரும், மகாவிஷ்ணுவும் சொன்ன கருத்தைத் திருவருட்பயனும் சொல்கிறது.

''**இ**ன்பிலின்தென்ற லின்புண்டே லின்றுண்டா மன்பு நிலையே யது''

**எ**ல்லா இன்பங்களிலும் மேலானதான பேரின்பம் என்று சொல்லப்படும் முத்தி இன்பமானது அன்பால் உண்டாவது. சிவபெருமானில் பேரன்பு வைத்தால் அது உடனே கைகூடும். அது அன்னையே நிலைக்களமாகக் கொண்டது.

**தி**ருமந்திரத்தின் அன்பு செய்வாரை அறிவான் சிவன் என்ற பகுதியில் பத்துப் பாடல்களில் சிவன்மீது அன்பு கொண்டவர்கள் அடையும் பயன்கள் பற்றித் திருமூலர் விரிவாகக் கூறுகிறார். தன் மீது அன்பு கொண்டவர்களை அறிந்து அவர்களது அன்பிற்காக மகிழ்ந்து தானும் அவர்கள் மீது அன்பு கொள்வான். பேரின்பம் அனைத்தையும் அன்பு செய்வார்க்குக் கொடுத்து மகிழ்பவன். சிவனடியார்கள் தன்மீது வைக்கும் அளவற்ற அன்பின் காரணமாகச் சிவன் அம்மையுடன் எழுந்தருளி அருள்பாலிப்பான். ஐம்புலன்களால் வரும் பிறவிப் பிணியைப் போக்கி முத்தியை அருள்வான்.

**ஒ**ரு காதலன் காதலியோடு சேரும்போது உண்டாகும் உணர்ச்சிப் பெருக்கும் மகிழ்ச்சிப் பெருக்கும் சிவபெருமான் மீது அன்பு கொள்ளும் போது உண்டாக வேண்டும். அப்படியானவர்களுடன் கூடிக்குலாவி கலந்து தன்னோடு அணைத்துக் கொள்வான். கொடுக்க வேண்டிய இன்பத்தைப் பெருக்கிக் கொடுப்பான். அந்நிலையில் உயிர் சிவனது திருவடியில் பொருந்தி நிற்கும். அத்தகைய அன்பர்களது நெஞ்சத் தாமரையில் வீற்றிருக்கின்ற சிவபெருமானது திருவடியையும் அவன் அணிந்திருந்த கழலிணையும் அணிந்து கொண்டேன் என்கிறார் திருமூலர்.

**ப**கவத்கீதையின் பதின்னான்காவது அத்தியாயத்தில் தன்னை நினை, தன்மீது அன்புவை என்று கிருஷ்ணர் கூறுகிறார். ஆனால் திருமூலர் தன்மீது அன்பு கொண்ட சிவனடியார்களின் உள்ளத்தில் வீற்றிருக்கின்ற சிவபெருமானின் திருவடியையும் கழலையும் கண்டேன் என்கிறார். இது அன்பால் நடைபெறும் அபூர்வ நிலையைத் திருவாசகமும் கூறுகிறது.

**அ**ன்பு செய்வாரை அறிவான் சிவன் என்ற பகுதியில் உள்ள அனைத்துப் பாடல்களிலும் தான் அன்புடன் சிவனை வழிபட அவன் தனக்குக் காட்சிதந்ததாகத் திருமூலர் கூறுகிறார். இதை நாயன்மார்கள் தமது தேவாரதிருவாசகங்களில் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளனர். பகவத்கீதையில் கிருஷ்ணர் தன்மீது அன்புவையுங்கள் உங்களுக்கு முத்தியின்பத்தைத் தருகிறேன் என்று கூறத் திருமூலர் சிவன் மீது அன்பு வையுங்கள் அவன் முத்தியின்பம் தருவான் என்கிறார். திருவைந்தெழுத்தை முறைப்படி ஓதினால் சிவன் மீது பேரன்பு பிறக்கும். அந்த அன்பின் காரணமாகப் பேரின்மான முத்திஇன்பம் கிடைக்கும்.

**அ**டுத்துப் பகவத்கீதையின் பதினைந்தாவது அத்தியாயமான புருசோத்தம யோகத்திற்கும் திருமந்திரத்திற்கும் திருக்குறளுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்வோம். வாழ்க்கை என்பது ஆலமரத்தைப் போன்றது. அதற்கு வேர் மேலே உள்ளது. கீழே கிளைகள் உள்ளன. வேதங்கள் அதன் இலைகளாகும். அதன் கிளைகள் குணங்களால் செழிப்படைந்து, விஷயங்கள் என்னும் தளிர் விட்டு, கீழும்மேலும் படர்ந்திருக்கின்றன. மானிட வாழ்வில் வினையை விளைவிப்பனவாய் அதன் வேர்கள் கீழ்நோக்கிச் சென்றுள்ளன. பதின்னான்காம் அத்தியாயத்தில் மகாவிஷ்ணு தன்னைப் பற்றியும், தனது அருள்நிலையைப் பற்றியும் கூறியவற்றையே பதினைந்தாவது அதிகாரத்திலும் சிறிது மாறுபாடாகக் கூறுகிறார். எங்கு சென்றவர் திரும்பிவராது அங்கேயே தங்கிவிடுகிறாரோ, எதைச் சூரியனும், சந்திரனும், தீயும் காட்டமாட்டாதோ அது தான் எனது பரமபதமாகும். மனிதவாழ்வில் அநாதியான என்னுடைய சீவனே பங்கு கொண்டுள்ளது. அது ஐம்புலன்களையும் மனதையும் போகத்தில் ஆழ்த்துகிறது.

**ம**லர்களில் இருக்கும் நறுமணத்தை காற்று எடுத்துச் செல்வது போன்று, ஓர் உயிர் உடலை எடுக்கும் போதும் அதை விடும் போதும் இந்திரியங்களைப் பற்றிக் கொண்டே செல்கிறது. ஒருவர் ஐம்புல இன்பங்களை மனதால் அனுபவிக்கிறார். இவற்றை மூடர்கள் அறியமாட்டார்கள். யோகிகள் ஆத்மாவை தமக்குள்க் காண்கின்றனர். சூரிய ஒளியும், சந்திர ஒளியும், தீயின் ஒளியும் என்னிடமிருந்து

பிறந்தவையே. எல்லோருடைய உள்ளத்திலும் நான் வீற்றிருக்கிறேன். வேதங்களும் நானே இவ்வாறு கிருஷ்ணர் அர்ச்சுனனுக்குக் கூறுகிறார்.

**இ**வற்றை நாயன்மார்களும், சிவனடியார்களும், திருமூலரும் சிவனின் பண்புகள் என்று கூறுகின்றனர். திருக்குறள் இவை பற்றி எதுவும் சொல்லவில்லை. மொத்தக் குறள்களையும் ஆராயுமிடத்து வள்ளுவர் எல்லாம் நீதான். சிவனின் ஐந்தொழில்களையும் செய்பவன் நீ. படைக்கிறாய், காக்கிறாய், தீயவற்றை அழிக்கிறாய், மறைக்கிறாய். அதனால் ஒழுக்கமாக வாழ். அனைவரையும் நேசி. இல்லாதவர்களுக்குக் கொடுத்துதவு அந்தநிலையில் நீ கடவுளாகிவிடுவாய் என்கிறார். திருக்குறள் ஒரு வித்தியாசமான சிறந்த நூல். அதில் கூறப்படாதவை எவையுமில்லை.

**அ**டுத்துப் பகவத்கீதையின் பதினாறாம் அதிகாரமான தெய்வாசர சம்பத்விபாக யோகம் பற்றி ஆராய்வோம். அஞ்சாமை, தூய்மை, ஞானத்திலும் யோகத்திலும் நிலைத்திருத்தல் தான் தர்மம் செய்தல், பொறிகளை அடக்கல், யாகம், தபசு, ஒழுக்கம், உண்மை பேசுதல், பிறருக்குத் தீங்கு செய்யாதிருத்தல், துறவு, அமைதி, இரக்கம், பிறரின் பொருட்களை விரும்பாமை, இனிமை, மனத்திடம், தைரியம், செருக்கின்மை ஆகியன ஒரு மனிதனிடம் காணப்பட்டால் அவன் தெய்வத்தின் அனுக்கிரகம் உள்ளவனாவான். இவை இல்லாதவன் அசுரகுணம் படைத்தவனாவான். தெய்வத்தின் அனுக்கிரகம் மோட்சத்தைத் தரும்.

**அ**சுரகுணமுடையவர்கள் ஆராயாது எல்லாவகையான தீமைகளையும் மகிழ்வுடனும் உறுதியுடனும் செய்வார்கள். கடவுளை நம்பமாட்டார்கள் தாம் சொல்வது தான தர்மம் என்பர். இவர்கள் நிறைவேறாத நெடுங்காமம் கொண்டவர்கள். எப்பொழுதும் ஆராயாது தீயசெயல்களையே செய்து மகிழ்வர். இவர்கள் இறக்கும் வரை பல்வேறுபட்ட கவலைகளுடன் வாழ்வார்கள். இவர்கள் தற்புகழ்ச்சியுள்ளவர்கள். தம்மைத் தவிரப் பிறரை மதிக்கமாட்டார்கள். இவர்கள் ஒருபோதும் என்னை அடையமாட்டார்கள். நரகம் காமம், குரோதம், கோபம் என்ற மூன்று வாயில்களை உடையது. இம்மூன்று வாயில்களையும் அறிந்து முறைப்படி வாழ்பவர்கள் மோட்சத்தை அடைவர் என்று கிருஷ்ணன் அர்ச்சுனனுக்குச் சொல்கிறான்.

**இ**வற்றைச் சில மாறுபாடுகளுடன் திருமந்திரம் சொல்கிறது. ஆனால் இவற்றிற்குத் தனித்தனி தலையங்கமிட்டு தெய்வம் வழிபாடு சம்பந்தமான பகுதிகளை நீக்கிவிட்டு அவற்றை தனிமனிதனின் கோட்பாடாகத் திருக்குறள் சொல்கிறது. உதாரணமாக வெ.ஃகாமை, புறங்கூறாமை, பயன், இல் சொல்லாமை, வாய்மை போன்ற அதிகாரங்களும் ஏனைய பல அதிகாரங்களும் கூறுகின்றன. முத்தி என்று சொல்லாது நல்லவற்றைச் செய்யும் நல்லவர்கள் இவ்வுலகிலும், அவ்வுலகிலும் பேரின்பமாக வாழ்வர் என்று சொல்கிறது. அறத்துப்பால், பொருட்பாலில் உள்ள ஆயிரத்து எண்பது குறள்களும் பகவத்கீதையின் பதினெட்டு அதிகாரங்களிலும் முன்பு அறநெறி நீதி ஒழுக்கக் கருத்துக்களை இலகுவாக்கிச் சகல மக்களுக்கும் புரியுமாறு கூறுகிறது. திருமந்திரமும் இவற்றையே விரிவாகக் கூறுகிறது.

**தி**ருமந்திரம் அறஞ்செய்வான் திறம், அறஞ்செயான் திறம் என்ற இரு பகுதிகளிலும் பகவத்கீதை பதின்னான்காம், பதினைந்தாம், பதினாறாம் அதிகாரங்களில் கூறியவற்றைக் கூறுகிறது. அண்ணல் சிவபெருமானை மனதில் இருத்தி அவரையே கதியென்று நினைக்கும் சிவனடியார்கள் ஆருயிர்கள் அனைத்தினதும் துன்பங்களைப் போக்கி இன்பமாக வாழவைப்பர். இவர்கள் அறத்தினை நன்கறிந்தவராவர். போட்டி, பொறாமை, வன்சொல் ஆகியவற்றை அகற்றிப் பற்றின்றி தம் கடமைகளைச் சிவ நினைவாகவே செய்வர். அதனால் இவர்களை சிவத்தின் உண்மையை உணர்ந்த சிவதத்துவர்கள் என்பர். இவர்கள் சிவபெருமானுக்குப் பச்சிலை இட்டு வணங்குவர். பச்சிலை செம்பைப் பொன்னாக்கும். சிவவழிபாடு சிவத்தோடு சேர்த்துவைக்கும்.

**தி**ருவருளால் ஆவண அழுக்கை அகற்றிச் செய்ய வேண்டிய சிவபுண்ணியங்களைச் செய்வோர் சிவனது திருவடியை அடைவர். கால முடிவில் யமன் வருவான். அவன் குழந்தைகள், இளைஞர், வறியவர், பணக்காரரர் என்ற தன்மையைப் பாராது அவர்களைக் கவர்ந்து செல்வான். சிவபுண்ணியரை அவன் கவரமாட்டான். அவர்கள் காலமுடிவில் சிவனது திருவடியை அடைவர். திருவடி உணர்வு கைவரப்பெற்றவர்கள் சிவமாந்தன்மை பெற்ற சிவஞானிகளாவர். அவர்களை மதித்து அறவழியில் வாழ்வோர் தவம் செய்யும் மாந்தராவர்.

**சி**வனை வழிபடாதவனின் செல்வம் ஊரின் நடுவே நச்சுமரமான எட்டிமரங்கள் பூத்துக் காய்த்து பழுத்து தொங்குவது போன்றதாகும். இவர்கள் வரப்போகும் பெருந்துன்பமான பாவத்தை உணரமாட்டார்கள். இவர்களுக்குக் குருதிக்குறைவு, சோகை, உட்சூடு போன்ற கொடிய நோய்கள் வரும். இவர்கள் இருளுலகமான நாகத்திலிருந்து விடுபடமாட்டார். ஆவதும், அழிவதும் அவன் செயல். தீவினையாளர் அவ்வினைக்கேற்ப பிறவிகள் எடுப்பர் இவர்கள் புல்லறிவாளர்களாவர் இம்மை, உம்மை, அம்மை முத்திறச் செல்வங்கள் வந்து சேராது. இவ்வாறு திருமூலர் கூறுகிறார்.

**அ**டுத்துப் பதினேழாம் அதிகாரமான சிரத்தாத்ரய விபாகயோகம் என்ற அதிகாரத்தை ஆராய்வோம். பகவான் கிருஷ்ணர் அர்ச்சுனனுக்குக் கூறுகிறார், “அர்ச்சுனா, உயிர்களுக்கு சாத்விகம், ராஜசம், தாமசம் என்று மூன்று சிரத்தைகள் உண்டு. மனிதன் சிரத்தை மயமானவன். சிரத்தையின் படி தான் வாழ்வு அமையும். சிரத்தைக்கேற்பவே ஒவ்வொருவருக்கும் விருப்பமான உணவும் மூன்று வகைப்படும். ரசமுள்ள உணவுகள் அறிவு, ஆரோக்கியம், பலம், சுகம் என்பவற்றைக் கொடுக்கிறது. பசையுள்ள உணவுகள் வலிமையையும் இன்பத்தையும் தரும். இவற்றையே சாத்விகர்கள் விரும்பி உண்பர். கசப்பு, புளிப்பு, உவர்ப்பு, காரம் போன்ற உணவுகள் ராஜோகுணத்தினருக்கு விருப்பமானவை. இவை பெருநோய்களை உண்டாக்கும். காலம் கடந்த உணவுகள், துர்நாற்றமுள்ளவை, தூய்மையற்ற உணவுகள் தாமோகுணத்தவர்களுக்குப் பிரியமானவை.

**ப**யன்கருதாது செய்யப்படும் பூசைகள், ஆராதனைகள், தானதர்மங்கள், சாத்வீகமானவை. பயனை விரும்பியோ, ஆடம்பரத்திற்காகவோ செய்யப்படும் எல்லா விடயங்களும் ராஜசமானவை. உரிய

முறைப்படி செய்யப்படாத பூசைகள், ஆராதனைகள் தாமசமானவை. தேவர்கள், ஒழுக்கமான பிராமணர்கள், குரு, ஞானிகள் போற்றுதல், ஒழுக்கமாக வாழுதல், பிரம்மச்சாரியத்தைக் கடைப்பிடித்தல், அகிம்சை முதலியன தேகத்தால் செய்யும் தவமாகும். உண்மை பேசுதல், இனிமையாக உரையாடல், வேதம் ஓதுதல் ஆகியன வாக்கு மூலம் செய்யும் தவமாகும். அமைதியாக வாழுதல், அன்பு கொள்ளல், தன்னடக்கம், தூயபணிகள் செய்தல் இவை மனதால் செய்யும் தவமாகும். மூடநம்பிக்கையால் தன்னைத் துன்புறுத்தியோ அல்லது பிறருக்குக் கேடு வரவேண்டும் என்றோ செய்யப்படும் தவம் தாமசமாகும். கைமாறு கருதி பலனை எதிர்பார்த்து வழங்கப்படும் தானங்கள் ராஜசமாகும். தகாதவர்களுக்கு வழங்கப்படும் தானம் தாமசமாகும். இவ்வாறு பகவத்கீதையில் பகவான் விஷ்ணு கூறுகிறார்.

**இ**வற்றைத் திருமந்திரமும் சொல்கிறது. திருமந்திரத்தின் சன்மார்க்கம் என்ற பகுதியில் இவ்வாறு நந்தியெம் பெருமான் கூறுவதாகத் திருமூலர் கூறுகிறார். கொலையும் புலையும் செய்யாத சைவசமயத்திற்கு ஒரு குரு நெறி உண்டு. அது சன்மார்க்க நெறியாகும். அந்நெறி கூறியபடி வாழ்பவர்களே சிவனது திருவடியை அடைவர். சிவனை அடைய வேண்டுமானால் அது சிவகுருவால் மட்டும் பெற்றுத்தர முடியும். சிவகுருவின் புகழைப் புகழ்ந்து அவரது திருவடியைத் தமது தம்முடிமேற் சூட சிவனின் அருள் வந்து சேரும். சிவகுருவின் அருளால் உயிர் சிவமாகும். அப்போது திரோதான சக்தி மலங்கள் அனைத்தையும் நீக்கி உணர்வால் கணிக்கப்படும் 'சிவசிவ' என்றும் செந்தமிழ் மறையை உபதேசிக்கும். அதை வாய்வாளரமோன மொழி என்பர். அம் மொழியைப் பெற்றவர்களே திருவடியை அடைவர். இந்நிலை தான் சன்மார்க்கமாகும். சன்மார்க்க நெறியினருடன் நல்லோர் கூட்டம் சேரும். அவர் கூடியிருக்கும் இடமே சிவபெருமான் இருக்கும்திசையாகும். அவர்களின் இருப்புச் சிவபெருமானின் இருப்பாகும். அவர்களும் தெய்வமாகிவிடுவர் அவர்களைக் காண்பது தரிசனமாகும்.

**ச**ன்மார்க்க நெறியில் பயிற்சியை உடைய சிவனடியார்கள் நான்காம் நிலையாகிய பேருறக்க நிலையைக் கடந்து ஐந்தாம் நிலையாகிய உயிர்ப் படங்கல் என்ற வழியில் நிற்பர். அதன்பின் வழி நிலையாகிய நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம் ஆகியவற்றை நீக்குவர். அதன்பின் தான் அடிமையென்றும், சிவபெருமான் ஆண்டான் எனவும் கொண்டு தன்நிலையற்று இருப்பர். அதன்பின் அவர்கள் சிவனை எண்ணியவாறு இருப்பர்.

**ச**ன்மார்க்கத்திற்கு வழிகாட்டியாக இருப்பது சகமார்க்கமாகும். இதைத் தோழமைநெறி என்றும் சொல்வர். தோழமைநெறியாகிய சகமார்க்கத்தில் சமாதியாகிய நிட்டையில் இருப்பவர்களுக்கு சிவனருளால் பரந்த உலகங்கள் தென்படும். அத்துடன் உள்ளொளி தோன்றும். அவ்வுள்ளொளிக்குள் திருவருளம்மை தோன்றிக் காட்சி கொடுப்பாள். இதனால் சமாதியில் இருப்போர் அனைத்துச் சித்திகளையும் பெறுவர். இந்நிலையில் சிவபெருமான் வெளிப்பட்டு அருளுவான்.

**தோ**ழமை நெறியான சகமார்க்கத்தை நிலைநிறுத்துவது சற்புத்திரமார்க்கமாகும். இதை மகன்மைநெறி என்றும் சொல்வர். சற்புத்திரநெறியில் நிற்போர் திருமுறைகள் வழியாக வழிபாடு செய்வர்.

திருமுறைகளை ஓதுதல், எழுதுதல், திருவைந்தெழுத்தைக் கணித்தல் ஆகியவற்றை இவர்கள் செய்வர். இது குற்றங்கள் அகல்வதற்காகச் செய்யும் நற்றவமாகும். ஆருயிர்களை பிறவிப் பெருங்கடலை நீந்திக் கரையேறும் இடம் சிவனது திருவடியாகும். திருவேடப் பொலிவால் உயர்ந்தும், சிவனடியார்களின் திருவடிகளைப் பணிந்தும் அதனால் மனம் மகிழ்ந்தும், திருவைந்தெழுத்தை ஓதியும் மகிழ்வோர் சிவனின் திருவடிக்கே தொண்டு செய்வோம் என்று நினைப்பவர்களே மகன்மை நெறியினராவர். அவர்களது தொண்டின் சிறப்பால் சிவப்பேரொளி அவர்களது உள்ளத்தில் தோன்றும். அதனால் அவர்களுக்கு வீடுபேறு கிடைக்கும்.

**அ**டுத்து அடிமை நெறியான தாசமார்க்கத்தைப் பற்றி ஆராய்வோம். அடியவர்களுக்கு எளியவனாகவும், விளக்கிடுதல், நந்தவனத்தைப் பராமரித்தல், மாலை கட்டுதல், கழுவல், மெழுகல், திருப்பதிகங்களைப் பண்ணுடன் பாடுதல், இசைக்கருவிகளை இசைத்தல் போன்ற சரியைத் தொண்டுகளை சிவ நினைவோடு செய்து வந்தால் சிவபெருமானின் திருவடியை அடையலாம். ஒரு நாமம், ஓர் உருவம் இல்லாத சிவனைத் தேவர்கள் ஆயிரமாயிரம் நாமங்களைச் சொல்லி வழிபடுவர். சிவனடியார்கள் அவனது திருவடியைத் தொழுது ஐந்தெழுத்தை ஓதி வழிபடுவர். இவ் வழிபாட்டையே சிவபெருமான் விரும்புவார். தாம் செய்யும் பணிகள் யாவும் அடிமைப் பணிகள் என்று நினைத்து வழிபடுவோர் சிவனின் திருவடியை அடைவார்கள் என்று திருமூலர் கூறுகிறார்.

## 13

**ப**கவத்கீதையில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் தன்னை அடையும் வழிகளை விபரமாகக் கூறுகிறார். அத்துடன் தன்னை அடைந்தவர்கள் பெறும் பயன்களையும் விபரமாகக் கூறுகிறார். அதுபோலத் திருமூலர் சிவபெருமானை அடையும் வழிகளையும், அவற்றால் உண்டாகும் பயன்களையும் திருமந்திரத்தில் கூறுகிறார். அடுத்து பகவத்கீதையின் பதினெட்டாவது அதிகாரமாக மோட்ச சந்நியாச யோகம் பற்றி ஆராய்வோம்.

“**அ**ர்ச்சுனா சந்நியாசம் பற்றியும் தியாகம் பற்றியும் கூறுகிறேன். காமிய கர்மங்களைத் துறப்பது சந்நியாசமாகும். எல்லாக் கர்மங்களையும் துறப்பது தியாகமாகும். காமிய கர்மம் என்பது தனது இவ்வுலக இன்பவாழ்விற்கும், மேலுலக இன்பவாழ்வுக்காகவும் செய்த கர்ம பயன்களைத் துறப்பதாகும். தியாகம் என்பது அனைத்துக் கர்மங்களின் பயன்களையும் துறப்பதாகும். பற்றுக்களை விட்டு, பயனையும் எதிர்பாராது செய்யப்படும் கர்மங்கள் சாத்வீகமானவை. இப்படியானவர்கள் துன்பமான வினைகளை வெறுக்கமாட்டார்கள். இன்பமான வினைகளை விரும்பமாட்டான். உயிர்கள் கர்மங்களை விட முடியாது. ஆனால் அதனால் வரும் பயன்களைத் துறக்கலாம். அப்படித் துறந்தவன் தியாகியாகிறான்.

**ஆ**சைவசப்பட்டு அல்லது அகங்காரத்துடன் செய்யப்படும் கர்மம் ராஜசமானது. ஒரு செயலைச் செய்வதால் உண்டாகும் விளைவுகளையும், தன்னைப் பற்றியும் எண்ணாது அகங்காரத்துடன்

செய்யப்படும் கர்மம் தாமசம் எனப்படுகிறது. பகவத்கீதையின் பல அதிகாரங்களில் பகவான் கிருஷ்ணர் முக்குணங்களைப் பற்றியே அடிக்கடி சொல்கிறார். இது திருமூலர் சொல்லும் மூவகையான ஆன்மாக்களின் செயலாகும். ஆணவ மலம் மட்டும் உடையவர்கள் விஞ்ஞான கலர் என்றும், ஆணவமும் கர்மமும் உள்ளோர் பிரளயாகலர் என்றும், ஆணவம், கர்மம், மாயை ஆகிய மும்மலங்களை உடையோர் சகலர் என்றும் கூறுகிறார். இரண்டும் வெவ்வேறு பெயர்களுடன் வெவ்வேறான சொற்களாலும் சொல்லப்படுகிறதே தவிர இரண்டும் சொல்பபவை ஒன்றுதான்.

**மோ**ட்ச சந்நியாச யோகத்தில் கூறப்பட்டவை யாவும் இதற்கு முன் கூறப்பட்ட அதிகாரங்களில் உள்ளன. இதுபோலத் திருமந்திரத்திலும் திருமூலர் சிவபெருமானின் அருள்நிலையைப் பற்றித் திரும்பத் திரும்பக் கூறுகிறார். ஆனால் வள்ளுவர் ஒருமுறை கூறியதை ஒருபோதும் திரும்பிச் சொல்லவில்லை. வள்ளுவரை போலத் திருமூலரும் சொன்னவற்றைச் சொல்லாமலும், ஒரிருபாடல்களில் மறைமுகமாகச் சிவபெருமானின் பெருமைகளைச் சொல்விட்டு மிகுதியைச் சொல்லிருந்தால் உலக விஞ்ஞான தொழில்நுட்ப நூல்களில் ஒன்றாகத் திருமந்திரம் விளங்கியிருக்கும்.

**ம**னித வாழ்வில் முக்கியமான பல விடயங்களைத் திருமூலர் சொல்லியிருக்கிறார். அதில் ஒன்று கருவுற்பத்தி சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் விஞ்ஞானரீதியாக மெஞ்ஞானத்தை எக்காலத்திற்கும் பொருந்தக் கூடிய வகையில் திருமூலர் கூறியுள்ளார். பகவத்கீதை இறைவனை அடையும் வழிகளை அதாவது தன்னை அடையும் வழிகளை மட்டும் கூறும் ஒரு வைணவ நூல். திருமந்திரம் இறைவனை அடையும் வழிகளுடன் மனிதர்களுக்கு உப யோகமாக மருத்துவத் தகவல்களையும் கூறுகிறது.

**ஒ**ருமுறை இராம கிருஷ்ண பரமகம்சரிடம் ஒரு வெள்ளைக்காரப் பெண் சென்று ‘‘சுவாமி, எனக்கு விதியின் மீது நம்பிக்கை இல்லை. ஆனால் இந்துக்கள் விதியைத் தான் எல்லாக் கர்மங்களுக்கும் நம்புகின்றனர். இது மூடநம்பிக்கை என்றே நான் கருதுகிறேன். அதனால் எனக்கு இதுபற்றிச் சரியான விளக்கம் தரவும்’’ என்று கேட்டாள். அதற்கு இராமகிருஷ்ணபரமகம்சர், ‘‘மகளே, நீ இன்று பட்டணத்தில் உள்ள பிரசவ ஆஸ்பத்திரிக்குச் சென்று அங்கு ஒருவாரத்தில் பிறந்த குழந்தைகளின் விபரங்களை எடுத்துவா’’ என்றார்.

**அ**தைக் கேட்ட அப்பெண் பட்டணத்தில் உள்ள பிரசவ ஆஸ்பத்திரிக்குச் சென்று கடந்த ஒரு வாரத்தில் பிறந்த குழந்தைகளின் விபரங்களைக் கேட்டுக் குறிப்பெடுத்துக் கொண்டு வந்து இராமகிருஷ்ண பரமகம்சரைத் தரிசித்தார். ‘‘மகளே நீ குறித்து வந்த தகவல்களைச் சொல்’’ என்றார்.

‘‘**சு**வாமி, கடந்த வாரம் இருபத்தொன்பது குழந்தைகள் பிறந்தன. ஒரு குழந்தைக்குக் கண் தெரியாது. ஒரு குழந்தையின் உதட்டில் ஒரு பகுதியைக் காணவில்லை. இரண்டு பிள்ளைகள் குறைபாடுகளுடன் பிறந்தமையால் கண்ணாடிப் பெட்டிக்குள் வைத்து வைத்தியம் செய்கிறார்கள்’’ என்றார்.

“**ம**களே, ஒரு குழந்தை தாயின் வயிற்றில் இருக்கும் போது பாவங்களைச் செய்ய முடியுமா..? பிறந்து ஒரு வருட காலத்துள்ப் பாவங்களைச் செய்ய முடியுமா..? அப்போ எப்படி அக் குழந்தைகள் குறைபாட்டுடன் பிறந்தன. ஓர் உயிர் பல பிறப்புக்களை எடுக்கிறது. ஒவ்வொரு பிறப்பிலும் செய்யப்படும் பாவங்களுக்கேற்பவே பிறப்புக்கள் அமையும். அதன்படி முற்பிறப்பில் செய்த பாவம்தான் மறுபிறப்பில் எடுக்கும் பிறவிக்குக் காரணமாக அமைகிறது. இதைத் தான் நாம் விதி என்கிறோம். இதை இப்போது நம்புகிறாயா?” என்று கேட்டார். அப்பெண் பூரண திருப்தியுடன் சென்றாள்.

**இ**து திருமந்திரத்தைப் படிக்காமையால் வந்த முடிவாகும். கரு உற்பத்தி என்ற பகுதியில் 436 ஆவது பாடலில் ஓர் உயிர் இறந்தபின் அச்சுமாறிப் பிறக்குமே தவிர அங்கவீனராகப் பிறக்காது என்கிறார். அச்சுமாறுதல் என்பது ஆண், பெண்ணாக மாறலாம். அதுபோலப் பெண் ஆணாக மாறலாம். மாணிக்கவாசக சுவாமிகள் சிவபுராணத்தில் கூறுவது போலப் புல்லாகிப் பூடாய்… என்ற திருவாசகப்படி கூறப்பட்ட ஒரு உடலாகக்கூடப் பிறக்கலாம். கரு கருப்பைக்குள் ஓம் வடிவில் தங்கியிருக்கும். எக்காலத்திலும் நீங்காத இன்பம் தருவது மக்கட்டபேறு மட்டும் தான். ஆனால் சிவனடியார்கள் கருவை ஒழித்தவராவர்.

**ம**க்கட்பேற்றை விரும்பும் கணவனும் மனைவியும் சிவபெருமானைப் பெருவிருப்புடன் நினைத்துத் தமக்கு ஆரோக்கியமும் அறிவும் மிக்க ஒரு குழந்தை வேண்டும் என்று சொல்லி வணங்கி, மிக்க மகிழ்வுடையவராக கூடிக்குலாவ வேண்டும். அப்பொழுது இருவரின் உள்ளத்திலும் பேரன்பு உண்டாகும். அதன்பின் கூடி மகிழ்ந்தால் வானத்தில் வீற்றிருக்கும் சிவபெருமான் ஆருயிர் கருவுட்புகுமாறு அருள்வர். அத்துடன் வினைக்கீடாக அவ்வாருயிருக்குள்ள குணநலப் பண்புகளையும் கருவுடன் சேர்ப்பர். அவ்வாறு தோன்றிய ஆருயிரைத் தாயின் உடலில் உள்ள பத்துக் காற்றுக்களும் வளர்த்தெடுக்கும்.

**உ**டலுக்கு உறுதியையும் அழகையும் தரும் பால் போன்ற வெண்ணிறமுடைய நெற்றியமிழ்தைப் பால்வண்ணமேனிப் பகலோன் எனப்படும். அது அழிந்து உடலை இனிமையாக்க உடலெங்கும் பரவி நிறைந்து நின்றது. மூலவெப்பத்தைத் தவிர்ப்பதற்காகச் சிவன் இவ்வமிழ்தை அமைத்தருளினான் என்று திருமூலர் கூறுகிறார். காம உணர்வு முழுவதும் நெற்றியில் பிறந்து உடலெங்கும் சிலிர்த்தோடி இருவரையும் இன்பப்படுத்துகிறது. இவ்வாறு ஒவ்வொரு பாடல்களிலும் கருவைப்பற்றி மிகவும் விரிவாகக் கூறுகிறார். கருவின் வளர்ச்சி அது வளரும்போது உண்டாகும் நோய்கள் அதைத் தீர்க்கும் வழிகள் என்பன விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

**க**ணவனும் மனைவியும் கூடுவதைப் பொறுத்தே குழந்தை பிறக்கிறது. முன்வினைப் பயன்படி உடல் மாறுமே தவிர நோய்கள், குறைபாடுகள் யாவும் கணவனும் மனைவியும் காலமறியாது உரியமுறைகளை அறியாது கூடுவதால் தான் உண்டாகிறது. உடலமைப்புப் பெரும்பாலும் தாயைப் போன்றதாகும். தந்தையின் அறிவே பிள்ளைக்கு உண்டாகும். இருவரும் சேர்ந்திருக்கையில் வலப்பால் மூச்சு மிகுந்து

சென்றால் ஆண்பிள்ளை பிறக்கும். இடப்பால் மூச்சு மிகுந்து சென்றால் பெண்பிள்ளை பிறக்கும். இரண்டு மூக்கின் வழியாகவும் மூச்சுச் சமமாகச் சென்றால் பிறப்பது அலியாகும்.

**இ**ருவரும் சேர்ந்திருக்குப்போது தாயாரின் வயிற்றில் மலம் அதிகமாக இருந்தால் பிறக்கும் பிள்ளை மந்தனாகப் பிறக்கும். சிறுநீர் அதிகமாக இருந்தால் பிறக்கும் பிள்ளை ஊமையாகப் பிறக்கும். மலமும் சலமும் அதிகமாகச் சேர்ந்திருந்தால் பிறக்கும் பிள்ளை குருடாகும். இது தாயின் நிலையைப் பொறுத்தே அமைகிறது. ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு திருமூலர் இன்றும் கூட விஞ்ஞானிகள் கூறாத பல விடயங்களைக் கூறியுள்ளார். இவற்றைவிட ஒரு வருடத்தில் $365\frac{1}{4}$ நாட்கள்என்றும், பூமி சூரியனைச் சுற்றுவதோடு தன்னையும் சுற்றுகிறது என்றும், பூமி வட்ட வடிவமானது என்றும் கூறியுள்ளார்.

**இ**வைதவிர உடலில் பத்து வகையான காற்றுக்கள் உண்டென்றும், அவை மாசடைவதால் தான் பெரும் பெரும் நோய்கான இரத்த அழுத்தம், சிறுநீரகத்தில் கல், இருதயத்தில் கொழுப்புப் படிவு, கண்புரை என்பன உண்டாகின்றன என்றும், அசுத்தக் காற்றை வெளியகற்றப் பிரணாயாமம் செய்தல் வேண்டும் என்றும் கூறுகிறார். இதை 2021ஆம் ஆண்டு ஆய்வு செய்து நிறுவிய பிரித்தானியாவைச் சேர்ந்த இரு விஞ்ஞானிகளுக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. பூமியைத் தவிர எந்த ஒரு கோளிலும் உயிர்கள் வாழமுடியாதென்றும், அங்கு மனிதர்கள் பயன்படுத்தக் கூடிய எவையும் இல்லை என்றும் கூறியுள்ளார். சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு சந்திரனுக்கு மனிதர்களை அனுப்பியதாகக் கூறும் அமெரிக்கா, ஆரம்பத்தில் சந்திரனில் பயிர்செய்யலாம் என்றும், அங்கு மனிதர்கள் வாழலாம் என்றும் கூறியது. ஐம்பது ஆண்டுகள் கழிந்தும் எதுவும் நடைபெறாததால் மேற்கொண்டு அமெரிக்கா ஆய்வைச் செய்யவில்லை.

**தி**ருமூலர் மக்களுக்குத் தேவையான அத்தனை விடயங்களையும் சிவனை மையப்படுத்தி ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கூறிவிட்டார். இனிக் கூற எதுவுமில்லை என்பது திருமந்திரத்தைப் படிப்போர் புரிந்து கொள்வர். பகவத்கீதை ஆத்மீகம் சம்பந்தமாகக் கூறுகிறதே தவிர மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கான கருத்துக்கள் எதையும் கூறவில்லை. சமயங்கள் இறை உணர்வை உண்டாக்குவதோடு மனிதமேம்பாடு பற்றியும் கூறுதல் வேண்டும். ஆரோக்கியமான கரு உற்பத்தியானால் தான் மனிதமேம்பாடு உயரும். மனிதர்கள் மகிழ்வுடன் நோய்நொடியின்றி வாழ்வர். இதை உணர்ந்த வள்ளுவர் 619 ஆவது குறளில் இவ்வாறு கூறுகிறார். தெய்வத்தால் ஆகாது. ஏனென்றால் எத்தனையோ கோடி மனிதர்கள் உலகெங்கும் வாழ்கின்றனர். ஒருவர் தனக்குத் தேவையானவற்றைக் கடவுளிடம் கேட்டுப் பெற்றவுடன் வேறு ஒன்றைக் கேட்பர். இப்படியே கோடிக்கணக்கான மக்களும் கேட்டுக் கொண்டே இருந்தால் உலகம் வாழுமா. கேட்பவை நிறைவேறுமா?".

**ஆ**தனால் தான் வள்ளுவர் ஒழுக்கமாக வாழ்ந்து பிறர்க்குதவி செய்து வாழ்பவர்களின் முயற்சிக்கு வெற்றி பெறக் கடவுள் துணையாக இருப்பார் என்று கூறியுள்ளார். தீயவர்கள் அடிக்கடி கேட்பார்கள். தீமையானவற்றையே கேட்பார்கள். அவர்களுக்கெல்லாம் ஓயாது கொடுத்துக் கொண்டிருந்தால் உலகின்

நிலை என்னாகும்? இக்குறளுக்கு உரையாசிரியர்கள், ‘‘தெய்வத்தின் துணையைக் கொண்டு ஒரு செயலில் வெற்றிபெற முடியாதநிலை ஏற்பட்டாலும் ஒருவர் தனது உடலை வருத்தி மேற்கொண்ட முயற்சியால் அச்செயலில் வெற்றி பெறலாம்’’ என்றும், ‘‘ஊழின் காரணத்தால் ஒரு செயல் முடியாமல் போகுமாயினும் தனது உடலை வருத்தி முயற்சி செய்தால் முயற்சிக்கான கூலி கிடைக்கும் என்றும் எழுதியுள்ளனர்.

**தி**ருமூலரும், பகவான் கிருஷ்ணரும் கடவுளின் கிருபை இருந்தால் எச்செயலிலும் வெற்றி பெறலாம் என்று கூறியுள்ளனர். இது நிறைந்த பக்தியை உடையவர்களுக்குப் பொருந்தும். ஏனையோர்க்குப் பொருந்தாது. கடவுள் எல்லா வகையிலும் எல்லோருக்கும் உதவி செய்வாரென எந்தச் சமயவேதங்களும் கூறவில்லை. இயல்பாக நாம் சிந்தித்தோமானால் இவ்வுரைகள் பழையானவை என்று தெரியும். தெய்வங்கள் முயற்சிக்கு அருள் செய்யுமே தவிர முயற்சி செய்யாதவர்களுக்கு உதவி செய்யாது. கேட்டவற்றையெல்லாம் கடவுள் கொடுத்துக் கொண்டே இருந்தால் பூமி தாங்குமா. கேட்டக்கூடாதவற்றையெல்லாம் கேட்டுப் பூமியை நிரப்பி விடுவர்.

**ப**கவத்கீதை கடவுளைப் பற்றியும் அவரை வணங்குவோரைப் பற்றியும் தான் கூறுகிறது. திருமந்திரம் மக்களின் நடைமுறை வாழ்க்கைகுரிய தத்துவங்கைளையும், மக்களின் பிரச்சினைகளையும் கூறி அதற்குத் தீர்வும் கூறுகிறது. திருக்குறள் மக்கள் ஒழுக்கமாக வாழவேண்டும் என்று கூறுகிறது. ஒரு பெண் காதலனைப் பிரிந்தமையால் படும் வேதனைகளை காமத்துப்பாலில் கூறுகிறார். அதில் உள்ள இருநூற்று ஐம்பது குறள்களும் காமத்தைப்பற்றி விதந்து கூறுவதோடு ஒரு காம உணர்வால் படும் துன்பங்களைப் பெரிதாகக் கூறுகின்றன. ஒரு மனிதனுக்கு இயல்பாக வருவது காம உணர்வு. அவ்வுணர்வைத் தீர்க்க வேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார்.

**க**ரு நல்ல முறையில் உருவானால் தான் நல்லொழுக்கமுள்ள ஆரோக்கியமான நல்ல பிள்ளைகள் உருவாகுவார்கள் என்று திருமந்திரம் கூறி அதற்கான வழிவகைகளையும் மிகச் சிறப்பாகக் கூறுகிறது. பிள்ளை பிறந்தபின்பு அதை நல்வழிப்படுத்த வேண்டும் என்று திருக்குறள் கூறுகிறது. வாழ்க்கைத் தத்துவங்கள் அனைத்தையும் மிகவும் சிறப்பாகக் கூறிய திருக்குறள் மருந்து என்ற அதிகாரத்தில் மருத்துவரிடம் செல்லாது இயற்கையான முறையில் நோயிலிருந்து விடுபடும் வழியைக் கூறுகிறது. மருத்துவர்கள் வாதம், பித்தம், சிலேத்துமம் ஆகிய மூன்றும் கூடினாலும், குறைந்தாலும் நோய்கள் வரும். முன்னர் உண்ட உணவு சமித்த பின்பே அடுத்தவேளை உணவை அளவோடு உண்ண வேண்டும். இதுதான் நோய்களிலிருந்து உடம்பைக் காக்கும் வழி. பசிக்காது உண்ணலாகாது. ஒவ்வாத உணவு வகைகளை உண்ணக் கூடாது. அளவுக்கதிகமாகவும் உண்ணக் கூடாது. நோய் இன்னது என அறிந்து அது ஏற்பட்டமைக்கான காரணத்தையும் அறிந்து உடல் நிலைக்கேற்றவாறு செய்வதே சிறந்த மருத்துவமாகும். மருத்துவன் நோயாளியின் வயது, நோயின் தன்மை, உடலின் தன்மை, நோய் உண்டான காலம் என்பவற்றை அறிந்த பின்பே மருந்து கொடுக்க வேண்டும். நோயாளி, மருத்துவன், நோயாளியைப் பாராமரிப்பவன் என மருந்துஎன மருத்துவ முறை நான்காகும்.

**மூ**ன்று நூல்களும் ஒரு விடயத்தை மட்டும் கருவாகக் கொண்டுள்ளன. அது கடவுளை அடைதலே. பகவத்கீதை கடவுளை அடைதலைத் தவிர எதையும் கூறவில்லை. கடவுளை அடையும் வழிகளைப்பற்றி ஒவ்வொரு அத்தியாயத்திலும் கூறுவது ஒன்றையே குறிக்கிறது. அதைத்தவிர வேறு எதையும் கூறவில்லை. திருமந்திரம் கடவுளை அடைவதையே குறிக்கோளாகக் கொண்டாலும், வேறுபல முக்கியமான விடயங்களை மிகவும் விரிவாகக் கூறுகிறது. உதாரணமாக கரு உற்பத்தி என்ற பகுதியில் குடும்ப உறவு பற்றி மிகவும் விளக்கமாக வேறெந்த நூல்களும் கூறாதளவிற்குக் கூறுகிறது. அது காம சாத்திரத்தைவிடச் சிறப்பாகக் கூறுகிறது. காமத்துப்பாலில் வள்ளுவர் காமநோயால் பெண்கள்படும் துன்பங்களை மட்டும் விரிவாகக் கூறுகிறார். சிவனடியார்களுக்குத் தீட்டு துடக்கு எதுவும் இல்லை என்றும் திருமூலர் கூறுகிறார்.

**தி**ருமந்திரம் கூறியவற்றிலிருந்து சில பகுதிகளை நீக்கிவிட்டுத் திருமந்திரம் சொல்வதை அப்படியே வள்ளுவர் கூறியுள்ளார். மூன்று நூல்களையும் ஒப்பீடு செய்து ஆராய்ந்தால் மேற்கூறியதை மட்டும் தான் கூறமுடியும். எல்லாவகையாலும் பல சிறப்புக்களைக் கொண்ட நூல் திருமந்திரம். திருமந்திரம் தான் பின்வந்த சைவசித்தாந்த நூல்களுக்கெல்லாம் மூலமாகும்.